
KALKI
19-5-85
ரூ-1.50
கல்கி



**இலவசம்**

**பளபளக்கும் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் கிண்ணம்**

**புதிய**

# பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு

இரண்டு டின்கள் வாங்கும்போது

புதிய ஃபாரெக்ஸ் அதிக சுவையானது
புதிய ஃபாரெக்ஸ் அதிக முழுமையானது

நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும்
உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.




இலவசப்பு தேர்ந்தெடுத்த சில ஊர்களில் மட்டும்
விசேஷ டின்களின்மீது ஸ்டாக் உள்ளவரை வழங்கப்படும்.

உடல் நலத்தின் உறைவிடம் — **கிளாக்ஸோ**

CLARION B/GX/5/203 TML

## துணுக்கு

'அலவன்ஸ் பலவகை. அதில் இதுவும் ஒரு வகை. அதாவது 'வெங்காய அலவன்ஸ்'. சிட்னி துறை முகத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வெங்காய வாசனை என்றால் அறவே பிடிக்காது. அதனால் கப்பலில் இருக்கும் வெங்காய மூட்டைகளை இறக்க வேண்டுமானால் 'வெங்காய அலவன்ஸ்' கொடுக்க வேண்டும் என்று போராடி வெற்றியும் பெற்று விட்டார்கள்.

— கே. ஜி. எஃப். பழனிச்சாமி.




## துணுக்கு



''மூன்றும் முறை முகத்தில் அறைந்தால் புத்தருக்கும் கோபம் வரும்'' (ஜப்பானிய பழமொழி).

''தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக் கூடம்'' (அமெரிக்கப் பழமொழி)

''தகுதியில்லாதவனை புகழ்தல், ஒரு கள்ளச் சந்தையில் ஒரு பொருளை விற்பதற்குச் சமம். (சீனப் பழமொழி)

(தொகுத்தவர் இராம. இராஜாங்கம் மதுரை.)

டைரக்டர்: ''அந்தத் திருடனை நூற்றுக் கணக்கான பேர் துரத்தறாங்க. அப்போ அவன் பை நிறைய இருக்கிற சில்லறைக் காசுகளை வாரி வாரி இறைக்கிறான். உடனே துரத்தி வந்தவங்க சில்லறையைப் பொறுக்க ஆரம்பிச்சுடறாங்க... அவன் தப்பிச்சுக்கிறான்... எப்படிங்க இந்தக் காட்சி...?''

தயாரிப்பாளர்: ''அந்த அளவுக்கு நமக்கு வசதிப்படாதுங்க. படத்தை நிறுத்திடலாமுங்க!''

ரத்தினவேல்



திருக்கச்சி நம்பிகளிடம் கைங்கர்யம் புரிந்து வந்த சீடன் ஒருவன் ஒரு நாள் அவரைக் கேட்டான்:

''சுவாமி! அடியேனுக்கு மோக்ஷம் கிடைக்குமா?''

''இதில் சந்தேகம் என்ன? பாகவத கைங்கர்யம் செய்கிற உனக்கு நிச்சயம் மோக்ஷம் உண்டு.''

சீடன் சிந்தை மகிழ்ந்து தொழுது வணங்கினான்.

''உன் விஷயம் மட்டும் கேட்டுத் தெரிந்து கொண்டாயே, என் விஷயம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா?'' என்றார் நம்பிகள்.

''அது தெரிந்த விஷயம் தானே? தேவரீர் எந்த பாகவதனிடம் கைங்கர்யம் செய்தீர்? பாகவத கைங்கர்யம் இன்றி மோக்ஷத்திற்கு மார்க்கமுண்டா?'' என்றான் சீடன்.

திருக்கச்சி நம்பிகள் திகைத்தார். பிறகு தெளிந்தார். பெரிய நம்பியிடம் சென்று பாகவத கைங்கர்யத்தைத் தொடர்ந்தார்.

— ஆர். சுப்பாராவ்

# ஷாக் அளிக்கும்

# மின்வாரிய விவகாரங்கள்

* தினசரி இரண்டு மணி நேர மின்சார வெட்டு.

* "தமிழ்நாடு மின்சார வாரியம் எங்களுக்கு 88 கோடி ரூபாய் பாக்கி" — நெய்வேலி லிக்னைட் தொழிற்சாலை தலைவர்.

* எண்ணூர் மின் நிலையத்தில் விபத்து— ஆறு பேர் சாவு!

* வாரியத்துக்கு ஆள் எடுக்கும் திட்டம் ஒத்தி வைப்பு.

—இப்படி ஏதாவது ஒன்று மாற்றி ஒன்றாக தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பற்றிய செய்திகள் நாளிதழ்களில் அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 90,000 பேர் வேலை செய்யும் இந்த வாரியத்தின் மூலதனம் சுமார் 700 கோடி. இந்த வாரியத்தில் என்ன என்ன கோளாறு?

### ஊனமடைந்த உற்பத்தி

தேசிய அளவில் பார்த்தாலே எவ்வளவு மின் உற்பத்தி செய்ய திட்டமிட்டார்களோ, அதில் 47.9 சதவீதம் தான் உற்பத்தி செய்ய முடிகிறது. தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டோமானால் 18 நீர்மின் நிலையங்கள் இருக்கின்றன. தவிர தூத்துக்குடி, எண்ணூர், நெய்வேலி பேஸின் பிரிட்ஜ் அனல் மின் நிலையங்கள். மற்றும் கல்பாக்கம் அணுமின் நிலையம். இவை திட்டப்படி தயாரிக்க வேண்டிய மின்சாரத்தின் அளவு 3329 மெகாவாட், நம்முடைய தேவையோ 2400 மெகாவாட்தான்! ஆனால் தயாரிப்பது 1400 மெகாவாட்! இதிலும் வேடிக்கை (அல்லது வேதனை?) உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து உபயோகத்திற்கு சென்று அடைவதற்குள் விநியோகத்திலேயே 18 சதவீதம் வீணாக (காணாமல்?) போய் விடுகிறது. இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும்; நாம் ஏன் அடிக்கடி பவர் கட்டால் பாடாய்ப்படுத்தப் படுகிறோம் என்பது.

ஏன், இந்த அளவு உற்பத்தி குறைவு என்றால் அதற்கு வாரியம் ஆயிரத்தெட்டு நொண்டிச் சாக்குகள் சொல்லும். அனல் மின் நிலையத்துக்கு வேண்டிய நிலக்கரி சரியாக வடமாநிலங்களிலிருந்து வராதது உண்மையிலேயே ஒரு தடைதான். நீர்மின் நிலையங்களுக்கு மழையில்லாவிட்டால் 'அம்போ' தான். ஆனால் அடிக்கடி மின் உற்பத்திச் சாதனங்கள் பாழாகி விடுவதால் மின் உற்பத்தி பாதிக்கப்படுகிறதே! இதற்கு யார் பொறுப்பு?




பம்பு செட்டுகளுக்கு இலவச, சலுகை மின் விநியோகத்தினால் பேரிழப்பு.



* குடிசைகளுக்கு இலவச மின்சாரம் முறைகேடாகப் பயனாகிறது.

சரி, 'ட்ரான்ஸ்மிஷன் லாஸ்' என்று 18 சதவீதம் வீணாகப் போகிறதே. இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஒரு அனுபவம் உள்ள என்ஜினியர் சொன்னார்: "சரியான மேற்பார்வை, பராமரிப்பு இல்லை. மின்சாரத்தை விநியோகிக்கும் துணை மின் நிலையங்கள் மிகக் குறைந்த அளவில் இருப்பது, மின்சாரம் திருடப்படுவது போன்றவைதான் இந்த 'ட்ரான்ஸ்மிஷன் லாஸ்'ஸுக்குக் காரணங்கள். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நமது உற்பத்தி கிட்டத்தட்ட 2000 மெகா வாட்டாக இருந்தது. அப்போது 1,07,000 ஊழியர்கள் இருந்தார்கள். ஆனால் தற்போது 87,000 ஊழியர்களே இருக்கிறார்கள். அப்போது 15,000 கிராமங்களுக்கு தான் மின் வசதி இருந்தது. இப்போது 62,000 கிராமங்களுக்கு மின் வசதி இருக்கிறது. 2½ லட்சம் பம்பு செட்டுகளுக்குத்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது 10 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இவைகளையெல்லாம் மேற்பார்வையிட, சோதனை செய்ய, ஆட்கள் தான் இல்லை. முன்பெல்லாம் ஒரு ஒயர்மேன் 500 மின் இணைப்புகளை பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது 2000 மின் இணைப்புகளை அவன் பார்க்க வேண்டும். நிலைமை இப்படியிருந்தால் எப்படி கண்காணிப்பது? அவனவன் இஷ்டத்துக்கு மின்சாரத்தை உபயோகித்துக் கொண்டு இருக்கிறான். நகர்ப்புறங்களில் இருக்கும் மக்கள்தான் மீட்டர் வைத்துக் கொண்டு ஒழுங்காகப் பணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்."



### சாதனங்கள் பழுதாவது ஏன்?

அடிக்கடி செய்தித்தாள்களில் அடிபடுவது மின் உற்பத்தி சாதனம் பாழாகி விட்டதால் மின் உற்பத்தி தடைப்பட்டது என்று. ஏன் இப்படி நேர்கிறது? தூத்துக்குடியை எடுத்துக் கொண்டால், நிலக்கரியிலுள்ள கல், மண், இவற்றால் சாதனங்கள் சேதம் அடைகின்றன. மின்வாரியத்தைப் பொறுத்தவரை எண்ணூர் ஒரு நோய்வாய்ப்பட்ட 'யூனிட்'தான். காரணம் கட்டுமான நிலையிலேயே சில கோளாறுகள். டிசைனே தவறு. மேலும்

* மின்வாரியம்—தலைமைச் செயலகம்.



இதற்கென மேல்நாட்டிலிருந்து வந்த சாதனங்கள் ஏ. ஸி. அறையில் வைக்கப் படவேண்டியவை. ஆனால் திறந்த வெளியில் போடப்பட்டன. இப்படிப்பட்ட அஜாக்கிரதையான போக்குகளால்தான் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன. சமீபத்தில் கூட எண்ணெய் குழாய் வெடித்ததில் 6 பேர் மரணமடைந்தார்கள். இந்த யூனிட்டுக்கு மற்றொரு பிரச்னை மின் உற்பத்தி சாதனங்களைக் குளிர்விக்கத் தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை.

சென்னையில் உள்ள மற்றொரு மின்சார நிலையம் பேஸின் பிரிட்ஜ். 90 மெகாவாட் உற்பத்தி செய்யத் தகுதியுள்ள இந்த நிலையம் தற்போது 30 மெகாவாட்தான் உற்பத்தி செய்கிறது. வாரியத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சொன்னார்: ''இந்த நிலையத்தின் 90 மெகாவாட் சக்தியையும் முழுமையாக உற்பத்தி செய்தால் பற்றாக்குறையில் வாழும் நமக்கு மிக உபயோகமாக இருக்கும். ஆனால் நகரின் நடுவில் இருப்பதால் சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது என்றும், அதனால் இதனை மூடிவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள். ஆனால் சுற்றுப்புறச் சூழலின் தூய்மையை இது கெடுக்காமல் தடுக்க வசதி இருக்கிறது. டெல்லியில் இந்திரபிரஸ்தா மின் நிலையம் இதேபோல் நகரின் நடுவில் தான் இருக்கிறது. ஆனால் ஏஷியாட் விளையாட்டின் போது நவீன சாதனங்களைக் கொண்டு சுற்றுப்புற சூழல் கெடுவதை 90 சதவீதம் கட்டுப்படுத்தினார்கள். அதைப் போல் இங்கும் செய்யலாமே? உற்பத்தியும் பெருகும். தொழிலாளர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.''

## ஊழலுக்காக ஒப்பந்தங்கள்

எந்த வேலை என்றாலும் காண்ட்ராக்டில் விடுவது என்பது இப்போது வாரியத்தைப் பிடித்துள்ள ஒரு வியாதி. வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக உள்ள இந்தச் சூழ்நிலையில் கிட்டத்தட்ட 25,000 ஹெல்பர்கள் ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மின் கம்பம் நடுவது, ஆர். சி. சி. கம்பம் தயாரிப்பது, நிலக்கரியைக் கையாள்வது, அனல் மின் நிலையங்களில் சாம்பலை அள்ளிக் கொட்டுவது, மெஷின்களைத் துடைப்பது சர்வீஸ் செய்வது, பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பது போன்ற எல்லா வேலைகளுக்கும் தற்போது 'காண்ட்ராக்ட்'தான்! ஹெல்பர்கள் ஸ்தானங்களைப் பூர்த்தி செய்தால் 75 சதவீத வேலையை அவர்களே கவனித்துக் கொள்வார்கள். காண்ட்ராக்ட் என்று வரும் போது ஒழுங்கீனங்கள் வராமல் இருக்குமா? எந்த ஒப்பந்தமானாலும் அதிகாரிகளுக்குச் சதவீதக் கணக்குத்தான். கீழ்நிலையிலுள்ள ஸ்தானங்களைப் பூர்த்தி செய்யாமல் வைத்திருக்கும் இந்த வாரியம், மேல் நிலைகளில் பதவிகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. நான்கு தலைமைப் பொறியாளர்கள், இருந்த இடத்தில் இன்று 20 தலைமைப் பொறியாளர்கள்! 16 மேற்பார்வைப் பொறியாளர்கள் இருந்த இடத்தில் இன்று 50 மேற்பார்வைப் பொறியாளர்கள்! ஏன் இந்தப் பாரபட்சம்?

சமீபத்தில் 1000 மீட்டர் பார்ப்பவர்களைத் தேர்ந்தெடுக்க 'இண்டர்வ்யூ' நடந்தது. ஆனால் வேலைக்கு ஆர்டர் அனுப்பும் சமயத்தில், ''ஆட்கள் எடுக்கத் தேவையில்லை, தற்போது வேண்டாம்'' என்று வாரியத் தலைமை கூறி விட்டது: ஏற்கெனவே இரண்டு மாதத்துக்கு அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறைதான் மீட்டர் கணக்குப் பார்க்க வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வேறு இருக்கிறது. வேலை வாய்ப்பை எப்படிப் பெருக்கலாம் என்று திட்டம் போடும் அரசுகள் உண்டு. ஆனால் நமது அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த வாரியம் எவ்வளவு பேரை வீட்டுக்குஅனுப்பலாம் என்பதிலேயே குறியாக இருக்கிறது. 87,000 ஊழியர் உள்ள இந்த வாரியத்தில் 60,000 பேர்களே போதும் என்று வாரிய அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். அதனாலேயே, ஊழியர் யாராவது ஓய்வு பெற்றாலோ அல்லது, மரணம் அடைந்தாலோ அந்த இடத்தை நிரப்புவதில்லை. இவ்வாறாயின் மின் நிலையங்களையும், லைன்களையும் பராமரிப்பது எப்படி? பல சில்லறை வேலைகளுக்குக் கூட 'சில்லறை'க்கு ஆசைப்பட்டு காண்ட்ராக்டுக்கு விடுவதை வாரியம் நிறுத்தினால் 23 கோடி ரூபாய் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம்.

## டெண்டர் கொள்ளைகள்

சிறிய வேலைகளுக்கு ஒப்பந்தம் விட்டு அதிகாரிகள் கொள்ளையடிப்பது ஒரு பக்கம் என்றால், பெரிய வேலைகளை டெண்டர்விட்டு 'கொள்ளையடிப்பது அரசியல்வாதிகள் செய்யும் வேலை. இந்த வாரியத்தின் சக்தி வாய்ந்த ஒரு யூனியன் தலைவரிடம் பேசும் போது அவர் சொன்னார்: ''தூத்துக்குடியில் பெல் நிறுவனத்துக்கு ஒரு கோடி ரூபாய் டெண்டர் விட்டது வாரியம். ஆனால் 'பெல்' அதை பல துணை ஒப்பந்தங்களாகப் பிரித்து விட்டது. இதனால், பல நிலைகளில் பணம்

''வாழ்வதில் நான் என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் முறையாக வாழ்வதில், நான் என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டுள்ளேன்.''

— மகா அலெக்ஸாண்டர்.

தகவல்: அருண்மணி



# தாய்மார்கள் கவனத்திற்கு

உங்கள் கணவன்மார்கள் தர்மத்திற்கு விரோதமாக செலவு செய்கின்றார்களா?
அதைக் குறைக்க கீழ்க்கண்ட விதம் முயற்சி செய்து பாருங்கள்.

1. கணவனிடம் பொறுமையாகவும், அன்பாகவும் இருங்கள்.
2. தினசரி உங்களுடைய இஷ்ட தேவதையை ஸ்தோத்திரம் மூலம் தியானம் செய்யுங்கள்.
3. ஐந்து முகம் கொண்ட விளக்கில் நல்லெண்ணெயைக் கொண்டு விளக்கேற்றுங்கள். கடலெண்ணெயைப் பயன்படுத்தக் கூடாது.
4. கடவுளை தியானம் செய்ய ஆரம்பத்திலிருந்து உங்களுடைய நற்காலம் ஆரம்பமாகிவிடும்.
5. காலையில் வாசலில் அரிசிமாவினால் கோலம் போடவும் எறும்புகளுக்கு உணவாக இருக்கும்.
6. பசுக்களுக்கு கீரை, புல், முதலியன கொடுங்கள். கோடை காலத்தில் தண்ணீர் வையுங்கள்.
7. உணவிற்கு முன் காக்காய்க்கு சாதம் வையுங்கள்
8. சாப்பாட்டிற்குப் பிறகு நாய்க்கு சிறிது உணவு அளியுங்கள்.

கீழ்க்கண்ட வகைகள் தடையில்லாமல் நடக்க (இறைவனிடம் தோன்றிய விநாயக மூர்த்தியை ஸ்தோத்திரம் செய்தால் தடைகளை நீக்கி வெற்றி வடையச் செய்வார். தெய்வங்கள் வெறும் சக்திகள் மட்டும் அல்ல. அவைகளுக்கு உருவம் உண்டு (ஸ்ரீ அரவிந்த மஹரிஷி) மனிதர்களிடம் உள்ள அசுர சக்தியை நீக்கவல்ல கார்த்திகேயனை தினசரி ஸ்தோத்திரம் செய்யுங்கள். மயில் வெற்றியைக் குறிக்கும் பறவை. கார்த்திகேயன் தெய்வ சக்திகளின் தளபதி (தேவசேனாபதி) (ஸ்ரீ அரவிந்த மகரிஷி)

1. அவசியம் வீட்டில் சிராத்தம் செய்யுங்கள். அன்று எவ்வளவு பேருக்கு முடியுமோ அவ்வளவு அன்னம் அளியுங்கள்.
2. நாம் எதை செய்கின்றோமோ திரும்ப அதிகம் பெறுகின்றோம் (பகவத்கீதை)
3. ஆகையால் தினசரி எத்தனைக்கு எத்தனை ஜீவன்களை சந்தோஷப் படுத்துகின்றீர்களோ அவ்வளவுக்கு கணவன் செய்யும் அதர்ம செலவு குறைந்து குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். மேலும் இன்பம் அடைய கிராண்ட் ஸ்வீட்ஸ் அண்டு ஸ்நாக்ஸில் பண்டங்களை வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யுங்கள்.

**இனிப்புகள்:** குங்குமப்பூ ஹல்வா, குங்குமப்பூ ஜாங்கிரி, குங்குமப்பூ லட்டு, குங்குமப்பூ பாதம்ஹல்வா.

**காரம்:** கைமுறுக்கு, தட்டை, தேன்குழல், சீடை, ஸ்பெஷல் மிக்ஸ்சர், வெஜிடபிள் சமோசா.

**திருமணவைபவங்களுக்கு:** பருப்புத்தேங்காய், அதிரசம், சீர்முறுக்கு, முள்ளுத் தேன்குழல், திரட்டுப்பால் ஆகியவை தயாரித்துத் தருகின்றோம்.

## தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின்ரோடு, காந்திநகர், அடையாறு,

சென்னை - 20 போன்: 412557

கிளை: காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, தேனாம்பேட்டை, சென்னை - 18.

பிரிக்கப்பட்டு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வேலை, 40, 50 லட்ச ரூபாயில் முடிக்கப்பட்டு, மீதி சுருட்டப்பட்டு விட்டது. அந்த வேலையின் லட்சணம் எப்படியிருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்!''

இதேபோல் கீழ்மேட்டூர் மின் திட்டத்தின் பெரும் பகுதியை கட்டி முடிக்க உலக அளவில் டெண்டர் கோரப்பட்டது. அதிக அளவில், ரேட் குறிப்பிட்ட ஒரு ஜப்பானிய நிறுவனத்துக்கு டெண்டர் தரப்பட்டது.

காடம்பாறை நீர்மின் திட்டத்தில், நவீன முறையில் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிட்டார்கள். ஏற்கெனவே மின்சக்திக்கு உபயோகப்படுத்தப்பட்ட தண்ணீரை மறுபடியும் 'பம்ப்' செய்து உயரத்துக்குக் கொண்டு போய் மீண்டும் மின்சக்திக்கு உபயோகிப்பது இந்தத் திட்டம். ஒரு பம்பாய் நிறுவனத்திற்கு டெண்டர் விடப்பட்டது.

மின்வாரிய ஊழியர்கள் பலரிடம் பேசிய போது தற்போது வாரியத் தலைவராக இருப்பவரைப் பற்றி உயர்வாகக் குறிப்பிட்டார்கள். ''பண ஆசை இல்லாத ஆசாமி சார் இவர். அதனால்தான் முதல்வர் இவரை வைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் இவரிடம் உள்ள நிர்வாக குணம் தொழிலாளர்களையும் ஊழியர்களையும் சதா விரட்டிக் கொண்டே இருப்பதுதான். ஒழுங்கு, கட்டுப்பாடு என்று ஏக அதிகாரம் செய்கிறார்.''

## வருவாய்க்கு வழிகள்

வாரியத்தின் ஆண்டு வருமானம் சுமார் 400 கோடி ரூபாய். இதில் கிட்டத்தட்ட 120 கோடி ரூபாய் நிர்வாகச் செலவுகளுக்குப் போகிறது. ஆனால் இது தவிர்க்க முடியாதது.

அலிகாரைச் சேர்ந்த ஜகதீஷ் சந்தர்
காஷ்மீரிலுள்ள வைஷ்ணவி தேவி கோவி
லுக்கு யாத்திரை போக புது முறையைக்
கையாண்டார். இவர் அலிகாரிலிருந்து
ஊர்ந்து நடந்து அந்தக் கோவிலுக்குச்
சென்று கொண்டிருக்கிறார். 1400 கி.
மீட்டர் ஊர்ந்து செல்ல பதினைந்து மாதங்
கள் எடுத்துக் கொண்டிருக்கிறார். இவ்
வளவு நேரம் அவர் அந்தக் கோவிலுக்குப்
போயிருப்பார்.

''சண்டே'' பத்திரிகையிலிருந்து.

— பத்மினி கிருஷ்ணன்




மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் மிகவும் குறைவு. வாரியத்தின் வருவாயைப் பெருக்க பல வழிகள் இருந்தாலும் அரசியல்வாதிகள் வோட்டுக்காகச் செயல்படுத்தும் திட்டங்களால் வருவாய் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக விவசாயிகளின் பம்பு செட்டிற்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம். 10 லட்சம் பம்பு செட்டுகளில் 2½ லட்சம் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. இதுதவிர மீதியுள்ள பம்பு செட்டுகளில் ஒரு குதிரை சக்தி கொண்ட (H. P.) மோட்டாருக்கு வருடத்திற்கு 75 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இந்த முறையில் 110 கோடி வருவாயை வாரியம் இழந்து கொண்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மின் கட்டண சலுகைகளில் 68 கோடி ரூபாயை வாரியம் இழந்து கொண்டிருக்கிறது. மற்றொரு வகை வருவாய் இழப்பு குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதன் மூலம் ஏற்படுகிறது. 40 வாட் பல்பு தான் உபயோகப்படுத்த வேண்டும் என்று கட்டுப்பாடு. ஆனால் நடப்பது வேறு. 'அடாப்டர்' போட்டு மின் விசிறி, ரேடியோ, டீ.வி. என்று பலவற்றுக்கும் மின்சாரத்தை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கண்காணிக்க ஆட்கள் போதாது என்பது ஒரு குறையானாலும், கண்டு கொண்டால் நடவடிக்கை எடுத்தால், ஆளும் கட்சியின் ஆட்களால் ஆபத்துதான். இதுபோன்ற நிலைமை இருப்பதால் தான் நெய்வேலி நிறுவனத்துக்குக் கொடுக்க வேண்டிய கடன் தொகை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போகிறது. பெரிய நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய கட்டண பாக்கியை வசூலிக்க வாரியம் மிகவும் தயங்குகிறது. அல்லது அரசியல்வாதிகள் தலையீட்டினால் தடுமாறுகிறது. உதாரணம் மேட்டூர் மால்கோ நிறுவனம் ஒன்பது கோடி ரூபாய் பாக்கி. எப்போது வசூலாகப் போகிறதோ?

## உலக வங்கியின் வலையில்


உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் போன்ற ஸ்தாபனங்களிலிருந்து கடன் பெறுவது என்பதும், பிறகு அவைகளின் நிர்ப்பந்தத்துக்கும் நிபந்தனைக்கும் கட்டுப்படுவது என்பதும் நமது அரசுகளுக்கு பழகி விட்டது. வாரியமும் உலக வங்கியிடம் கிராமப்புற மின் மயத்திட்டத்துக்குக் கடன் வாங்கியிருக்கிறது. ஏற்கெனவே வருவாய் இழப்பினாலும், சரியான பராமரிப்பு இல்லாமலும், பற்றாக்குறை மின்சார உற்பத்தியினாலும் பொதுமக்களின் கண்டனத்துக்குள்ளாகியிருக்கும் நமது மின் வாரியம் உலக வங்கியிடம் சிக்கி இன்னும் என்ன பாடு படப் போகிறதோ?

கட்டுரை: ப்ரியன்.

புகைப்படங்கள்: சுபா எட்வர்ட்.


இலங்கை அரசு
டாக்காவில் தென் ஆசிய பிராந்திய மாநாடு
ஈழத் தமிழர்
மசானுக்கு மிச்சமா நசுக்கிக் கொல்றதா சொல்றீங்களோ, உங்களோட பேசமாட்டேன், பே!


பல்லவன், திருவள்ளுவர் போக்குவரத்துக்கு 425 புதிய பஸ்கள் - செய்தி
பழைய பஸ் எனக்கு 199
புது எனக்கு 100 பஸ் போதும்!
பழைய பஸ் 200 எனக்கு!
புது 150 பஸ் தாங்க!
ஆளும் கட்சியினர்


பிற மாநிலத்தவர்
மகாராஷ்டிரத்தின் முன்னேற்றம்
பாட்டீல்
ம்..ம். தள்ளுங்க! தள்ளுங்க!...
பால் தாக்கரே
நில்லுங்க.. ஏறுகிறங்க..
மராத்தியர்கள் மட்டும்




# கல்கி

1985 மே 19
மலர் 43 இதழ் 42
குரோதன வைகாசி 6




# நன்றாகச் சொன்னார் நம்பூதிரிபாடு!

உண்மைகள் கசப்பானவை. உண்மை பேசுவோர் மீது கோபம் வருவதும் இயற்கை. ஆனால் இந்த இயல்பை அடக்கி, கோபதாபமின்றி அமைதியாகச் சிந்தித்துத் தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்ளத் தயாரானால் தான் சமுதாய நல்வாழ்வு கிடைக்கும். இப்படி நம்மைச் சிந்திக்கக் கோருகிறார் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு. அதற்காகச் சில கசப்பான உண்மைகளைப் பிட்டு வைத்திருக்கிறார்.

ஈழத் தமிழரும், சிங்களவரும் இருவேறு இனத்தவராயினும் இவர்கள் ஒருவரை ஒருவர் சகித்துக் கொள்ளவும் சகோதரர்களாகச் சேர்ந்து வாழவும் தீர்மானித்தாலொழிய இருவருக்குமே எதிர்காலம் இல்லை.

ஜெயவர்த்தனே பல பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்பது உண்மை. ஆனால் தமிழர்களாகிய நாமும் பல பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டுதானிருக்கிறோம். ஈழத் தமிழர் பிரச்னையை அரசியலாக்கி அவரவரும் பொது மேடைகளில் தமக்குத் தோன்றியபடி கொட்டி முழக்குவதால் ஒரு நற் பலனும் விளையாது. முதலில் இவ் விஷயத்தில் நமக்குள் ஒற்றுமை வேண்டும். நம்மிடையே உள்ள பிரிவுகள் ஜெயவர்த்தனேக்கு ஆதாயம். மத்திய அரசு வேறு, மாநில அரசு வேறு; ஆளும் கட்சி வேறு, எதிர் கட்சி வேறு என்று தலைக்கொன்று பேசாமல் எல்லாரும் ஒன்றுபட்டு பிரச்னையை அணுகினால்தான் ஈழத் தமிழனுக்கு நியாயம் கிட்டும். இதனை ஈழத் தமிழர் பிரச்னை என்பதை விட ஈழத்தில் உள்ள இந்தியர் பிரச்னை என்று தேசியக் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும்.

ஈழத் தமிழரிடம் நமக்குமுழுஅனுதாபம் உண்டு. ஆனால் நம் சகோதரர்களின் தனி சுதந்திரத் தமிழ் ஈழம் கோரிக்கை காரிய சாத்தியமானதா என்பதை இன்றைய உலகக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அப்படியே தனி சுதந்திர ஈழம் கொடுக்கப்பட்டாலும் அதனை ஆளப் போகிறவர்கள் யார்? ஈழத் தமிழருக்குள்ளேயே "இருபத்தி நாலு" வித கட்சிகளும் பேதங்களும் தலைவர்களுக்குள்ளேயே யார் பெரியவன் என்கிற மோதலும் உள்ள போது அங்கே நிலையான நல்லாட்சி இருக்குமா? ஈழத்தின் இதர பகுதிகளில் உள்ள தமிழர்களின் கதி என்னவாகும்? சிந்திக்க வேண்டும். வன்முறைகள் மேன்மேலும் மனக் கசப்பையே ஏற்படுத்தும். கொலையும் குத்து வெட்டும் பழி வாங்கும் உணர்ச்சிகளையே தூண்டி விடும். வன்முறையால் பெறப்படும் ஆட்சி எதனை வழிபடும்?

'கருணாநிதியே இந்தியப் பிரதமராக இருந்தாலும் ஈழத்தின் மீது படையெடுக்க முடியாது; பங்களாதேஷ் பிரச்னை போன்றது அல்ல இது' என்கிறார் நம்பூதிரிபாடு.

பிரச்னைக்குத் தீர்வு காணப் பிரதமர் ராஜீவ் போதிய சுறுசுறுப்பு காட்டவில்லை — உண்மை. ஜெயவர்த்தன கட்சியையோ ஆட்சியையோ ராணுவத்தையோ கட்டுப்படுத்த முடியாமல் தவிப்பதாகவும் தோன்றுகிறது — சரிதான். ஆனால் அவர்கள் பக்கமாகச் சுட்டு விரலை நீட்டிக் குற்றம் சாட்டும் போது வேறு மூன்று விரல்கள் நம்மைச் சுட்டிக்காட்டி குறை கூறிக் கொண்டிருக்கின்றன என்பதும் நிஜம்தான்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

# அன்றைய இன்றைய ரஜினியும்

கேள்வி (39): சமுதாயப் பிரச்னைகள், முறைகேடுகள் பற்றி துணிச்சலான படங்கள் எடுத்துள்ள நீங்கள் ஏன் இதுவரை ஒரு மர்மப் படமோ, விஞ்ஞானப் படமோ, புராணப்படமோ எடுக்கவில்லை? (பா. குறிஞ்சி வாணன், கே. கே. நகர்.)

கே. பாலசந்தர்: நல்ல கேள்விதான். இதற்கு இப்படி பதில் சொல்லலாமா? மர்மப் படம் எடுக்க, எனக்கு அம்மாதிரிக் கதைகள் மேலே ஈடுபாடு இல்லை; விஞ்ஞானப் படமெடுக்க இங்கே போதிய வசதி இல்லை; புராணப் படமெடுக்க என்கிட்டே போதிய அறிவு இல்லை.

கேள்வி (40): ஒரு நடிகன் உருவாகிறானா? உருவாக்கப்படுகிறானா? (மிஸ். கீதா, ஸ்ரீரங்கம்.)

கே. பாலசந்தர்: இதுவும் நல்ல கேள்விதான். அதாவது, பெரும்பாலும் ஒரு நடிகன் உருவாக்கத்தான் படுகிறான். அதான் என்னுடைய சொந்தக் கருத்து. சிலநேரங்களில் ஒரு சிலர் தானாகவே உருவாகிறார்கள் என்பதும் உண்மைதான். ஆனால் அவர்களும் கூட பின்னால் முழுமையாக உருவாக்கப்படுகிறார்கள், ஒருசில டைரக்டர்களால். சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள், சிறந்த கதாபாத்திரங்கள், சிறந்த இயக்குனர்கள் இன்னும் சொல்லப் போனால் நல்ல நேரம் இவைதாம் காரணமாய் அமைகின்றன.

கேள்வி (41): பேட்டிகளில் உங்கள் படத்தின் குறைகள் சுட்டிக்காட்டப்படுகையில், நீங்கள் நழுவி விடுகிறீர்கள். இதற்கு உங்கள் விளக்கம் தேவை. (மனத்தில் பட்டதைக் கேட்டுவிட்டேன். தப்பாயிருந்தால் மன்னிக்கவும்.)— (எஸ். கோபாலன், கோயம்புத்தூர்—40.)

கே. பாலசந்தர்: பதில் சொல்லி, அது தப்பாயிருந்தா நீங்களும் மன்னிக்கணும். நழுவுகிற விஷயம் கேள்வி கேட்பவரையும் பொறுத்தது. புத்திசாலித்தனமான கேள்விகள், புத்திசாலித்தனமான விளக்கங்களை நிச்சயம் பெற்றுத் தரும். என்கிட்டே ஒரு வைப்ரேஷனை ஏற்படுத்த வேண்டுமென்றால், கேள்வி கேட்பவரும் அந்த வைப்ரேஷனில் இருக்க வேண்டும். என் 'வேவ்லெங்த்'தில் அவரும் கேள்வி கேட்க வேண்டும். எத்தனை சொன்னாலும் இவர் புரிந்து கொள்ளப் போவதில்லை என்கிற கட்டம் வரும்போது நழுவாமல் வேறு என்ன செய்வது?

கேள்வி (42): அவார்டுகள் வாங்காவிட்டாலும் குடும்பத்தோடு பார்க்கிற வகையிலாவது, தமிழ் படத்தின் தரம் உயர வழி சொல்லுங்களேன். (வெ. பாண்டுரங்கன், கோடம்பாக்கம்.)

கே. பாலசந்தர்: அது உங்க கையில தான் சார் இருக்கு! தரமான படங்களைத்தான் பார்ப்போம்னு நீங்க எல்லாருமா அடம்பிடியுங்களேன். தன்னால தரம் உயருகிறதா, இல்லையான்னு பார்ப்போம்!

கேள்வி (43): தியாகத்தின் உருவான அவள் ஒரு தொடர்கதை கவிதாவை இன்ன இனமென ஐடென்டிடி இன்றி படைத்த தாங்கள், அரங்கேற்றம் லலிதாவை குறிப்பிட்ட இனத்தவளாய்க் காட்டி, அக்குலப் பெண்கள் மனத்தைப் புண்படுத்தினதேன்? (பின் குறிப்பு: அதே குலத்தில் தோன்றி; லலிதாவைப் போல அவல வாழ்வு வாழாது, கவிதா போல உழைத்துத் தம்பி தங்கைகளை உயர்த்திய பலரைக் குடந்தைக்கு வந்தால் என்னால் காட்ட முடியும்—மிஸ். கே. ஆர். சாவித்திரி, தேப்பெருமா நல்லூர்.)

கே. பாலசந்தர்: அவள் ஒரு தொடர்கதை கவிதா போல குடும்பத்துக்காக உழைக்கிற பெண்களைப் பார்க்க நான் குடந்தைதான் வர வேண்டுமென்கிற அவசியம் இல்லை. எல்லா ஊர்களிலும் தெருவுக்குத் தெரு இருக்கவே செய்கிறார்கள். லலிதா போன்ற பாவப்பட்ட பெண்களைத்தான் தேட வேண்டுமே தவிர கவிதாக்களை அல்ல. அதாவது கட்டுப்பாடில்லாத குடும்பத்தின் சீரழிவு, எனார்மிடி ஆஃப் தி ப்ராப்ளம், வறுமை, கிராவிடி ஆஃப் தி சிசுவேஷன், ஒரு டிராமாடிக் கான்டிராஸ்ட் இவற்றைக் கிட்டத்தட்ட ஒரு யதார்த்தமான சூழ்நிலையில், அதாவது எனக்குப் பழக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் வலியுறுத்திக் காட்டத்தான் ஒரு குறிப்பிட்ட இனத்தவளாக லலிதாவை எடுத்துக் கொண்டேன். உணர்ச்சிபூர்வமாக அதிக பாதிப்பை ஏற்படுத்தியவள் கவிதாவை விட லலிதாதான் என்பதும் மிகப் பெரிய உண்மை.



**கே. பாலசந்தர்**

# நேரம் நல்ல நேரம்



* பிரமிக்க வைக்கிறவர்.



* கவிதா.
* அவள் ஒரு தொடர்கதை.



* லலிதா.
* அரங்கேற்றம்.

கேள்வி (44): எந்தப் பட கிளைமாக்ஸ் காட்சி எடுக்க ரொம்ப சிரமப்பட்டீர்கள்? (பி. சாந்தி, தர்மபுரி.)

கே.பாலசந்தர்: எல்லா கிளைமாக்ஸ் காட்சிகளுமே கிட்டத்தட்ட பிரசவம் மாதிரிதான்! அவள் ஒரு தொடர்கதை உச்சகட்டம் எனக்கு ஒரு மிகப் பெரிய சவால். வசனங்கள் எதுவுமே காதில் விழாம, விஷுவல் காட்சிகளும், கலியாண மந்திரங்களும் நாதசுர இசையும் பின்னணி இசையோடு சேர்ந்து கிட்டத்தட்ட 12 நிமிஷங்கள் ஓடுகிற அந்த உச்சகட்டக் காட்சி முழுமையாய் அமைகிற வரை எனக்குத் திகிலாகவே இருந்தது. படத்தில் ஹைலைட்டாக அமைந்ததும் அந்தக் காட்சிதான். ஒரு பிரபல பத்திரிகை விமர்சனத்தில் கூட, ''கிளைமாக்ஸ் காட்சி பிரமிக்க வைக்கிறது'' என்று எழுதியிருந்தார்கள்.

கேள்வி (45): தாங்கள் அறிமுகப்படுத்தின ரஜினிகாந்த், இன்றைய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் — ஒற்றுமை, வேற்றுமை என்ன? (கே. ராஜேந்திரன், கோவிந்தவாடி.)

கே.பாலசந்தர்: ஒற்றுமை: அவர் இன்றும், அன்றும் என்னிடம் பழகும் விதம். அதே மரியாதை, அதே பவ்யம், அதே எளிமை, அதே பாணி. வேற்றுமை: அன்று அவர் முகத்திலே தோன்றிக் கொண்டிருந்த துடிதுடிப்பு இன்று இல்லாதது. படபடவென ஏணியிலே ஏறிவிட வேண்டுமென்கிற ஆர்வத் துடிப்பு. சந்திரனை எட்டிப் பிடிக்க வேண்டுமென்கிற மாதிரி ஒரு வெறி; எப்படியாவது சாதிக்க வேண்டுமென்கிற ஒரு கன்விக்ஷன் — இத்தனையும் அன்று அவர் முகத்திலே நான் பார்த்தேன். இன்று எங்கிருந்தோ வந்து அவர் முகத்திலே குடிகொண்டிருக்கிறது சாந்தம். இந்த மாற்றம் என்னைப் பிரமிக்க வைக்கிறது.

கேள்வி (46): பெண்களே இல்லாமல் நீங்கள் ஏன் ஒரு படம் எடுக்கக் கூடாது? (வி. தேவராஜன், வில்லிவாக்கம்.)

கே.பாலசந்தர்: ஏன் மிஸ்டர் தேவராஜன் இப்படி ஒரு ஆசை உங்களுக்கு? கதையின் கருதான் முக்கியம்; அதை எவ்வளவு சுவாரசியமாகச் சொல்கிறோம் என்பதுதான் முக்கியம். எந்தக் கருத்தை, எந்தச் சூழ்நிலையில் வலியுறுத்தப் போகிறோங்கறதுதான் ரொம்ப ரொம்ப முக்கியம். ஏதாவது வேண்டுதலாய் இருந்தால் ஒழிய பெண்களே இல்லாமல் எதற்காகப் படமெடுக்கணும்? எனக்குப் புரியவே இல்லை!

கேள்வி (47): நாவல்கள் படமாகையில், முடிவு முன் கூட்டியே ஆடியன்ஸுக்குத் தெரிந்திருப்பதால் தோல்வியடைகின்றன என்று ஒரு பேட்டியில் சொல்லியிருந்தீர்கள். முடிவை மூடி மறைப்பதிலா படத்தின் வெற்றி இருக்கிறது? பெண் மனம், மலைக்கள்ளன், காஞ்சனை இவையெல்லாம் வெற்றிபெறவில்லையா? (சத்யகிரிராஜன், திருப்பராய்த்துறை.)

கே.பாலசந்தர்: இதுவும் ஒரு காரணம்னு சொல்லியிருப்பேனே தவிர இதுதான் காரணம்னு சொல்லியிருக்க மாட்டேன். கல்கியின் பார்த்திபன் கனவு திரைப்படமாகும் போது, அவங்களுக்கு ஏற்பட்ட ஒரு முக்கியமான பிரச்னையை மனத்தில் கொண்டுதான் இதை நான் சொல்லியிருப்பேன். திரும்பத் திரும்பச் சென்று ஒரே படத்தை எவ்வளவோ தடவை பார்க்கலையா? முடிவு தெரிஞ்சுதானே பார்க்கிறோங்க? நான் இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் உணராதவன் இல்லை. இருந்தாலும், எந்த ஒரு திரைப்படமும், அது முதல் தடவையில் ஏற்படுத்துகிற பாதிப்பைப் பொறுத்துத்தான் அதன் வெற்றி, தோல்வியே இருக்கிறது.

கேள்வி (48): காந்தி படம் போல, இந்திரா காந்தி படம் எடுத்து, உலகப் புகழ் பெறலாமே! (துபாஷ் ரசாக், டால்மியாபுரம்.)

கே. பாலசந்தர்: பெறலாம்தான். யார் இல்லேன்னு சொன்னாங்க? எத்தனையோ தயாரிப்பாளர்கள் அதற்காகப் போட்டி போட்டுக்கிட்டு இந்திய அரசாங்கத்தை அனுமதிக்கு அணுகியிருக்கிறதா செய்தி வந்ததே! நீங்க பார்க்கலையா அதை?

தொகுப்பு: மௌனஷ்மி.


இன்ஸ்பெக்டர்: தங்க நகை வெள்ளி பாத்திரம் எல்லாத்தையும் அப்படியே விட்டிருக்கான், எப்படி உங்க சேலைகளை மட்டும் எடுத்து போய் இருக்கான்னு சொல்றீங்க?
பெண்: ஏன் சார், அதுக்காக என் ராகமாலிகா சேலைகளை எல்லாம் பாங்க் லாக்கர்லயா வைக்க சொல்றீங்க?

# 'கல்கி'யைக் கவர்ந்த காந்தன்

நாற்பத்து நாலு ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் இளைஞர் அமரர் கல்கியைக் காண வந்தார். வேறென்ன, வேலை தேடித்தான் வந்தார்.

''நான் சுப்பிரமணிய பாரதியின் மகன்'' என்றார்.

கல்கி திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

அந்த இளைஞன் புன்னகையுடன், ''என் அப்பா பெரும் சுப்பிரமணிய பாரதிதான். அவரும் சிறந்த தமிழறிஞர்தான்'' என்றார்.

கல்கிக்கு நினைவு வந்தது. மகாகவியின் பெயரிலேயே ஒரு தமிழறிஞர் இருப்பதாக அவர் கேள்விப்பட்டிருந்தார்.

பாரதி பெயரைச் சொன்னதாலேயே இளைஞனைக் கல்கிக்குப் பிடித்துப் போய் விட்டது. ''உன் கையெழுத்து நன்றாயிருக்குமா?'' என்று கேட்டார்.

கல்கி அவர்களின் கையெழுத்து மகா மோசம். அதைப் பற்றி அவரே பல சமயம் ஜோக் அடிப்பதுண்டு. அதனால் மணிமணியான கையெழுத்து உடையவர்களை அவருக்கு ரொம்பப் பிடிக்கும்!

''கையெழுத்து நன்றாகத்தானிருக்கும். தலையெழுத்து நன்றாயிருக்கிறதா என்று தான் தெரியவில்லை'' என்றார் இளைஞர்.

சிரித்தார் கல்கி. பாரதி, மணியான கையெழுத்து. இவை தவிர அவருக்குப் பிடித்த விஷயங்கள்: துணிவு. நகைச்சுவை. எல்லாமே இந்த இளைஞனிடம் இருந்தன. ''தலையெழுத்து பற்றித்தானே சந்தேகம்? அதையும் இப்பவே சோதித்துப் பார்த்துவிடலாமே'' என்றார் கல்கி. பிறகு ஒரு வேலை கொடுத்தார்: ''இதோ பார், புதிதாகப் பத்திரிகை ஆரம்பிக்கிறேன். முதல் இதழில் நமது காரியாலயத்தைப் பற்றி நேயர்களுக்குச் சொல்ல வேண்டும், என்ன செதி பகுதியில், எப்படி எழுதுவாய்? ஏதாவது. எழுதிக் கொண்டு வா பார்க்கலாம்.''

அந்த இளைஞர் சற்று யோசித்துவிட்டுப் பின்வருமாறு எழுதினார்: ''சென்னையில் எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் எங்கே இருக்கிறது என்று இனி யாரும் தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. எழும்பூர் ரயில் நிலையம் கல்கி காரியாலயத்துக்கு எதிரே தான் இருக்கிறது! யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்.''

''பேஷ், பேஷ்'' என்றார் கல்கி. கல்கியின் முதல் இதழில், முதல் அம்சமான என்ன செதியில், முதல் பாரா ஸோமாஸ் கந்தன் எழுதியதுதான். முதல் இதழின் தயாரிப்பின் போதே வந்து சேர்ந்துவிட்ட ஸோமாஸ்கந்தன், ஓய்வு பெறும் வரை — முப்பத்தாறு ஆண்டுகள் — கல்கி பத்திரிகையுடன் தொடர்பு கொண்டிருந்தார். ''ஸோமாஸ்'' என்ற பெயரில் சிறுகதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் என்று ஒரு பத்திரிகையில் இடம் பெற வேண்டிய பலவற்றையும் எழுதினார். எழுதுவது ஒரு கலை என்றால் 'எடிட்டிங்' அதைவிடச் சிரமமான கலை. அது ஒரு தன்னலமற்ற சேவை. பாராட்டெல்லாம் எழுத்தாளனுக்கே சேரும். திருத்தி அமைத்தவனுக்கு ஒன்றும் கிடையாது. அலுப்பு சலிப்



சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறார் திரு ஸோமாஸ். படத்தில் சிரித்துக் கொண்டிருப்பவர்கள் துணை ஆசிரியர் திரு எஸ். வி. எஸ். துணைப்போர்மன் திரு நடராஜன்.

பின்றி சிறுகதைகளைத் தட்டிக் கொட்டி மெருகேற்றிப் பிரசுரிப்பார் ஸோமாஸ். எத்தனையோ பல எழுத்தாளர்களைக் கல்கி அறிமுகப்படுத்தியிருக்கிறது என்றால் 'ஸோமாஸ்' அறிமுகப்படுத்தினார் என்று தான் அர்த்தம். ஏனெனில் வருகிற எண்ணற்ற கதைகளைப் படித்துப் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுத்தவர் அவர்தான். அவற்றுக்குரிய சன்மானத்தை நிச்சயித்தவரும் அவரே! தவிர "காந்தன்" என்ற பெயரில் விருப்பு வெறுப் பற்ற முறையில் சினிமா, நாடக விமர்சனங் கள் எழுதினார். சினிமா பார்க்காதவர்களும் படித்து ரசிக்கும்படி அமைந்தன அவர் விமர் சனங்கள்.

என்றைக்கும் தூய வெள்ளைக் கதராடை—வேஷ்டி, ஜிப்பா — அணிந்து காட்சியளித்த ஸோமாஸ் உடையைப் போலவே உள்ளத் திலும் தூய்மையானவர். கோபம், தாபம், பொறாமை போன்றவை அவர் கிட்டவே நெருங்காது. மாறாக அவர் இருக்குமிடம் கல கலப்பாக இருக்கும். சகாக்களைச் சிரிக்க வைத்துக் கொண்டே வேலைகளையும் பழு தின்றிக் கவனிப்பார்.

திடீரென்று காரியாலயம் முழுவதும் எதிரொலிக்கிறாற்போல ஆசிரியர் குழுவினர் இருக்கும் அறையில் ஓர் அவுட்டுச் சிரிப்பு எழும்! நிர்வாக இயக்குனர் சதாசிவம், "ஸோமாஸ் ஜோக் அடித்துவிட்டார்!" என்று தம் காரியாலய அறையில் எதிரே உள்ளவரிடம் சொல்லி, அந்த ஜோக் இன்னதென்று தெரியாவிட்டாலும் மற்றவர்கள் சிரிக்கிற அந்த மகிழ்ச்சியிலேயே தாமும் திளைத்துச் சிரிப்பார்.

அமரர் கல்கியோ, "எங்கே, எங்கே! அதை இன்னொரு தடவை சொல்லு!" என்று கேட்டு மறுபடி ரசித்துச் சிரிப்பார்!

கல்கி, சதாசிவம் — இவர்களையே, அவர்கள் எதிரிலேயே 'மிமிக்ரி' செய்வார் ஸோமாஸ். அவர்களும் ஆனந்தப்படுவார்கள்!

இப்படி தமது சகாக்களையெல்லாம் சிரிக்க வைத்துக் கொண்டிருந்த ஸோமாஸ், இப்போது எங்களையெல்லாம் அழ வைத்து விட்டுப் போய்விட்டார். கூடவே பழைய நினைவுகளில் சிரிக்கவும் செய்கிறோம். அழுது கொண்டே சிரிக்கிறோம்.

—கி. ராஜேந்திரன்.

## 6

விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டது. ஒரு விவசாயி அசலாகவும் வட்டியாகவும் வாங்கிய கடனைப் போல் இரு மடங்கு பல தவணைகளில் திருப்பிக் கொடுத்திருந்தால் அந்தக் கடன் தொகை ரத்து செய்யப்படும். (அந்த நாளில் பணவீக்கம், ரூபாயின் மதிப்புக் குறைவு என்பதெல்லாம் கிடையாது). ஸி. ஆர். உண்மையான உத்வேகத்துடன் நல்லெண்ணத்துடன் உருவாக்கிய இச் சட்டத்திற்கு மிகுந்த எதிர்ப்பு இருந்தது. பன்னீர்ச் செல்வம், 'பெரும்பான்மையினரான ஏழைகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் மட்டமான காரியம்' என்று இச்சட்டத்தை வர்ணித்தார். 'சிங்கத்தை போல் நேரடியாகத் தாக்கத் திராணியற்ற ஸி. ஆர், சூட்சுமமாய் இளஞ்சிவப்பு சோஷலிஸத்தை, — ஏன், கம்யூனிஸத்தைக் கூட — இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் புகுத்த முயல்கிறார்' என்று புகார் செய்தார் ஸாங்லி. கிருஷ்ணமாச்சாரியோ இது ஒரு தற்காலிக வலி நிவாரணிதானே தவிர, நிரந்தரப் பரிகாரம் அல்ல' என்றார். விவசாயிகள் மீண்டும் கடன் பட்டுத்தான் போவார்கள் என்பது அவர் கருத்து. இந்தச் சட்டத்தை நியாயப்படுத்தும் வகையில் சரியான புள்ளி விவரங்கள் தரப்படவில்லை என்றும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

'பெருகி வரும் சோஷலிச மனப்பான்மையைக் கட்டுப்படுத்த நாமே ஓரளவு சோஷலிஸ பாணி தீவிரத்தன்மையைக் காட்டத்தான் வேண்டும்' என்று ஸாங்லிக்குப் பதிலளித்தார் ஸி. ஆர். இந்தச் சட்டம் ஒரு தாற்காலிக நிவாரணமே என்ற குற்றச்சாட்டுக்கு ஸி. ஆர். அளித்த பதில்: ''ஒரு மாட்டு வண்டியைப் பார்த்து அது மோட்டார் கார் இல்லையே என்பதற்காகப் பரிகசித்துச் சிரிப்பதா? இப்போதைக்கு வாழ்க்கைப் பயணத்துக்கு ஒருமாட்டு வண்டியாவது கிடைத்ததே என்றல்லவா மகிழ வேண்டும்!'' புள்ளி விவரங்கள் கொடுப்பது பற்றிச் சொன்னார் ஸி. ஆர். ''சென்னைக் கொசுக்களிடமிருந்து நாம் தப்ப வேண்டுமானால், மைலாப்பூர், திருவல்லிக்கேணியில் உள்ள கொசுக்களின் எண்ணிக்கை பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படும் வரை காத்திருக்க முடியாது. அதற்கு முன்பாகவே ஒரு கொசு வலை வாங்குவதுதான் அறிவுடைமை!''

ஹிந்து பத்திரிகையின் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியில் இந்தச் சட்டத்தை எதிர்த்து நிறையவே கடிதங்கள் பிரசுரமாயின. இப்படி செய்தால் இனி யாருமே விவசாயிகளுக்குக் கடன் வழங்க முன் வரமாட்டார்கள் என்றும், சமுதாய வாழ்வின் அடிப்படையையே இச்சட்டம் உலுக்குகிறது என்றும் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் உண்மையில் இத்தகைய எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம், அநியாய முறையில் இலகுவாகக் கிட்டும் வருவாயை அவர்கள் இழக்க விரும்பவில்லை என்பதே. சட்டசபையில் இச்சட்டத்துக்குச் சுமார் முன்னூறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இரவு பகல் நான்கு நாட்களுக்கு விவாதம் நடந்தது என்றாலும் இறுதியில் கிட்டத்தட்ட ஸி. ஆர். விரும்பிய வண்ணமே சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஸி. ஆரின் இந்தச் சட்டத்தை பம்பாய் ராஜதானியும் ஏற்றுப் பின் பற்றியது. பஞ்சாப் மாகாணப் பிரதம மந்திரி சிக்கந்தர் ஹயத் இச்சட்டத்தை 'ஒரு முன்னோடி' என்று சிலாகித்தார்.

இருபத்தேழரை மாத கால ஆட்சியில் ராஜாஜி மந்திரி சபை அடித்தள மக்களுக்குப் பல சலுகைகளை வழங்கிற்று. ராட்டையில் நூற்பவர்களுக்கும், கைத்தறியாளருக்கும் வழங்கிய சலுகைகள் முக்கியமானவை. 'நூல் நூற்றுத் தன் வருவாயை அதிகரித்துக் கொள்ள முயலும் பெண் ஒரு தொழிற்சாலைக்கே சமம்' என்பார் ஸி. ஆர். ''புகைக்கும் பெரிய புகைப் போக்கிகளைக் கண்டு வியக்கும் சிலர், சுவாசப்பைகளில் பிராணவாயுவைக் கரியாக்கி வாயால் சுவாசப் புகையாக வெளியிடும் உயிருள்ள புகைப் போக்கிகளைப் பற்றி சிந்திப்பதில்லையே' என்று வருத்தம் தெரிவித்தார்.

## சிக்கனச் சீலர் வழிகாட்டிய வீரர்

சி. ஆரின் மந்திரி சபை வரண்ட கிராமங்களுக்கு நீர் வழங்க ஒரு நிரந்தர நிதித் திட்டம் வகுத்தது. கிராமங்களில் சாலைகளையும் மருத்துவ வசதிகளையும் அதிகரித்தது. புயல், மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் நில வரி வசூலிக்காமல் விட்டது. சி. ஆரின் தனிப்பட்ட முயற்சியால் ஹைதராபாத், மைசூர் ஆகிய சமஸ்தானங்களுடன் நதி நீர் உபயோகம் குறித்து ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக துங்கபத்திரா திட்டம் ஆரம்பமாகியது. தெலுங்கு மாவட்டங்களில் பெஜவாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்கள் நிறுவ ஏற்பாடுகள் ஆரம்பமாயின. பைகாரா, மேட்டூர் நீர் மின் நிலையங்களிலிருந்து தமிழகத்தின் எட்டு மாவட்டங்களுக்குப் புதிதாக மின் சக்தி விநியோகம் ஆரம்பமாயிற்று. நகரங்களில் கழிவு நீர் அகற்றல், குடிநீர் சுத்திகரிப்பு, நோய் தடுப்பு போன்றவற்றுக்குப் புதிதாகத் தொகைகள் ஒதுக்கப்பட்டன. இந்த மந்திரி சபை இயற்றிய 'பொது மக்கள் ஆரோக்கியப் பாதுகாப்புச் சட்டம்' அதுவரை வேறு எந்த மாகாணத்திலும் இயற்றப்படாத ஒன்று. சிறைக் கைதிகளுக்குமோர், செய்தித்தாள்கள் வானொலிப் பெட்டிகள், துணி துவைக்கச் சவுக்காரம் ஆகியவை அளிக்கப்பட்டன. 125 நடுநிலைப் பள்ளிகளில் ஹிந்துஸ்தானி கற்பிக்க நிதி வழங்கப்பட்டது. நான்கு மாவட்டங்களில் மது விலக்கு அமுல்படுத்தப்பட்டதால் அரசுக்குக் கிடைக்கக் கூடிய பெருமளவு வருவாய் கிடைக்காமல் போய் விட்டது.

இந்த நஷ்டத்தைச் சேமிப்பும், புதிய வரிகளும் ஈடுகட்டின. கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். இதனால் சிறைச்சாலைகளில் செலவு குறைந்தது. ஒவ்வொரு கோடையின் போதும் உதகைக்கு ஆட்சியை மாற்றிக் கொண்டு போவது நிறுத்தப்பட்டது. கவர்னரும், அவருடைய செயலாளரும் பணியாட்களும் மட்டுமே மலை வாசஸ்தலத்துக்குச் சென்றனர். பண வீக்கம் அன்று கிடையாது. எனவே புதிதாய் நியமனமாகும் சில ரக அரசு ஊழியர்களுக்குக் குறைந்த சம்பளம் நிர்ணயிப்பதை நியாயமென்றே கருதினார் சி. ஆர். அரசாங்க மருத்துவ மனைகளில் கௌரவ டாக்டர்களை நியமித்ததால் ஒரு சிறு தொகையைச் சேமிக்க முடிந்தது. அரசாங்க மருத்துவர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தக் கூடாது என்று 1940 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் ஒரு தடை விதிக்க மந்திரி சபை திட்டமிட்டிருந்தது. இந்தக் கொள்கையை மீறி தனிப்பட்ட முறையில் மருத்துவப் பணி செய்ய விரும்புவோர் அதற்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் அதில் கிடைக்கும் வருவாயில் இருபது சத விகிதத்தை அவர்கள் அரசுக்குச் செலுத்தி விட வேண்டும்.



திபெத் நாட்டில் விருந்தாளி ஒருவருடைய வீட்டில் தங்கிவிட்டு விடை பெற்றுச் செல்லும் போது வீட்டுக்காரர் தம் நாக்கை நீட்டிக் காட்டுவாராம். அதன் பொருள், "நீங்கள் இங்கே தங்கி இருந்தபோது உங்கள் பேச்சை நான் நன்கு ரசித்தேன்" என்பதாம்!

— மதுரை எம். கண்ணன்

எர்ஸ்கைன் வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தில் உத்தேசிக்கப்பட்டிருந்த இந்தச் சட்டத்தை 'அனாவசியமான கஞ்சத்தனம்' என்றே குறிப்பிட்டிருந்தார். 'அரசுச் செலவினங்களைப் பொறுத்த வரையில் பிரதம மந்திரி சுத்த கருமியே' என்றும் எழுதினார். ஆட்சியின் முதல் எட்டு மாதங்களில் தமது சுற்றுப் பயணங்களுக்காக சி. ஆர். செலவிட்ட தொகை, அவர் பொதுப் பணத்தை எவ்வளவு ஜாக்கிரதையாகக் கையாண்டார் என்பதை உணர்த்தும். அத்தொகை: ரூ 400.

இரண்டாவது பட்ஜெட்டுக்கு சி. ஆர். மத்திய சர்க்காரிடமிருந்து மாகாணத்தின் வருமான வரிப் பங்காக ரூ 21 லட்சம் பெற்றார். இவ்வாறு மாகாணங்களுக்கு வருமான வரியில் பங்கு அளிக்கப்பட்டது அதுவே முதல் முறை. எதிர்க்கட்சியினர் இத்தொகை கிடைத்ததை 'பெரிய எதிர்பாராத அதிர்ஷ்டம்' என்றனர். 'இதென்ன பெரிய விஷயம்? நம்மிடம் திருடியதைத் திருப்பித் தருகிறார்கள். அவ்வளவுதானே!' என்றார் சி. ஆர்!



(தொடரும்)

தமிழாக்கம்: சீதா ரவி



# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1985

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதை போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ | 1000 |
| இரண்டாவது பரிசு | ரூ | 500 |
| மூன்றும் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ 250 வீதம்) | ரூ | 500 |

ஆக மொத்தம் ரூ 2000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

* கதைகள் சொந்தக் கற்பனை என்றும், கதை வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.

* அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தர வேண்டும்.

* நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

**கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15**

* உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

* பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

* கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

* எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

* சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

* போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 4 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை—600 032.

# மௌனப் புயல்

## வாஸந்தி

ஏப்ரல் 84.

6

ஸந்த் ஹர்சந்த் ஸிங் லாங்கோவால் எஸ்.ஜி. பி.ஸி.(சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டி)* அலுவலகக் கட்டிடத்தின் அறை ஜன்னல் வழியாகத் தன்னுள் மூழ்கிய யோசனையுடன் வெளியே பார்த்தார். பொற்கோவிலின் தங்கத் தகடுகள் உச்சி வெயில் பட்டுத் தகதகத்தன. கோவிலைச்சுற்றியிருந்த அமிருதஸரோவரம் அமைதியாய், வெள்ளி விரிப்பாய் ஜொலித்தது. அடியார்களின் 'கார்சேவாவி'னால் கழுவப்பட்ட பரிக்ரமா**வின் சலவைக்கல் தரை வெளேரென்று தூய்மையாய்க் காட்சியளித்தது ...

பரிக்கிரமாக்களில் ஜனநடமாட்டமே காணோம். இது சாப்பாட்டு நேரம். எல்லாரும்***லங்கருக்குப் போயிருப்பார்கள் என்று சமாதானப்படுத்திக்கொள்ளப் பார்த்தாலும் இந்தக் கோவிலுக்கு வழக்கமில்லாத இந்த வெறிச்சோடல் அடி மனத்தில் ஒரு சங்கடத்தை ஏற்படுத்திற்று. கோவில் எல்லைக்குள் ஒரு மூலையிலிருந்து துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. சத்தம் செவியில் விழும் போது இதயத்திலும் அடி விழுந்தது.

பிந்திரன் வாலே க்கு ராணுவ ஆலோசகராக வந்து சேர்ந்திருக்கும் ஷாபேக் ஸிங் முன்னவனின் அடியாட்களுக்குக் கொடுக்கும் பயிற்சியின் சத்தம்....

அவருடைய அகாலிதல் தொண்டர்கள் அவரிடம் ரகஸியமாகத் தெரிவித்திருக்கும் விஷயங்களைப் பற்றிய ஞாபகம் வரும் போதெல்லாம் லாங்கோவாலுக்கு வயிற்றைக் கலக்கிற்று. கோவிலின் பிராகாரத்தைச் சுற்றி இருந்த புனிதக் கட்டிடங்களையெல்லாம் பிந்திரன் வாலே இந்த ஷாபேக் ஸிங்கின் உதவியுடன் கோட்டையாக்கி வருகிறான் என்பதும் லங்கருக்குச் சாமான் கொண்டு வரப்படும் லாரிகளில், கோதுமை மாவு மூட்டைகளுக்கு அடியில் எல்லைப் புறத்தில் கடத்தல் செய்யப்பட்ட துப்பாக்கிகள் பதுக்கப்பட்டுக் கொண்டு வரப் படுகின்றன என்பதும் செவியில் பட்டதிலிருந்து ஒரு கையாலாகாத்தன கலவரமும் பீதியும் ஏற்பட்ட வண்ணம் இருந்தன. எந்தப் பக்கமும் மார்க்கத்துக்கு வழியில்லாமல் மூலைக்குத் தள்ளப்பட்டாற் போல் சோர்வு ஏற்பட்டது. தன்னையும் தனது கட்சியையும் 'இந்த நிலைக்கு ஆளாக்கி விட்ட அரசாங்கத்தின் மேல் கோபம் வந்தது. நெருக்கடியான சமயத்தில் எந்த ஒரு வழிக்கும் ஒத்து வராத தனது கட்சிக்காரர்களின் ஒத்துழையாமையை நினைத்து எரிச்சல் ஏற்பட்டது.'சாண் ஏறினால் முழம் சறுக்கிற்று' என்கிற கதையாய், அவர்களது கோரிக்கைகள் எவையும் அரசின் அங்கீகாரம் பெறாத நிலையில் சிக்கிய மக்களின் ஆதரவும் போய், ஹிந்துக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டு—

அரசியல் அரங்கத்தில் கிட்டத்தட்ட ஸைஃபர்களாய்ப் போய் விட்ட அதே சமயத்தில்—

நேற்று முளைத்த இந்தப் பிந்திரன் வாலே, தன் தீவிர வாதப் பிர சாரத்தினால் எப்படிக் கிராமப்புறத்து மக்களையெல்லாம் தன் வசம் ஈர்த்துக் கொண்டு விட்டான்!

குருத்வாராக்களின் நிர்வாகப் பொறுப்பையும் அகாலிகளிடமிருந்து கைப்பற்றத் திட்டம் போட்டிருக்கிற துணிவுடன் செயல் பட ஆரம்பித்து விட்டான். பொற்கோவில் போர்க் கோலம் பூண்டு விட்டது. அவன் பேச்சைக் கேட்கக் கூட்டம் கூட்டமாகச் செல்லும் ஜனங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் அகாலிகளுக்கு அவர்களது ஆதரவு இல்லை இனிமேல் என்று புரிகிறது..

பிந்திரன் வாலே அவரைப் பகிரங்கமாகப் பரிகசிக்கிறான்.

'அந்தக் காந்திவாதி என்ன சொல்கிறான்? உங்களுக்காக என்ன சாதித்து விட்டான்?'

அகாலி கட்சிக்கு எத்தனை சீக்கியர்களின் ஆதரவு கிடைக்கும் இப்போது என்று புரியாத நிலையில் பிந்திரன் வாலேயைப் பகிரங்கமாக எதிர்க்கத் துணிவு வரவில்லை கட்சிக்கு.

குர்தாஸ்பூரில் நடந்த ஹிந்துக்களின் கோர மரணத்துக்கும் அதற்குப் பிறகு பரவலாக நிகழ ஆரம்பித்து விட்ட வன் முறைகளுக்கும் கொலைகளுக்கும் அவர் மட்டுமே கண்டனம் தெரிவித்த போது அவரைத் தன் பரம விரோதியாகப் பாவிக்க ஆரம்பித்திருக்கிறான் பிந்திரன் வாலே. ஹிந்து ஸிக் ஒற்றுமை பஞ்சாபுக்கு மிக அவசியம் என்ற அவர் பேச்சைத் திரித்துச் சீக்கியர்களின் எதிரிகள் அகாலிகள் என்று பிரசாரம் செய்கிறான்.

ஹிந்து — ஸிக்.

---

* அகாலிதல்லின் சகோதர சங்கம். குருத்வாராக்களை ஆளும் அதிகாரம் உடையது.

** ஹர்மந்திர் ஸாஹப்பைச் சுற்றி ஓடும் பிராகாரம்.

*** குருத்வாராவுக்கு வருபவர்களுக்கெல்லாம் கிடைக்கும் இலவசச் சாப்பாடு.

சட்டென்று ஒரு கனம் மனத்தை அழுத்திற்று. இந்தக் கனம் இனிமேல் விலகவே போவதில்லை என்கிற பயம் எழுந்தது. இந்தப் பாரத்திற்கு நானும் எனது சகாக்களும் கூடப் பொறுப்பு என்ற குற்ற உணர்வு அதிகமாக அழுத்திற்று...

''ஸந்த் லாங்கோவால்ஜி! நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் இன்னும் பதில் சொல்லவில்லை...!''

லாங்கோவால் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். ஓ இந்தப் பையன், தில்லியிலிருந்து அவரைப் பேட்டி காண வந்திருக்கும் இளைஞன். அவன் இங்கு உட்கார்ந்திருப்பதை மறந்தே போனது வேடிக்கைதான்...

தரையில் வெள்ளை விரிப்பிற்கு மேல் உட்கார்ந்திருந்த மன்மோஹன் ஸிங்கை லாங்கோவால் தீர்க்கமாகப் பார்த்தார்.

இவன் ஒரு மார்க்ஸிஸவாதி என்று கணித்துக் கொண்டார். ஒரு நம்பிக்கையில்லா கால கட்டத்தில், திருப்பு முனையில் நிற்கும் இந்தச் சீக்கிய இளைஞர்களின் நிலைமை பரிதாபமானது என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். தொழில் வளம் பெருகாத பஞ்சாபில் வேலை வாய்ப்புக்கு வழி இல்லாத நிலையில் இவர்களது அடைக்கலம் மார்க்ஸிஸம் அல்லது மறு கோடியில் நிற்கும் பிந்திரன்வாலேயின் பிற்போக்கிஸம்... ஓ. இந்த மத்திய அரசு மட்டும் அகாலிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தால் பஞ்சாபுக்கு எப்படிப்பட்ட ஒரு எதிர் காலத்தை உருவாக்கியிருக்கலாம்! மக்களின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சியைப் பற்றியிருக்கலாம்! இதெல்லாம் மத்திய அரசுக்கு நன்ருகத் தெரியும். அகாலிகள் பதவிக்கு வந்து விடக் கூடாது என்பது தான் அவர்கள் போடும் முட்டுக் கட்டைகளுக்குக் காரணம்...

மன்மோஹன் ஸிங் அவர் பதிலையே எதிர் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து லாங்கோவால் சுய நினைவுக்கு வந்தார்.

''மன்னித்துக் கொள். என்ன கேட்டாய்



# அருள்வாக்கு



(சென்ற வாரத் தொடர்ச்சி)

அடுத்தபடியாக கொடியின் உதாரணம். கொழு கொம்பைச் சுற்றிக் கொள்கிற கொடியை நாம் சிறிது விலக்கிப் பிரித்து விட்டால் கூட அது படாத பாடு பட்டுக் கொஞ்ச நேரத்திலேயே மறுபடியும் கொம்பை வளைத்துச் சுற்றிக் கொண்டு விடும். நம் மனசை ஈஸ்வர ஸ்மரணையிலிருந்து அலைக்கழிக்கிற இடைஞ்சல்கள் எத்தனை வந்தாலும் நம் லட்சியத்தைப் பிடிவாதமாகப் பிடித்திருக்க வேண்டும் என்பதை இந்தத் திருஷ்டாந்தம் உணர்த்துகிறது. கடைசியில் நதி — சமுத்திர உபமானம். இதுவே பரம அத்வைதம். கடல்தான் மழையாக விழுந்து பிறகு ஆறாகியிருக்கிறது. இரண்டும் வேறு வேறு அல்ல. ஒரு நதியானது எந்த மலை உச்சியில் பிறந்தாலும் அலுக்காமல் சளைக்காமல் ஓடி ஓடி வந்து கடைசியில் கடலில் கலந்து தன்னுடைய தனிப் பெயரையும் உருவத்தையும் இழந்து கடலாகவே ஆகி விடுகிறது. கடல் அதை எதிர் கொண்டு அழைத்துக் கொள்கிறது. இதனால்தான் நதி சங்கமங்களுக்குச் சிறிது தூரம் இப்பாலே அந்த ஆற்றின் ஜலம் உப்புக் கரிக்கிறது. இப்படியே நாமும் நிஜமான பக்தி செலுத்தினால் கருணா சமுத்திரமான பகவான் முன்னே வந்து நம்மை ஆட்கொண்டு தானாக்கிக் கொள்வான்.

முதலில் பொருள் வேண்டும், பவிஷு வேண்டும் என்று வியாபார ரீதியில் பக்தி செய்ய ஆரம்பித்தாலும், பகவானின் குண விசேஷம் காரணமாக அவனுக்காகவே அவனிடம் அன்பு செலுத்துகிற பக்குவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறுவோம். கடைசியில் குண விசேஷம் எதுவும் இல்லாத பரமாத்ம ஸ்வரூபமாகவே நாமும் அவனில் கரைந்து அவனாகவே ஆவோம்.

லோக ரீதியில் நன்றாக வாழ்க்கை நடத்துவதற்கும் சரி த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் முதலிய சித்தாந்தங்களின் அனுபவத்துக்கும் சரி, பக்தி என்பது இன்றியமையாததாகிறது. மோட்சம் அடையப் பின்பற்றும் உபாயங்களில் தலைசிறந்தது பக்தியே என்கிறார் ஸ்ரீபகவத்பாதர். ஆத்ம ஸ்வரூபத்தை உணர்வது தான் பக்தி என்றும் அதையடுத்துச் சொல்கிறார்.

மோக்ஷ ஸாதன ஸாமக்ரீயாம் பக்திரேவ கரீயஸீ!
ஸ்வஸ்வரூபாநு ஸந்தானம் பக்தி ரித்ய பிதீயதே!!

ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

நீ?" என்றார் மிருதுவான குரலில்.

அவரது மறுமொழியை, நம்ப முடியாதவனாய் மன்மோஹன் மறுபடியும் கேட்டான்.

"உங்கள் கட்சியின் திசையே தவறான பாதையில் போய் விட்டதை நீங்கள் உணரவில்லையா? வெறும் பஞ்சாபிக் கட்சியாக இருந்திருந்தால் ஹிந்துக்கள் உங்களுக்கு ஆதரவு அளித்திருப்பார்கள். சீக்கிய மதத்தையும் ஏன் கூடப் பிணைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? குருத்வாராக்களின், வெளியிலிருந்து ஏன் செயல்படக் கூடாது?

"இந்தப் பிணைப்பினால் உங்களையே ஒரு நிர்ப்பந்தத்துக்கல்லவா ஆளாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?"

லாங்கோவால் பெரிய ஆயாசம் ஆட்கொண்டாற் போல் கண்ணை மூடி ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தார். பிறகு மெல்லிய குரலில் சொன்னார்:

"நிர்ப்பந்தம்தான். மத சார்பினால் ஏற்பட்ட நிர்ப்பந்தமில்லை. மதசார்பே ஒரு நிர்ப்பந்தம். சீக்கிய மதமே ஒரு அரசியல் நிர்ப்பந்தத்தால் முளைத்தது என்று உனக்குத் தெரியாதா? இந்த மதத்தையும் அரசியலையும் எப்படிப் பிரிப்பது? அதோ பார், ஜன்னல் வழியே என்ன தெரிகிறது? ஹர்மந்திர் ஸாஹிப்புக்கும் அகால்தக்த்*துக்கும் இடையே இரண்டு த்வஜஸ்தம்பங்கள் — சரிசமமாக. ஒன்று தெய்விகம், மற்றொன்று லௌகிகம். இரண்டும் இணைந்துதான் செயல்பட வேண்டும். இணையாமல் செயல்பட்டால் சீக்கியர்களின் ஆதரவு கிடைக்காது. இது நமது துர்பாக்கியம் மகனே! பஞ்சாபி கட்சி என்று பொதுவாக ஆரம்பிக்கிறோம் என்று வைத்துக் கொள். வேறு ஏதாவது ஒரு கட்சி மதத்தின் பெயரில் சீக்கிய கிராமத்தான்களைக் கவர்ந்து விடும். குருத்வாராக்களையும் கவர்ந்து விடும். நீ ஒரு சீக்கியன் — குருத்வாராக்களை அரசியல் பிரச்சாரத்துக்கு உபயோகப்படுத்துவது நம் மதப்படி நியாயமானது மட்டுமல்ல, லாபமானது கூட!

"கூட்டத்துக்காக ஆள் சேர்க்க வேண்டியதில்லை. இங்கே எப்பொழுதுமே நாலாயிரத்துக்குக் குறையாமல் ஜனக் கும்பல். பந்தல் போட வேண்டியதில்லை. லௌட் ஸ்பீக்கரோடு மஞ்சி ஸாஹிப் இருக்கிறது. சாப்பாட்டுக்குத் தனியாக ஏற்பாடு பண்ண வேண்டியதில்லை. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இலவசச் சாப்பாடு 'லங்க'ரில் மூன்று வேளை கிடைக்கிறது. 'ரயில் ருக்கோ, ராஸ்தா ருக்கோ, காம் ருக்கோ' என்று எத்தனை மோர்ச்சாக்களை நடத்தியிருக்கிறோம்! ஒரு பிரத்யேகச்

* அகால்தக்த் — பொற்கோவில் எல்லைக்குள் ஹர்மந்திர் ஸாஹிப்புக்கு நேர் எதிராக இருக்கும் புனிதக் கட்டிடம். சீக்கிய மத குருக்கள் இங்கிருந்து ஹுக்கும்நாமாவை(கட்டளைகள்)வாசிப்பார்கள். பிந்திரன்வாலே இந்தக் கட்டிடத்திற்குள்தான் சரணடைந்திருந்தார். இதன் அடி தளத்தில் ஆயுதங்களை சேர்த்து வைத்திருந்தார்.

செலவில்லே ஏற்பாடில்லே. குருத்வாரா வுக்குவெளியில்எங்களால் இத்தனை பெரிய அளவில் எதையும் செய்ய முடியாது. தவிர கிராமத்து சீக்கிய ஜனங்களின் ஆதரவு குருத்வாராக்களின் மூலம் தான் கிடைக் கும்... நீ சீக்கியன், உனக்கு இதெல்லாம் புரியாததில்லே..."

இளைஞன் நிமிர்ந்து உட்கார்ந்தான். இவன் கண்கள் எத்தனை கூர்மை என்று அவர் வியந்தார்.

"நான் மதச் சார்பில்லாதவன் ஸந்த் ஜி! நீங்கள் காரணம் காட்டும் இந்தக் கட்டா யம் ஹிந்துக்களை எவ்வளவு தூரம் உங் களிடமிருந்து விலக்கி விட்டது பாருங் கள்."

ஒரே ஒரு விநாடி லாங்கோவாலின் பார் வையில் வருத்தம் நிழலாடிச் சிரம் தாழ்ந் தது. அடுத்த விநாடி தன்னை சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தார்.

"ஓ இங்கிருக்கும் ஹிந்துக்கள் ஹிந்து ஸெண்டருக்கு 'குலாம்'கள்! தங்கள் தாய் மொழி பஞ்சாபியாக இருந்த போதிலும் தாய்மொழி ஹிந்தி என்று ஸென்ஸஸ் வாக் கெடுப்பின் போது சொல்லி நம்மை ஏமாற் றியவர்கள். தாய் மொழியை நிராகரிப்பது எத்தனை பெரிய கேவலம்! சீக்கிய சகோதரர் களின் கை ஓங்கிவிடும் என்று அவர்களுக்கு பயம்! பஞ்சாபில் நாம் இரண்டாம் பட்சப் பிரஜைகளாகப் போய் விடுவோம் என்று அவர்களுக்குப் பயம்!"

இந்தக் குற்றச்சாட்டை நான் பிறந்த திலிருந்து கேட்டிருக்கிறேன் என்கிற சோர்வுடன் மன்மோஹன் அவரைப் பார்த்துப் புன்னகை செய்தான்

"அவர்களது செயல் வினோதமானது தான். ஆனால் அவர்கள் பயத்தை ஊர்ஜிதப் படுத்துகிற மாதிரி இல்லையா. உங்களது கோரிக்கைகளும்?"

லாங்கோவால்பொறுமையிழக்கவில்லே. குரலே உயர்த்தவில்லே. முகத்தின் தசைகள் கோபத்தைப் பிரதிபலிக்கவில்லே. நிதானம் தவறாமல் வார்த்தைகள் வந்தன. வியப்பு அதில் இழையோடிற்று.

"எப்படி? எங்கள் ஆனந்த்பூர் ஸாஹப் கோரிக்கைகளை அரசுமட்டும்ஒத்துக்கொண் டால், எல்லாப் பஞ்சாபியரும் பயன் அடை வார்கள். அதிகத் தண்ணீர் வேண்டும். லாகூரை இழந்ததற்குப் பிரதியாகச் சண்டி கர் தலைநகர் வேண்டும். தொழிற்சாலைகள் வேண்டும். மாநில அரசுக்கு அதிக அதிகா ரம் வேண்டும் — என்கிற கோரிக்கைகள் எல்லாம் பொதுவானது இல்லையா?"

மன்மோஹன் ஸிங் சிரித்தான். நிராசை கலந்த சிரிப்பாகப் பட்டது அவருக்கு.

"பொதுவானது, நியாயமானது" என்று ஒப்புக் கொண்டான்.

"ஆனால் பஞ்சாபின் துர் அதிர்ஷ்டம் அவற்றை உங்கள் கட்சி சமர்ப்பித்தது. அதற்கு நீங்கள் மதப் போர்வை போர்த்தி யது, 'கால்ஸா ஜிகா போல் பலா'* என்று வலியுறுத்தியது. உங்கள் நிலையை நீங்களே பலஹீனமாக்கிக் கொண்டீர்கள். மத்திய அரசு உங்களுக்குப் பாவ்லாக் காட்டக் காரணம் கொடுத்து விட்டீர்கள்..."

"ஆ. அதற்குக் காரணத்தைத் தேட வேண்டுமா? எதிர்க் கட்சியைத் தொலைக்க வேண்டும். கோரிக்கைகளுக்கு ஒப்புக் கொண்டு விட்டால் தங்கள் நிலே பலவீனப் பட்டுப் போகும் என்று அதற்கு பயம். நாங் கள் பிரிவினையைக் கோரவேயில்லே. கோரு வதாகப் பிரசாரம் செய்கிறது. கிராமத்து சீக்கிய ஜனங்கள் தான் எங்களுக்கு ஆதரவு என்பதால் அவர்களது திசையைத் தன் பக்கம் திருப்ப-பிந்திரன்வாலேயை அமர்த் திற்று. இப்போது நடப்பது என்ன பார்த் தியா? ஹிந்து துவேஷத்தை யார் பரப்பு கிறார்கள்? இதற்கெல்லாம் மூல காரணம் யார்?"


வார்த்தைகள் ஆவேசமாக வந்தாலும் குரலில் சாந்தம் தொனித்தது. பதில் ஏதும் சொல்லாமல் வெள்ளை விரிப்பைப் பார்த்த படி தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந் திருந்த அந்த இளைஞனைப் பார்க்க அவருக் குச் சங்கடமாக இருந்தது. இவனுடைய கலக்கத்தைப் போக்க தனக்குச் சக்தியோ அதிகாரமோ சுதந்திரமோ இல்லை என்கிற பிரக்ஞை வேதனையைத் தந்தது.

இளைஞன் தலே நிமிர்ந்தான். அவன் கண் கள் கலங்கியிருந்ததாக அவருக்குப் பிரமை யேற்பட்டது.

"லாங்கோவால்ஜி! அரசு நிறைய தப்பு செய்து விட்டது. அதற்குப் போட்டி போட்டுக் கொண்டு நிலைமையை நீங்கள் மோசமாக்குவது யாருக்கு லாபம்? இந்தத் துவேஷப்பிரசாரத்தைநிறுத்தநீங்கள் முயல வேண்டாமா? வன்முறைகளைக் கண்டிக்க வேண்டாமா? பிந்திரன்வாலேயின் நடவடிக் கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண் டாமா? அகால்தக்துக்குள்போய்உட்கார்ந்து கொள்ள அவனுக்குச் சிபாரிசு செய்தது உங்கள் கட்சிக்காரர் தோஹ்ரா தானே?"

ஓ இந்தப் பிள்ளை அநாவசியக் கேள்வி களை கேட்கிறான் என்று மெல்லிய எரிச்ச லுடன் லாங்கோவால் குரலே உயர்த்தாமலே சொன்னார்:

"தானே் ஊதினால் என் வாய் வலிக் குது. அதனாலே காற்றை ஊத ஒரு சீடனை அமர்த்திட்டேன்..."



* சீக்கிய மதத்தினரின் தலையாய ஆட்சி.

"இதோ பார்! மற்றவர்களின் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பில்லை. என் வரையில் நான் கண்டித்துக் கொண்டு தான் இருக்கிறேன். வன்முறைப் பசி ஜனங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பிறகு என் சமாதானப் பேச்சு யார் காதிலும் விழாது. இந்த மாதங்களில் குயில் சத்தம் நாள் முழுவதும் கேட்கும். இப்பொழுது துப்பாக்கி சத்தம் கேட்கிறது. இந்த நிலைமைக்கு அரசாங்கம்தான் காரணம்...!"

மன்மோஹன் ஸிங் சரேலென்று எழுந்தான். எழுந்த வேகத்தில் கோபமோ, அலுப்போ தெரிந்தது. அதைச் சட்டை செய்யாமல் அவர் புன்னகை புரிந்தார். "அரசாங்கம் எங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால் தான் சீக்கியர்களுக்கு எங்கள் மேல் நம்பிக்கை வரும். நம்பிக்கை வந்தால் ஆதரவு கிடைக்கும். நாங்களும் தலைநிமிர்ந்து நிற்க முடியும். வன்முறையைத் தைரியமாகக் கண்டிக்க முடியும். நாங்கள் உதவாக்கரைகள் என்று பிந்திரன்வாலே சொல்லிக் கொண்டிருக்கிறான். ஜனங்களின் மனநிலையை அனுசரித்து நாங்கள் செயல்பட வேண்டும்...

"மறுபடியும் மோர்ச்சா கிளம்பப் போகிறீர்களா? தர்மயுத்தம் என்கிற பெயரில்?"

அவனது கிண்டலைக் கவனிக்காதவர் போல் அவர் சிரித்தார்.

**என்.டி. ஆரின் ஏக்கம்**

"எம். ஜி. ஆர். அமெரிக்காவுக்குச் சிகிச்சை பெறச் சென்றிருந்த பொழுது மத்திய அரசு அவருக்கு தாராளமாய்ச் செலவு செய்து கொள்ள அனுமதித்தது. அவருக்குத் தனி விமான வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தது. ஒரு டாக்டர் குழுவே உடன் சென்றது. ஆனால் நான் அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்காகச் சென்ற பொழுது என்னுடன் வர ஒரு உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்பட்டார். எனக்கு ஒரு நாளைக்கு 35 டாலர் தான் செலவு செய்து கொள்ள மத்திய அரசு அனுமதித்தது. என்னை ஒரு கூலியைப் போல நடத்தியது" என்று என்.டி.ஆர். வருத்தத்துடன் கூறியுள்ளார்.

ஆதாரம்: "கரண்ட்"

தகவல்: வாசுதேவன்



"வேறு வழியில்லை! கிளம்புகிறாயா? என் சிநேகிதர்கள் காத்திருக்கிறார்கள்!"

சற்று நேரத்தில் அவரைச் சந்திக்க வந்த பாதல், பல்வந்த் ஸிங், பர்னாலா, தோஹ்ரா ஆகியோர்களின் முகத்தில் தீவிர யோசனை தெரிந்தது.

"பஞ்சாப் கேஸரியின் எடிட்டர் ரமேஷ் சந்தர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்".

லாங்கோவால் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

"ஜகத்நாராயணனின்** பிள்ளையா? தந்தையைக் கொன்றது போதவில்லையா?"

நேற்றைய பஞ்சாப் கேஸரியில் ரமேஷ் சந்தர் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது.

"யாருடைய முறை அடுத்தது என்று சொல்வதற்கில்லை. பஞ்சாப் கசாப்புக் களமாகிவிட்டது". அகாலிகளின் நியாயமான கோரிக்கைகளை ரமேஷ் சந்தர் முழு மனத்துடன் ஆதரித்தவர். லாங்கோவாலின் அடி மனத்தில் ஒரு சில்லிப்பு ஏற்பட்டது. இது பிந்திரன்வாலேயின் வேலைதான். நிச்சயம்.

"நிலைமை மிக மோசமாக இருக்கிறது" என்றார் பாதல். "இந்தச் சமயத்தில் நமது ஒத்துழையாமை மோர்ச்சாவை வைத்துக் கொள்வது சரியில்லை. பெரிய கலவரம் ஏற்படலாம்."

பல்வந்தும் பர்னாலும் அவரை ஆமோதிப்பது போல் தலையாட்டினார்கள்.

தோஹ்ரா தீவிரமாக மறுத்தார். "பிந்திரன்வாலேயின் ஆதிக்கம் அத்து மீறிப் போய் விட்டது. நம் ஆதரவாளர்கள் அவன் பக்கம் போய்விட்டார்கள். அவர்களை நம் பக்கம் இழுக்க மோர்ச்சா ஒன்றுதான் வழி. மத்திய அரசை வழிக்குக் கொண்டு வரவும் அதுதான் வழி".

நேற்று பிந்தரன்வாலேயிடம் சமாதானப் பேச்சுப் பேசப் போய் தோஹ்ரா நன்றாகக் கட்டிக்கொண்டு வந்தது லாங்கோவாலுக்கு ஞாபகம் வர மெல்லிய குரலில் தீர்மானமாகச் சொன்னார்.

"ஆமாம் மோர்ச்சாவைத் தவிர வேறு வழியில்லை".

அன்று இரவு தன்னுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த மன்மோஹன் ஸிங்கிடம் குருசரன் ஸிங் சொன்னார்:

"முட்டாள்கள்! இப்போது இவர்களைப் பற்றியா மத்திய அரசுக்குக் கவலை? அதனுடைய பிரச்னை பிந்திரன்வாலே ஒருத்தன்தான்!"

உண்மையிலேயே புயலில் மாட்டிக் கொண்டாற்போல் இருந்தது மன்மோஹன் ஸிங்குக்கு.

(தொடரும்)

** லாலா ஜகத் நாராயண் (ஹிந்து) பஞ்சாப் கேஸரி என்ற பிரபல தினசரியின் ஆசிரியர். பிந்திரன்வாலேயின் எதிரிகளான நிரங்காரிகளை ஆதரித்து எழுதினார் என்பதால் கொல்லப்பட்டார். ('81). அவருடைய மகன் ரமேஷ் சந்தர், பிந்திரன்வாலேயைத் தாக்கி எழுதியதால் ('84) கொல்லப்பட்டார்.



ஆபீஸில் இன்னொரு நாள் மூச்சு முட்டற வேலே...
பஸ்ஸுலே வீடு திரும்பறப்போ விழிபிதுங்கற
கூட்டம். அப்பாடி! வீட்டுக்கு வந்தா அலுப்புத்தீர
குளியல், களைப்பினைப் போக்கி
புத்துணர்ச்சியூட்டும்தம்ளர் ஹார்லிக்ஸ்.
Horlicks
The Great Nourisher
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

## வாசகர் பங்கு

### இனி ஜூன் ஒரு பிரச்னையில்லை

என் மூன்று குழந்தைகளுக்கும் பாடப் புத்தகங்கள் நோட்டு வாங்க ஒரே நேரத்தில் செலவு வந்து விடுகிற சிரமத்தைத் தவிர்க்க அஞ்சலகச் சேமிப்புத் திட்டத்தில் மாதா மாதம் ரூ. 20 போட்டு வந்தேன். இப்போ தெல்லாம் ஜூன் மாதம் ஒரு பிரச்னையாக இருப்பதில்லை.

—என். திலகவதி, மன்னார்குடி.

### தூண்டிலில் சிக்கிய மணி

மாலையில் வீட்டுக்கு வந்த போது குழந்தை கழுத்துச் சங்கிலியின் மைய மணியைக் காணோம் என்று மனைவி பரபரத்தாள். கவனித்தால் உறங்கும் என் பெண் குழந்தை மூக்கினுள் பொதிந்திருந்தது. பதறிப் போனேன். மருத்துவரிடம் போனால் தூண்டில் போட்டு மீன் பிடிக்கிற மாதிரி அதைச் சுண்டி இழுத்தார். பிரச்னை தீர்ந்தது.

—சி. சுவாமிநாதன், பந்தநல்லூர்.

### சைக்கிள் டூர்

மறுநாள் கோவில் கும்பாபிஷேகம். வைபவத்திற்காக வாங்கி வைத்திருந்த வாண வெடிகளையோ, பஸ் கண்டக்டர் பஸ்ஸில் ஏற்ற மறுத்தார். சமயோசிதமாக என் நண்பர்கள் நால்வர் சமாளித்தனர். ''கள்ளக் குறிச்சிக்கு நாம நாலு பேரும் சைக்கிள் டூர் போவோம்பா. நீ வெடியைத் தூக்கி காரியரிலே வை'' என்றனர். வைபவத்தில் வாணம் வெடித்தபோது நண்பர்களை வாழ்த்தினேன்.

—சுதாமகன், பாண்டிச்சேரி—3.

### பென்சிலே நீ வாழ்க!

ஒரு நேர்முகப் பேட்டியில் சுருக்கெழுத்துத் தேர்வில் வென்றால் தான் வேலை. பரீட்சை செய்யும் அதிகாரி வேகமாகச் சொல்லிக் கொண்டு போனார். என்னால் தொடர முடியவில்லை. கிடைக்காது வேலை என்று பயந்தேன். பட்டென்று பென்சில் முனையை உடைத்து விட்டேன். பென்சில் முனை உடைந்து விட்டது என்று சொல்ல, சற்று நிறுத்தி நேரம் கொடுத்தார். சமாளித்து எழுதினேன். வேலை கிடைத்தது.

—டி. வி. மீனாட்சி, சென்னை—93.


### இரவில் உறக்கம் வருவதில்லையா?

பல நாட்கள் இரவில் உறக்கமின்றித் தவித்த நான் ஒரு நாள் ஒரு புத்தகத்தை எடுத்து இரவில் படித்தேன். என்னையறியாமல் தூங்கிவிட்டேன். உறக்கம் வராத பிரச்னையைச் சமாளிக்க இப்போது வழி கண்டுபிடித்து விட்டேன். உங்களுக்கும் சிபாரிசு செய்கிறேன். படியுங்கள். தூங்கி விடுவீர்கள்!

—பி. எஸ். பகவந்தம் குப்தா, வேலூர்—12.


### வளர வளர ஒரு பிரச்னை

என் மகளுக்கு அடர்த்தியான தலைமுடி. அவளுக்கு தலை கசக்கி வாரிப் பின்னி விடுவதற்குள் தோள் இற்றுவிடும். தலையில் ஈறு வைத்துவிட்டால் சொல்லவே வேண்டாம். இருந்தாலும் மனம் தளராமல் அவள் முடியழகிற்காக எல்லாவற்றையும் பொறுத்திருந்














தேன். அவளை ஒருநாள் ''நான் 'பாப்' வெட்டிக்கறேம்மா'' என்று பிடிவாதம் பிடித்து என் பிரச்னையைத் தீர்த்தாள்.

—எஸ். விஜி, சென்னை—18.

## சாந்தோபதேசம்

கடைநிலை ஊழியர் சொன்ன வேலையைச் செய்யவில்லை என்று கிளார்க் அடித்துவிட்டார் என் அலுவலகத்தில். விஷயம் பரவி ஸஸ்பென்ஷன், ஸ்ட்ரைக், என்று விகவ ரூபம் எடுப்பதாகப் பயமுறுத்திற்று. நான் இரண்டு சாராரையும் கூப்பிட்டு இதமாய்ப் பேசினேன். பிரச்னை தீர்ந்தது.

—என். டி. விஜயகுமார், மதுரை—7.

## நகை போட்டால் போதுமா?

லாபரெட்டரியில் கெமிஸ்ட்ரி செய்முறைத் தேர்வில் வெள்ளை உப்பு தான் தரப்பட்டது.என்னதெரியவில்லை. திணறினேன். வியர்த்து விட்டது. என் தோற்றத்தைப் பார்த்துப் புரிந்து கொண்ட எக்ஸாமினர் கோல்ட் நகை போட மட்டும் தெரியறது என்றார். எனக்குச் சட்டென்று புரிந்தது **Golden Yellow Spangle Test** செய்யவில்லையென்று. செய்து பார்த்தேன். சரியான விடை கிடைத்தது.

—ஆர். சீதா, பாண்டிச்சேரி—1.

## மனக்கதவை உரக்கத் தட்டுங்கள்

ஆறு மாதம் வேலைக்காரிக்கு அலைந்து ஒருத்தியைக் கண்டுபிடித்தோம். 15 நாளில் அவள் திருட ஆரம்பித்து விட்டாள். என்ன பண்ணுவது? அவளை ஒருநாள் கூப்பிட்டு வைத்து உன் மாதிரி நாணயமாக எல்லோரும் இருந்தால் உலகம் சீர் திருந்திடும்மா என்று ஐஸ் வைத்து அவள் உழைப்பைப் புகழ்ந்தேன். அவள் திருந்தி விட்டாள்.

—லலிதா சங்கர், சென்னை—28.

## சாமியே சரணம் ஐயப்பா

வருஷா வருஷம் நான் சபரிமலை போகிறவன். அந்த வருஷம் என் மூத்த மகனும் வர ஆசைப்பட்டான். நாங்கள் மாலை போட்டுக் கொண்டதும் எனக்கு மதுரா கோட்ஸில் வேலை கிடைத்துவிட்டது. வேலைக்குப் போனால் மலைக்குச் செல்ல லீவு கிடைக்காது. மலைக்குப் போனால் வேலை தவறிவிடும். மதுரா கோட்ஸ் மானேஜரிடம் விளக்கினேன். சபரிமலைக்குப் போய் வந்த பிறகு 'ட்யூட்டி'யில் சேர அனுமதியளித்தார்.

—வி. வெங்கடராமன், மதுரை—10.

## அன்புக்கு உருகிய பகைமை

எதற்கெடுத்தாலும் வீண் சச்சரவு செய்து வந்த என் தாத்தாவின் பக்கத்து நிலத்துக்காரர் தம் வீட்டுத் திருமணத்திற்கு ஏனோ தானோவென்று அழைப்பிதழ் கொடுத்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நல்ல அன்பளிப்பு செய்து திருமணத்தை முன்னின்று நடத்திச் சாப்பிட்டு வந்தார். பக்கத்து நிலத்துக்காரர் மனம் மாறி சுமுகமாகிவிட்டார்.

—டி. திருமலைபதி, திண்டுக்கல்.

**வாசகர் பங்கு**

### தண்ணீர் பிடிப்பதற்குள்

பெங்களூருக்கு முதன் முறையாகப் போகிறோம் அப்போது. காட்பாடியில் தண்ணீர் பிடிக்க இறங்கிய கணவர் வருமுன் ரயில் புறப்பட்டு விட்டது. நேரே பெங்களூர் சென்று ஸ்டேஷனிலிருந்து கிளை ஆபீஸுக்குப் போன் செய்தேன். ஆபீஸ் நண்பர் வந்து அழைத்துச் சென்றார். அதற்குள் பஸ் பிடித்து அவரும் வந்துவிட பிரச்னை தீர்ந்தது.

—திருமதி விஸ்வநாதன், அண்ணாநகர்.

### சமாதான ஒப்பந்தம்

நான் குடியிருக்கும் பிளாட்டின் பின்புறம் கழிவுநீர் பாய்ந்துவரும். ஒட்டியே எங்கள் சமையல் அறை. மாடி வீட்டுக்காரர்களிடம் கத்தி வாய் வலித்ததுதான். மிச்சம். ஒரு நாள் ஒரு யோசனை தோன்றிச் சமாதானமாகப் பேசி வீட்டிற்குள் அழைத்து வந்தேன். "நீங்கள் இந்தச் சூழ்நிலையில் எப்படிச் சமையல்செய்வீர்கள்?" என்றுசிரித்துக்கொண்டே கேட்டேன். அவர்கள் மனத்தில் பட்டுவிட்டது. இப்போது கழிவுநீர் வருவதில்லை.

—எம். கனகம், சென்னை—28.

### நான் சர்தார்ஜி அல்ல!

இந்திராகாந்தி இறந்த மறுநாள், கரோல் பாகில் ஒரு கடையில் சாமான் வாங்கிக்கொண்டு பஸ்ஸில் திரும்பினேன். நடுவழியில் நூறு பேர் கையில் தடி, கம்பியுடன் பெட்ரோல் டின் என்று பஸ்ஸை வளைத்துக்கொண்டார்கள். நான் சர்தார்ஜி என்று நினைத்து அடிக்க வரும்போது நான் கையில் வாங்கி வைத்திருந்த விபூதிப் பொட்டலத்தையும் மார்பிலிருந்த பூணூலையும் காட்டினேன். மதராஸி பண்டிட்ஜி என்று விளக்கிய பிறகுதான் விட்டார்கள்.

டி. மஹாராஜன், நியூடெல்லி—21.

### அணிலுக்கு அபயக்கரம்

புகைபோக்கி வழியாகத் தூசு வருவதால் புகைப்போக்கியின் கீழ்த் துவாரத்தை ஒரு பலகையால் ஆணி அடித்து மூடிவிட்டோம். ஓர் அணில் குஞ்சு அந்தப் பலகை மேல் விழுந்து விட்டது. மேல் துவாரம் 15 அடி உயரம். மனசு பதைத்தது. ஒரு கயிற்றைக் கட்டி 15 அடி நீளத்திற்கும் மேலேயிருந்து கீழே விட்டோம். அணில் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வந்து விட்டது.

எஸ். ராமநாதன், திருநெல்வேலி.

### அட்மிஷன் கிடைத்தது

நான் படித்த பள்ளியிலேயே என் மகனையும் சேர்த்து விடலாம் என்ற நம்பிக்கையில் அங்கே அழைத்துச் சென்றேன். அட்மிஷன் முடிந்து விட்டது என்று தீர்த்துச் சொல்லி விட்டார்கள். செய்வதறியாது திகைத்த நான் ஆபீஸ் அறையிலிருந்து வெளியே வந்தவரை பார்த்தேன். நான் படித்த ஆசிரியர். என்னை அடையாளம் கண்டுகொண்டு முன் நின்று என் மகனுக்கு அட்மிஷன் வாங்கிக் கொடுத்தார்.

—சந்திரா கோபால், சென்னை—61.

### வாடகை தீர்த்த பிரச்னை


சொந்தத் தொழிலில் நஷ்டமடைந்த பின் சம்பளத்திற்கு வேலை செய்யப் போனேன். வருமானம் போதவில்லை. பாகப் பிரிவினைக்குப் பின் கிடைத்த வீட்டில் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டுவிட்டு எங்கள் தேவையைச் சுருக்கி மறு பாதியில் குடியிருந்தோம். ஒரு நிரந்தர வருமானம் பிரச்னையைத் தீர்த்தது.

—சி. மாணிக்கம், சிவகாசி.

ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடவையை குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

வி. வெங்கடராமன்,
ஏ—7/16, மேலப் பொன்னகரம் 2—வது தெரு,
மதுரை—10.


"ராதா! வாழ்ந்தால் நாம் இருவர் சேர்ந்தே வாழ்வோம்..."
"இல்லாவிடில்...?"
"நானும் சுஜாதாவும் சேர்ந்து வாழ்வோம்..."



PHILIPS

# பிலிப்ஸ்

# தோற்றத்தில் எல்லா பல்புகளும் ஒன்றுதான்




# ஆனால், பிலிப்ஸ் எனும்போது தரம் பளிச்சிடும்

தோற்றத்தைக் கண்டு பொருளை நிர்ணயிக்கலாமா? தரத்தினைப் பற்றியும்
நம்பகம் வேண்டும். பிலிப்ஸ் பல்புகளையே வாங்கிட உறுதிகொள்வீர்.
அதன்மூலம், நீடித்திருக்கும் பளிச்சிடும் வெளிச்சம் உங்களுக்குக்
கிடைக்கிறது; உங்கள் பணத்திற்குத் தகுந்த மதிப்பும்கூட.

பிலிப்ஸ் பல்புகள், தரம்பற்றித் தெரிந்தவர்கள்,
தோற்றத்தால் மயங்கலாமா?

PEI-1284

பிலிப்ஸ்-ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

# மோகினித் திருக்கோலம்




## 31

### கண்டேன் திருமலையை

பெரிதாகக் கிளை கப்பியிருந்த புன்னை மரங்களின் நிழலில் வேன்ஸான் கவலையில்லாதவர் போல் சயனித்திருந்தார்.

வர்மனைக் கண்டதும் உடம்பைத் தளர்த்தி எழுந்து உட்கார்ந்தார்.

இங்கே எப்படி வந்தார்? ஏன் வந்தார்? வர்மனின் கேள்விகள் சரங்களாக வந்தன

சிரித்தார் வேன்ஸான். "தம்பி, உடன் படிக்கைக் குழு என்னை இங்கே அனுப்பித்திருக்கிறது. கார்வேட் ராஜாவின் சித்தம் அறிந்துவிட்டு வரும்படி!" என்றார் அவர்.

"அதற்குத் தாங்கள் ஜமீன்தார் மாளிகைக்கு அல்லவா போக வேண்டும்?" என்றான் வர்மன்.

"அதுவும் உண்மையே! அதற்கு முன் எனக்கு ஒரு ஆசை! ஏழுமலையானை ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும்!" என்றார் வேன்ஸான்.

"ஏழுமலையானையா? தாங்களா!" என்றான் வர்மன். "நீங்கள் வழிபடும் சித்தாந்தமே வேறு ஆயிற்றே! உருவ வழிபாட்டை மறுப்பவர்கள் ஆயிற்றே! உங்கள் கடவுளை மாத்திரம் நம்பினால்தான் மோட்சம் என்று சொல்பவர்கள் ஆயிற்றே!" என்று அடுக்கினான் வர்மன்.

"அதனால் என்ன? இப்போதுதானே கிறிஸ்துவை வழிபடுகிறேன். பத்து வருஷங்களுக்கு முன்னால் நான் பரம வைஷ்ணவன் ஆயிற்றே. என் பூர்வ வாசனை போகுமா, என்ன?" என்றார் வேன்ஸான்.

"அப்படியானால்வாருங்கள்! நான் திருமலைக்குத்தான் போகிறேன்!" என்றான் வர்மன்.

அவ்வளவில் வேன்ஸான் எழுந்து இரண்டு குதிரைகளையும் அழைத்துப் போய், பக்கத்து சத்திரத்தில் ஒப்படைத்துவிட்டு வர்மனோடு புறப்பட்டார்.

ஆழ்வார் தீர்த்தம் நெருங்கிய உடன் தான் திருமலையின் அடர்த்தியான காடுகளின்ரகமான வியாபிப்பு கணத்தில்பிரமை கொடுத்தது. இருவரும் வடக்காகப் புறப்பட்டு ஆழ்வார் தீர்த்தத்தை அடைந்தார்கள்.

அங்கே மனைவியை இழந்தவர்களும், தந்தையை இழந்தவர்களும் கட்டாய மொட்டை போட்டுக் கொண்டு தீர்த்தத்தில் குளித்தார்கள்.

வர்மனும், வேன்ஸானும் மொட்டை போடாமல் தீர்த்தத்தில் மட்டும் குளித்துவிட்டு மலைச்சாரலில் நடந்து பிறகு மேலே நோக்கி ஏறத் தொடங்கினார்கள்.

வர்மன் மௌனமாக அந்த மலைவனப்பின் அரிய வர்ணங்களில்மனத்தைக்கொடுத்திருந்தான்.

மாக்கல் பாறைகளும், சரளும் படிந்த பாதையில் சற்று பிரயாசையாய் ஏறி காலி கோபுரத்தின் வாசலுக்கு வந்தனர்.

வர்மன் வியர்வை சிலுக்கு முகத்துடன் வேன்ஸானை ஏறிட்டுப் பார்த்தான்.

வேன்ஸான் வெறும் நடையில் கூடத் தியானம் பயில்வது போல் இருந்தது.

முகத்தில் மென்மை, பரந்த அமைதி! கண்ணில் ஊடுருவும் நோக்கு! முழு ஆகிருதியிலுமே ஏதோ லட்சியம் ஜொலிப்பது போல் சமைவு.

"துரை!" என்று வர்மன் அழைக்க, சட்டென்று பிரமை கலைந்த வேன்ஸான், "தம்பி! துரை என்று அழைக்காதே! அன்னிய சமயத்தவன் என்று என்னை மேலே ஏற விட மாட்டார்கள்!" என்றான்.

"ஓகோ, விட மாட்டார்களா?" என்றான் வர்மன் ஆச்சரியத்துடன்.

"அதோ பார்! ஆட்கள் இருக்கிறார்கள். கோவில் காவலாளி, நவாபு சர்க்கார் தொழிலாளி, கம்பெனிக் காவலாளி, இன்னும் எத்தனை பேருக்குத் திருமலை சொத்து மீது நாட்டம் இருக்கிறதோ அத்தனை பேரின் காவலாளிகளும் அங்கே நிற்கிறார்கள்."

வர்மன் பார்த்தான்.

கோபுர நிழலில் அத்தனை பேரும் கூட்டமாய்த் தரையிலும், பாறையிலும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

"வர்மா!பின்னால்திரும்பிப்பார்!என்றார், வேன்ஸான்.

மூச்சை நிறுத்தும் அழகில் அந்தத் திருப்பதி இறக்கம் அவனைத் திகைக்க வைத்தது.

திருப்பதி ஊரையே காணவில்லை.

தோப்புகளும் உபவனங்களும் அதை மூடியிருந்தன.

கோவிந்தராஜப் பெருமாளின் கோபுரம் மட்டும், பசுமைகளுக்கு மேலே தலையை நீட்டித் தெரிந்து கொண்டிருந்தது.

தூரத்தில் சுவர்ணமுகி ஒரு கீற்று மின்னல் போல் வெய்யிலில் தகதகத்துக் கொண்டிருந்தது.

"இதுதான் திருச்சுகனூர் (திருச்சானூர்)! கோபுரம் தெரிகிறது பார்!" என்று வலப்

புறத்தில் கைநோக்கிக் காட்டினார்.

தூரத்தில் சந்திரகிரிமலையும் அதன் அரண் மனைகளும் மெல்லிய திரையில் தெரிவது போல் மங்கித் தெரிந்தன.

கோபுரத்தை அடைந்தார்கள்.

காவலாளிகள் அவர்களது நெற்றியைப் பார்த்தார்கள்.

வர்மன் நாமமும், வேன்லான் ஸ்ரீசூர்ண மும் போட்டிருந்தார்கள்.

"ம், துக்காணி கொடுங்க!" என்றார் காவ லாளி.

.மலைமேல் ஏறுகிறவர்கள் எல்லாரிடமும் 24 துக்காணி வசூலித்தார்கள். (ஒரு துக் காணி இரண்டு காசுகள்).

மலையடிவாரத்தில் ஏற்கெனவே டோலி வாலாக்கள் அவர்களை முற்றுகை இட்டு விட் டார்கள்.

அவர்களில் பலர் காலி கோபுரம் வரை வியாபித்து இருந்தார்கள்.

இந்த முதல் ஏற்றம் ஏறிய பல யாத்திரி கர்கள் அயர்ந்து போய் டோலி அமர்த்திக் கொண்டனர்.

நீண்ட கழி நடுவில் தொங்கும் ஊஞ்சல் போன்ற அமைப்பில் ஆளை உட்கார்த்திக்





''இவர் பழம் பெரும் எழுத்தாளர்!''
''அப்படியா?''
''ஆமாம். 1942—ல் நாலு துணுக்கு எழுதியிருக்கார்!''

— ஏ. சுகுமார்.

கொண்டு, இரு டோலிக்காரர்கள் படியின் இரு ஓரங்களிலும் நின்று கொண்டார்கள். ஒருவர் ஒரு படியில் காலை வைக்க, மற்றவர் அவரைத் தொடர்ந்து அதே படியில் காலை வைத்துக் கொண்டார்.

டோலியில் உட்கார்ந்திருப்பவருக்கு படி நடுவில் ஏறிப் போவது போல் பிரமை.

அந்த விநோதப் பிரயாணங்களைப் பார்த்த வாறு வர்மன் மேலே ஏறினான்.

படிகளின் உட்புறங்களில் பிச்சை எடுப் பவர்கள் அங்கங்கே திட்டுக்களாக உட்கார்ந் திருந்தார்கள்.

ஏறுபவரும் இறங்குபவரும் எங்கும் சல சலத்த வண்ணம் இருந்தார்கள்.

தமிழர்கள், தெலுங்கர்கள், கன்னடியர் கள், குஜராத்திகள், மராட்டிகள், கோசாயி கள், பைராகிகள், யோகிகள் என்று பல திறப்பட்ட மனிதர்களைச் சந்திப்பது அவ னுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'கோவிந்தா, கோவிந்தா' என்ற முழக் கங்கள் ''சிவீர் சிவீர்'' என்று அங்கங்கு தெளித்துச் சிதறின.

எதிர் எதிர் யாத்திரிகர்கள் சந்திக்கும் போது, ஏதோ வாட்கள் சந்தித்தாற்போல 'கோவிந்தா' கோஷம் உக்கிர நெருப்புப் பொறி போல் அதிகப் பிரகாசமாக வெளி வந்து சிதறியது.

அம்மையார் கோனேறு (அவசாரிகோனு) வந்தபோது யாத்திரிகர்கள் சற்று கவனம் அடைந்து நாலா பக்கமும் பார்த்தார்கள்.

அந்நாளில் திருமலைக்காடுகளில் யானை கள், சிறுத்தைகள், புலிகள், காட்டெருமை கள் எல்லாம் உலாவின.

மனித நடமாட்டத்தின் அருகில் அவை வருவதில்லை என்றாலும், ஏதாவது தனி மிருகம் தப்பித் தவறி வந்து விடப் போகிறது என்று கவலை கொண்டார்கள்.

அந்தக் கணவாயும் அதன் இறக்கமும் இரக்கம் தரும் ஒரு காட்சியைக் கண் முன் நிறைத்தன. வாழை, பலா, தேக்கு, கோங்கு, மஞ்சாடி என்று பலவகை மரங்கள் பலவித இலை வியாபகங்களாகத் தெரிய, ஒரு ராட் சதக் கிண்ணக் குழியில் பலவித வர்ணங் களை தீற்றி வைத்திருப்பது போல் பிரதேசம் பூராவும் வண்ணத் துகிலாகத் தெரிந்தது.

பசுமையான கண்ணாடிக் காற்று எங்கும் மென்மையாக ஓடியது. முகர்ந்த போது ஆரோக்கியமே உள்ளே பாய்வது போல் ஒரு அதிசய பிரமை கொடுத்தது.

இறங்கி இறங்கி அடிவாரம் போகும்வரை எளிதாக இருந்தது.

அதன் பிறகு ஏறும் போது, அந்த மேடு தான் சிரமத்தைக் கொடுக்கத் தொடங்கி யது. மூச்சு வாங்கியது. வியர்வைகள் திவலை களாகத் தெளித்தன.

''இந்த மேட்டைத்தான் 'முழங்கால் முறிப் பான்' என்பார்கள்'' என்றார் வேன்ஸான்.

''முழங்காலை மட்டும் முறிக்கவில்லை. மூச்சையும் முறிக்கிறது'' என்றான் வர்மன் வாய்விட்டு மூச்சை விட்டான் அவன்

இருவரும் மௌனமானார்கள்.

அரை முகூர்த்தமாய்ப் பிரயாசையாக மேட்டில் ஏறி மேலே நின்ற போது, முக மெங்கும் சிலிர்த்தது.

இளைக்க இளைக்க இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்தார்கள்.

வழியெல்லாம் தங்குவதற்குச் சிறு சிறு மண்டபங்கள் வந்து கொண்டிருக்க, மேட் டின் உச்சியில் அத்தகைய மண்டபத்தோடு ஒரு சன்னிதியும் இருப்பதைப் பார்த்தான் வர்மன்.

''இதுதான் பாஷ்யக்காரர் சன்னதி! வா அங்கே சற்று களைப்பாறுவோம்!'' என்றார் வேன்ஸான்.

இருவரும் மண்டபத்திற்குப் போய் அமர்ந் தார்கள். காற்று மயிலிறகு போல் வருடியது. அந்த ஆயாசத்தில் காலை நீட்டிப் போட்டுத் துவள விட்ட சுகத்திற்கு வைகுந்தம் கூட இணையாகாது போல இருந்தது.

சன்னதி அந்த நேரத்தில் அடைத்துக் கிடந்தது.

''பாஷ்யக்காரர் சன்னதி என்றீர்களே! அது என்ன சன்னதி?'' என்றான் வர்மன்.

''ராமானுஜ சுவாமிக்கு அப்படி ஒரு பெயர்!'' என்றார் வேன்ஸான்.

''யார் ஆசாரியர் ராமானுஜரா?'' என் றான் வர்மன்.

''ஆமாம். அவருக்குத்தான் அந்தப் பெயர். பாஷ்யக்காரர் என்றால் உரை செய்தவர் என்று பொருள்!''

''ராமானுஜர் உரை ஏதாவது எழுதி னாரா?''

''ஆமாம் தம்பி! ஆள்தான் வளர்ந்திருக் கிறாயே தவிர, எதுவும் தெரியவில்லையே! 'பிரம்ம சூத்திரம்' என்பது ஒரு மெய்ஞான நூல்!''

''சரி!''

''நமது நாட்டில் உள்ள எல்லாச் சமயத் தவரும் இந்த நூலுக்கு உரை எழுதுவதை ஒரு முக்கிய வேலையாக வைத்துக் கொண் டிருக்கிறார்கள்!''

''ஓகோ! ராமானுஜரும் உரை எழுதி னார்!''

''ஆமாம்! ஸ்ரீ பாஷ்யம் என்று அதன் பெயர். அந்த நூலை வடித்த காரணமாய் ராமானுஜரை பாஷ்யக்காரர் என்கிறார் கள்.''

வர்மன் வேன்ஸானைக் கூர்ந்து கவனித்தான். "ஐயா! நீங்கள் இதற்கு முன் திருமலை பார்த்திருக்கிறீர்களா?" என்றான்.

"ஒரே ஒரேமுறை வந்திருக்கிறேன்! பத்து வருஷம் ஆகிவிட்டது."

வேன்ஸான் சிந்தனையாக சுற்றுப்புறம் பார்த்துப் பிறகு திரும்பினார்.

"தம்பி! இந்த மண்டபத்தில் இன்னொரு விசேஷம் உண்டு!"

"சொல்லுங்கள்."

"முதன் முதலில் ராமானுஜர் திருமலைக்கு வந்த போது அவரை அவரது மாமன் திருமலைநம்பி இங்கேதான் சந்தித்து உபசரித்தார்."

"அப்படியா?"

ஆச்சரியம் பொங்கக் கேட்டான் வர்மன்.

"ராமானுஜர் அப்போது திருமலைநம்பியைப் பார்த்து, 'தாங்கள் ஏன் வந்தீர்கள்? என்னைச் சந்திப்பதற்கு யாராவது சிறியவரை அனுப்பித்திருக்கக் கூடாதோ?' என்றார். அதற்குத் திருமலை நம்பி, 'சுவாமி! ஊர் முழுதும் தேடினேன். என்னை விடச் சிறியவன் யாருமில்லை!' என்றார்."

"ஆகா! என்ன தன்னடக்கம்?"

"அப்புறம் இங்கேதான் தம்பி, திருமலைநம்பி ராமானுஜருக்கு ராமாயணம் கூறி அதன் உள் அர்த்தங்களை எல்லாம் விவரித்தார்.."

"ஓஹோ அவ்வளவு மேன்மை வாய்ந்த இடமா இது!"

"ஆமாம்! இவைகளை எல்லாம் யார் இங்கே கவனிக்கிறார்கள்? இன்னொரு விசேஷம் சொல்கிறேன் கேட்கிறாயா?"

"சொல்லுங்கள்."

"இப்படி தென் கிழக்காலே போய்ப் பார்! அங்கே ஒரு மண்டபம் இருக்கிறது. கண்ட மண்டபம் என்று பெயர். பார்த்துவிட்டு வா! செய்தி கூறுகிறேன். நீ வரும் வரை இங்கே சற்று நான் இளைப்பாறியிருக்கிறேன்!" என்றார் வேன்ஸான்.

வர்மன் எழுந்தான்.

"அவர் காட்டிய திசையில் தூர்ந்து போன பாதை ஒன்று தெளிந்து கொண்டிருந்தது.

இடையில் சிறிது தூரம் போன பின்பு, பாதையின் சிறு சுவடு கூடத் தெரியாமல் இருக்க, அங்குமிங்கும் தேடி, மீண்டும் கண்டு பிடித்து செடி கொடி விலக்கி முன்னேறிப் போக,

கடைசியில் பழைமையான அந்த மண்டபத்தின் முகப்பு மரங்களின் உச்சிக்கு மேலாக லேசாகத் தெரிய ஆரம்பித்தது.

மகிழ்ச்சியுடன் அதை அவன் அணுக, திடீரென்று ஒரு விஸ்தார இடைவெளியும், அதில் அவனுக்குப் பழக்கமான ஒரு மனிதரும் தெரிந்தார்கள்.

ஆச்சரியப்பட்டு, "சுவாமி!" என்று சொல்ல, பராக்குப் பார்த்திருந்த அந்த வைணவ அந்தணரும் திடுக்கிட்டுத் திரும்பி, வர்மனை ஒரு விதமாகப் பரிச்சயம் கண்டு கொண்டு,

"உங்களை கார்வேட் அரண்மனையில் பார்த்திருக்கிறேன் அல்லவோ!" என்று கேட்டார்.

"ஆமாம், சுவாமி! என் பெயர் வர்மன்! என்னை கார்வேட் ராஜா திருமலைக்கு அனுப்பித்தார். கூடவே தங்களுக்கு ஒரு லிகிதமும் எழுதிக் கொடுத்திருக்கிறார்" என்று கூறி, சுருக்குப் பையை இடையிலிருந்து உருவி அதன் உள்ளிருந்து, ஓலை ஒன்றை வெளியே எடுத்து அவரிடம் நீட்டினான்.

ஓலையைப் படித்துவிட்டு சீனிவாசாச்சாரியார் சற்று யோசனையுடன் நின்றார்.

பிறகு, "வா தம்பி! நீ கார்வேட் ராஜாவின் அந்தரங்கன்! எனவே எனது அந்தரங்கன் கூட!" என்று சொல்லி அழைத்து,

புதர்கள் மண்டிய இடுக்குகள் வழியாக அவனை இட்டுச் சென்றார்.

பலதடங்கல்களைத்தாண்டி,மேலேநிறைய சிறாய்களைச் சம்பாதித்த வர்மன், கடைசியில் சீனிவாசாச்சாரியார் ஒரு பழங்கட்டடத்து முன்னால் நிற்பதைக் கண்டு அவரை அணுகினான்.

கட்டடத்துள்சென்றசீனிவாசர்ச்சாரியார் பரணிலிருந்து தீவர்த்தி எடுத்து, அரணிக் கட்டை மூலம் நெருப்பு உண்டாக்கி அதைப் பற்ற வைத்தார்.

பிறகு, தீவர்த்தியுடன், வர்மனை அழைத்து, கட்டடத்தின் பின்பக்கம் போய்,

ஒரு கல்லை நகர்த்தும்படி சமிக்ஞை செய்ய,

வர்மன், அப்படியே சென்று ஒரு துவாரம் உண்டாக்க,

மேலும் சில கற்களை அவர் கையால் நகர்த்தி, கடைசியில் தீவர்த்தியுடன் உள்ளே புகுந்தார்.

சிறு படிக்கட்டுகள்.

அவர் வெளிச்சம் காட்ட, அவன் இறங்கிச் சென்றான்.

கடைசியில் இருவரும், ஒரு சமதளத்தின் மீது நின்றார்கள்.

கண்ணைக் கொட்டிய வர்மன் எதிரே பொதி பொதிகளாக மூட்டைகள் அடுக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமுடன் பெரியவரை நோக்கித் திரும்ப,


"அவ்வளவும் ஏழு மலையானின் சொத்து!" என்றார் சீனிவாசாச்சாரியார்.

(தொடரும்)

"என்ன சார் இது ஆபீஸ் முடிஞ்சது தெரியாம அரை மணி நேரம் தூங்கினதுக்கு ஒவர் டைம் அலவன்ஸ் கேட்டால் எப்படி?"

— இளை அ. கதிர்வேல்.





அறிமுகப்படுத்துகிறோம்!

# புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்

## அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரணமளிப்பது மட்டுமல்ல, உண்மையிலேயே அதைத் தடுத்திட உதவுகிறது.

**நீங்கள் வேர்க்குருவைத் தடுக்க முடியும்போது அது தாக்கும்வரை ஏன் காத்திருக்க வேண்டும்?**

இப்போது, உங்கள் வேர்க்குரு பிரச்சினையைக் கட்டுப்படுத்த இன்னும் மிகத் தீவிரமான வழி— புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். அது வேர்க்குருவிற்கு விரைவாக நிவாரண மளிப்பது மட்டுமல்ல உண்மையிலேயே அதை தடுத்திட உதவுகிறது.

**புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஏன் மிகவும் தீவிரமானது?**

உங்களுக்கு அதிகமாக வியர்த்து, அந்த வியர்வை உங்கள் சருமத்தில் அதிக நேரம் தங்கியிருக்கும்போது, வேர்க்குருவின் தாக்குதலுக்கு நீங்கள் ஆளாகிறீர்கள். அதற்காகத்தான் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் மிகவும் தீவிரமானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சும் வண்ணம் விசேஷமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது அது— உங்கள் சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுக்கிறது— ஆகவே வேர்க்குரு இல்லை. எரிச்சல் இல்லை. நமைச்சல் இல்லை. அப்பாடா என்ன நிவாரணம்! அதற்குமேல் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், இப்போது மகிழ்ச்சிதரும் புதிய நறுமணமும்* கொண்டுள்ளது

வரும் கோடையில் வேர்க்குரு தாக்கும் வரை காத்திருக்காதீர்கள். விரைந்து வாங்கிடுங்கள் ஒரு பேக் புதிய ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். வேர்க்குருவை நீங்கள் தடுக்க முடியும்போது, வேர்க்குருவால் ஏன் சிரமப்பட வேண்டும்?

விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது மூன்றுவிதங்களில் செயல்படுகிறது.


- வியர்வையை நன்றாகவும் விரைவாகவும் உறிஞ்சுகிறது.
- சருமத்தில் பாக்டீரியாக்கள் பெருகுவதைத் தடுப்பதற்கான விசேட மருந்துக் கலவை கொண்டது.
- சருமத்தை குளிர்ச்சியாகவும் புத்தம் புதுமையாகவும் வைத்துக் கொள்கிறது. அதன் இதமான செயல்.




*சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

Johnson & Johnson

OBM-4181 TAM


முற்றும் புதிய கோலங்களில் என்றும் அழியாக் கலைவண்ணங்கள்!
லக்ஷ்மி சில்க் ஹவுஸுக்கு விஜயம்
செய்தாலன்றி உங்கள் பட்டுப்
புடவைகளின் தேவை நிறைவு
பெறுவதில்லை
வாருங்கள். 30,000க்கும் மேலான
அரிய படைப்புகளிலிருந்து
தேர்ந்தெடுங்கள்.
lakshmi
லக்ஷ்மி சில்க் ஹவுஸ்
பனகல் பார்க் எதிரில், தி. நகர், சென்னை 600 017.
உரிமையாளர் 'லக்ஷ்மி சில்க் ஹவுஸ் (சென்னை) & கோ.


ஐம்பதினாயிரம் தரேன்!..
ஹீரோவுக்கு 'டூப்'பா தெரு
வுலே உருண்டு புரண்டு
நடிச்சிடுங்க!.. ப்ளீஸ்!

# அநாகரிகத்துக்கு அழைப்பிதழ் விடலாமா?

'நீங்கள் கேட்டவை' பகுதியில் எழுத்தாளர் சங்கத்தைப் பற்றி ஒருவர் கேட்ட கேள்விக்கு, பகை உணர்வோடு, சற்றே நகை இழையோடும் பதில் சொல்லி இருக்கிறார் 'தராக'.

எழுத்தாளர் சங்கம், நம்முடைய சங்கம். அதைக் காயப்படுத்துவது நம்மையே காயப்படுத்திக் கொள்வதைப் போன்றது

வாசவன்,
பொதுச் செயலாளர்,
அனைத்து இந்தியத் தமிழ்
சென்னை—33 எழுத்தாளர் சங்கம்

* விஷம் போல் ஏறும் விலைவாசி—கட்டுரை படித்தேன். கடைத் தெருவில் மீன் வியாபாரம். ஒருவர் அந்த மீனை கிலோ பதினைந்து ரூபாய்க்குக் கேட்டார். ஆனால், வியாபாரியோ ரூ. 18—க்குத் தருகிறேன் என்று சொல்லி பேரம் நடக்கையில் மீன் வாங்க வந்த மற்றொருவர் (துபாய் நாட்டிலிருந்து சமீபத்தில் வந்தவர்) 'கிலோ என்ன விலை?' என்று கேட்க, வியாபாரி 'இருபது ரூபாய்' என்று சொல்ல—வாங்க வந்தவர் ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டி, 'இரண்டு கிலோ' என்று சொன்னார். விலைவாசி ஏற்றத்துக்கு இதுவும் ஒரு காரணம்.

தேரெழுந்தூர், சி. சுப்பு.

* கவிஞர் வைரமுத்து 'வாரம் ஒரு கடிதம் பகுதி' யில் (21.4.85 இதழ்) ''அரசாங்க ஊழியன் என்பவன் ஒன்றாம் தேதி மட்டும் உறங்காதவன்'' என எழுதியுள்ளார். அரசாங்க ஊழியன் உறங்குவதை நிறுத்தி எவ்வளவோ காலமாகிவிட்டது. காரணம் ஒன்றா? இரண்டா? வாங்கிய கடனுக்கு வட்டி கொடுக்க வேண்டுமே — மகளின் கல்யாணத்துக்கு என்ன செய்யப் போகிறோம் — இருக்கும் பணத்தில் அரிசி வாங்குவதா, பருப்பு வாங்குவதா என்பது போன்ற கவலைகள் ஆழ்ந்தத் தூக்கம் எப்படி வரும்?

மதுரை—20, ந. இராமசாமி

* ''கிராஸ் டாக்'' கேட்பது என்பது ஓர் அநாகரிகமான செயல். அப்படி யாரேனும் அக்காரியத்தைச் செய்து தங்களுக்குள் மகிழ்ந்திருந்தால் அதைப் பத்திரிகையில் வெளியிட்டு மற்றவர்களையும் ரசிக்க வைக்க (!) எண்ணுவது அதைவிட அநாகரிகமான செயல் என நான் கருதுகிறேன்!

தும்பா, க. ஜெயப்ரகாஜ்.

* ராஜீவிற்குச் சரியான விழிப்பு ஏற்பட 'சவுக்கைச் சொடுக்கினார்கள்' என்றதன் கீழ் அமைந்த தலையங்கத்தை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

லால்குடி, வி. ரவிகுமார்.

* ''விஷம் போல் ஏறும் விலைவாசி'' கட்டுரை சிந்தனையைத் தூண்டியது. பிரச்னையைச் சுட்டிக்காட்டித் தீர்வையும் சொன்னது பாராட்டுக்குரியது.

தஞ்சாவூர், பொன். நடனசிகாமணி

* இன்றைய ஒவ்வொரு அரசியல்வாதியும் ஆத்ம விசாரணை செய்து கொள்ள உதவும் உன்னதமான காரியம்தான் திரு ராஜ் மோகன் எழுதியுள்ள ''ராஜாஜி வாழ்க்கை வரலாறு''. அரசியலில் ராஜாஜி அவர்கள் ஒரு 'ராஜரிஷி' என்பதை நான்கு இதழ்களும் கட்டியங் கூறுகின்றன.

மதுரை—3, திருமதி தேவஜோதன்.

* வாசகர்கள் இரசித்த காட்சியை விவரிக்கும் போது பல்வேறு ரசனைகள் பரிமளித்தன.

அருப்புக்கோட்டை, பெடிக. தியாகராசன்.

* அறிவுக்கு விருந்தாக அமைந்த அறிஞர்களின் கருத்துக்களை இதழின் பல பக்கங்களில் வெளியிட்ட கல்கிக்கு எனது பாராட்டுக்கள்.

சென்னை—5, வி. கே. சுப்பிரமணியன்.

* இக்காலத்திலும் குடிசையிலேயே வாழ்ந்து வரும் எம். எல். ஏ. வின் பேட்டி சுருக்கமாக இருப்பினும் நறுக்கென்று கச்சிதமாக அமைந்து விட்டது.

திருமங்கலக்குடி, அ. கல்குல்ஜமால்.

* ஒரு விரல் அடுத்தவனைக் குற்றஞ் சாட்டும் பொழுது மூன்று விரல்கள் நம்மை நோக்கி உள்ளன என்பது பழமொழி. அரசாங்கத்தையும், அரசு நிறுவனங்களையும் குறை கூறத் தயங்காத நாம் எவ்வளவு தூரம் சரியாக நடந்து கொள்கிறோம்?

வாசக சாலையில் எடுத்த இடத்தில் புத்தகங்களை வையுங்கள் என்ற வரி யாருக்கோ எழுதப்பட்டது போல் நடந்து கொள்ளுவோம்; நமக்கு எப்பொழுதுமே தலை போகிற அவசரந்தான். பேருந்துகளில், மின் வண்டிகளில், இடித்துத் தள்ளித்தான் ஏறி இறங்குவோம்; சுரங்கப் பாதைகளைப் புறக்கணித்து நடு சாலையில் குறுக்காய் நடப்போம். சர்க்கரையினையும், சினிமா டிக்கட்டையும் அதிக காசு கொடுத்து வாங்கி பிளாக் மார்க்கெட்டை ஊக்குவிப்போம்; இப்படி இன்னும் பல. உன் நாட்டிற்காக நீ என்ன செய்தாய் என்று கென்னடி கேட்டார்; நம் நாட்டிற்காக ரத்தம் சிந்த வேண்டாம், நேர்மை நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளலாமே?

சென்னை—59, ராமாபுரம் சந்துரு.

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது)



# ஆகாச கங்கை

**19**

நாட்கள் மெதுவாக ஊர்வது போலத் தோன்றினாலும் வசுமதிக்குக் காலம் சுமையாகப்படவில்லை. நாளுக்குநாள் அரவிந்தன் தன் லட்சிய வீதியின் இருளில் நடக்கத் தொடங்குகிறான் என்ற எண்ணம் அவளுள் ஏற்படலாயிற்று. அபரிமிதக் காதல் காரணமாக அரவிந்தனை அவள் மாயாவுக்குத் தானமாக வழங்கியது இப்போது முட்டாள்தனமாகத் தோன்றவில்லை. அரவிந்தன் தன் மண வாழ்க்கையில் தவிப்பது அவளுக்குப் புரிகிறது. இதன் காரணமாகவே அவன் அவளிடமிருந்து தேவைக்கு மேல் எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான். பழைய காதல் உணர்ச்சிகளை அவன் தூண்டி விடுவதாக அவள் நினைத்தாள். இந்த நினைப்பே ஒரு விதத் திருப்தியையும், ஏன் மகிழ்ச்சியையும் கூட அளித்தது. வெறும் கொள்கையும் லட்சியமும் இக்காலத்துக்கு ஒவ்வாதது என்பதை அவள் உணர்ந்திருப்பதைப் போல, அரவிந்தனும் அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டிருக்கிறான். இனி மாயா இந்த ஜன்மத்தில் குணமடைந்து மண வாழ்க்கைக்கு ஏற்றதோர் மனைவியாகப் பிறவி எடுக்க மாட்டாள் என்று வசுமதி தினந்தோறும் ஒருமுறையாவது அரவிந்தனிடம்பேச்சோடு பேச்சாகக் கூறி வருவது மெல்ல மெல்லப் பலனை அளித்து வருகிறது.

மாயா முன்னொரு நாள் அவளைப் பலவந்தமாக வெளியேற்றினாள். அவளுடைய சாகசம் காரணமாகவும், அழுகை அலறல்கள் காரணமாகவும் வசு வெளியேறினாள். ஆனால் சில நாட்களிலேயே மீண்டும் மாயாவின் மனத்தை ஈர்த்து வசுமதி பழைய நிலைமைக்கு வந்து விட்டாள். மீண்டும் நம்பிக்கையும்வசுவின் மனத்தில்தழைக்கஆரம்பித்து விட்டது. ஆனால் அவள் ஓடக் கூடாது. அவசரப்படக் கூடாது. மெல்ல மெல்ல அடி அடியாகக் கால்களை எடுத்து வைக்க வேண்டும். அவ்வளவு எளிதில் அரவிந்தன் தன் தோல்வியை ஒப்புக் கொள்ள மாட்டான்.

வசுமதி அன்று அதி காலையிலேயே எழுந்து குளித்து, புடவை மாற்றிக் கொள்ளும்போது தற்செயலாகக்கண்ணாடியைப் பார்த்தாள். முகம் மட்டும் நன்றாகத் தெரியக் கூடிய அளவுக்குத் தான் கண்ணாடி இருந்தது. ஆனாலும் முகத்தின் பிரதிபலிப்பு அவளுடைய நெஞ்சை அறைந்தது. அவள் எப்படி இவ்வளவு விகாரமாய் மாறி விட்டாள்!

அவனே பெருமிதம் கொள்ளும் அளவுக்குக் கண்களில் ஒரு பூரிப்பு இருக்குமே? அது எங்கே காணோம்? சிரித்துப் பார்த்தாள். பற்கள் தெரிந்தனவே தவிர கண்கள் மலரவில்லை.

மனசுதான் காரணமா?

அவள் தினந்தோறும் குற்றம் செய்து கொண்டே வருகிறாளா?

திடீரென்று அம்மாவின் குரல் நாராசமாக எழுந்தது.

"ஏ, வசு!"

"இதோ வரேன்"



''காபி ஆறித் தொலையறது.''

நெற்றிப் பொட்டு சரியாக அமைந்திருக்கிறதா என்று மீண்டும் ஒரு தடவை கண்ணாடியில் பார்த்த வசுமதி கடிகாரத்தைக் கட்டிக் கொண்டாள். ஆறு. ஆறு இருபதுக்குள் அரவிந்தனுடைய வீடு. எட்டரைக்குப் புறப்பட்டால் ஒன்பது மணிக்கு ஸீனியர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடலாம். ஸீனியர் அவளை எட்டு மணிக்கு எதிர் பார்க்கிறார்.' ஒன்பது மணிக்கு வந்து ஒரு மணி நேரம் கூட வேலை செய்யாமல், அவருடைய காரில் கோர்ட்டுக்குப் புறப்படுவதை அவர் வெகுவாக ஆதரிக்கவில்லை. வீடு இந்திரா நகரில் இருப்பதால், சீக்கிரமே வந்தாலும் மறுபடியும் சாப்பிட வீட்டுக்குப் போய் அங்கிருந்து கோர்ட்டுக்கு வருவது சிரமமாயிருக்கிறது என்று அவள் முறையிட்டான்.

தாரக்ராமை மனத்தில் வைத்துக் கொண்டு கேஜிகேயும் ஒரு விதமாய்த் தலை அசைத்திருக்கிறார். ஒரு நாள் அரவிந்தன் கிடைப்பான். அதற்குப் பிறகு கோர்ட் எதற்கு, ஸீனியர் எதற்கு?

திமுரென்று அம்மா காப்பியும் கையுமாகப் பிரவேசித்தாள்.

''ஏண்டீ நான் என்ன உனக்குச் சமையல்காரியா ... நீ வந்து காப்பியைக் கொட்டிக்கப்படாது?''

''உன்னை யார் கொண்டு வரச் சொன்னா, அம்மா!''

காப்பியை வாங்கிக் கொண்ட வசுமதி குடித்தாள். அப்படி ஒன்றும் ஆறிவிடவில்லை.

''வசு''.

''உம்''

''நான் கேள்விப்பட்டது உண்மையா?''

''என்ன கேள்விப்பட்டே?''

''நீ நேர வக்கீல் வீட்டுக்குப் போகாமல் பெசண்ட் நகருக்குப் போறியாம்.''

''யார் சொன்னா?''

''ஒரு பத்திரிகையிலே கிசுகிசுவிலே படிச்சேன்! எதிர்க் கேள்வி கேட்காம பதில் சொல்லு''



''நான் இந்த வீட்டிலேந்து புறப்பட்டு மறுபடியும் இந்த வீட்டுப் படி ஏர்ற வரையில் என்ன செய்தா யாருக்கு என்ன?''

''நான் உன் அம்மா''.

''நானு என்னைப் பெற உன்கிட்ட சொன்னேன்...?''

''அம்மாவைப் பார்த்து ஒரு பெண் பேசற பேச்சாடி இது?'' என்றாள் சாரதா.

''இதப் பார்மா... நீ என் பொண்ணு, நான் உன் அம்மாங்கற பேச்சுக்கெல்லாம் இந்தக் காலத்திலே இடமே இல்லே... அவாவா தங்களோட இன்பத்தை அனுபவிக்கறப்ப விபத்து மாதிரி குழந்தைகள் பொறந்துடறது. தலை எழுத்தேன்னு வளர்க்க வேண்டி வர்றது. அப்புறம் பெத்த கடன், வளர்த்த கடன்னு புராணம் பாடிக் கைம்மாறு கேட்க வேண்டியது... எத்தனையோ பேர் குழந்தை பொறந்ததும் கிட்டக்க இருக்கிற குப்பைத் தொட்டியிலே போட்டுட்டுத் திரும்பிப் பார்க்காமப் புடவைத் தலைப்பை உதறிவிட்டுப் போறு. நீயும் அது மாதிரி செய்திருக்கணும்...''

''நாளைக்கு உனக்கும் ஒரு கலியாணம்னு ஒண்ணு நடக்கும். அப்புறம் சாந்தி முகூர்த்தம்னு ஒண்ணு நடக்கும். ஏன் நடத்திப்பேள்? யுகாதி காலமா ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கிற தொடர்புதாண்டி. அதிலேந்து விளையற ஒரு முத்து உன் வயத்திலேர்ந்து விழறப்ப நீ அதை வேஸ்ட் பேப்பர் கூடையிலே போட்டுட்டுக் கையை உதறிவிட்டு வந்துருவியா? உன்னாலே முடியுமா! அதுக்கு மனத்திராணி இருக்கா?''

''சரிம்மா. நான் வரேன்.''

''இருடி... உன்னை நான் அவ்வளவு சீக்கிரம் விட மாட்டேன். உனக்கு ஒரு வயசாறப்ப அதிசாரம் வந்தது. நான் பூரா வாந்தி, பேதி. உன் பச்சை ஒடம்புலே தண்ணி வத்திப் போய், உன் முழி ரெண்டும் செருகி, உன் நாடி இறங்கி...'' சாரதா பெருமூச்சு விட்டாள். பிறகு தொடர்ந்தாள்.

''அப்பக் கூட உன்னை நான் கிட்டக்க இருக்கிற குப்பைத் தொட்டியிலே போடலேடி... பதை பதைக்கிற வெய்யில்லே கால்லே செருப்பில்லாம டாக்டர் கிட்ட ஓடினேன்... குருவாயூரப்பன் படத்துக்கு முன்னாலே உன்னை மடியிலே வைச்சுண்டு கண்ணீர் விட்டு வேண்டிண்டேன்... ஏண்டி எதுக்கு? அப்ப நீ மாசா மாசம் ஆயிரம் தந்துண்டிருக்கேன்னா? இல்லே இன்னிக்கு தருவேன்னு... போடி... நீ காலேஜ் படிச்ச முட்டாள்டி... விவேகம் இல்லாமல் பேசற போக்கத்த பொண்ணு. குழந்தையைப் பெத்தாத்தாண்டி தாயார்னா என்ன அர்த்தம்னு புரியும். போடி.... போ... நீ அரவிந்தன் வீட்டுக்குத்தான் தினசரி போறே... அங்கே பிச்சை எடுக்கிறே... என்ன பிச்சைன்னு எனக்குத் தெரியும். ஏன்னா நான் நாலு நாள் முன்னாடி அங்கே போனேன்...போன எடத்திலே அவன் தன் பெண்டாட்டிக்குச் சாதம் ஊட்டிண்டிருந்தான்... அவன் புருஷன்டி... அவன் புருஷன்... நாய்க்கு முழுத் தேங்காய் எப்படிக் கிடைக்கும்? அதான் அவன் உனக்குக் கிடைக்கலே! போ!

சாரதா கத்தினாள். கூடவே தாரை தாரையாக கண்ணீரும் விட்டாள்.

வசுமதி ஸ்தம்பித்துப் போனாள். பதில் எதுவும் சொல்லாமல் அவள் வெளியேறினாள்.

* * * * *

பெசண்ட்நகருக்குப்போகும்போதுதான் தான் அம்மாவிடம் அநாகரிகமாகப் பேசி விட்டோம் என்று வசுமதி உணர்ந்தாள். தன்னைத் தானே உதைத்துக் கொண்டாள். அவள் எப்படி இவ்வாறு மாறினாள்? எது மாற்றியது? படிப்பும் பண்பும் உள்ள பெண் என்று பெயர் வாங்கியவளாயிற்றே? போற்றத்தக்கத் தகுந்த வகையில் காதலனுக்கு வழி விட்ட அவள், சென்று விட்ட நாட்களை மறக்காமல் ஏன் செத்த காலத்துக்கு உயிர் கொடுக்கப் பார்க்கிறாள்? ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வெறும் சிநேகிதர்களாக இருக்க முடியும் என்று வாதம் செய்த அவள் — 'இருந்து காட்டுகிறேன்' என்று சவால் விட்ட அவள் — ஏன் மனம் தடுமாறிச் செல்லுகிறாள்? அவளால் அரவிந்தனை இனிமேல் அடையவே முடியாது என்ற பயம் அணு அளவாவது இருந்து அவளைத் துன்புறுத்துகிறதா? அந்தப் பய த்தையும் போக்கத்தான் இப்படியெல்லாம் அவள் நடந்து கொள்ளுகிறாளா?

அவள் அரவிந்தன் வீட்டை அடைந்த போது மணி ஏழு. அவன் சமையலறையில் இருந்தான். மாயா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''லேட்டாயிடுத்து''.

''பரவாயில்லே... கொஞ்சம் இரு வசு. அரிசியைக் களைந்து குக்கரில் போட்டுட்டு வரேன்''.

''கறிகாய் நறுக்கறேன்... என்ன வைக்கலாம்னு இருக்கீங்க...?''

''மாயாவுக்கு டபின் பீன்ஸ் ரொம்பப் பிடிக்கிறது... நறுக்கியாச்சு...''

குழம்புக்கு?''

''நறுக்கியாச்சு... காப்பி சாப்பிடறியா?''

''ஊஹூம்... ஒண்ணு கேக்கப் போறேன்!''

''சரி''.

''ஏன் கேக்கப்படாதா?''

''யார் சொன்னா?''

''மாயா எழுந்து வர்றதுக்குள்ளே கேட்டுடறேன்!''

''ஏன் அவளுக்குத் தெரியக் கூடாத சமாசாரமா?''

''அம்மாவுக்குத் தெரிஞ்சாச்சு''.

''என்ன தெரிஞ்சாச்சு?''

''அவ இங்க வந்திருந்தா...''

''ஆமாம்.''

''நீங்க சொல்லலே...''

''அவசியம்னு படலே...''

''ஏன்?''

''இதுக்குப் பதில் சொல்ல முடியாது வசு!

''ஏன்?''

''உங்க அம்மா இங்கே எதுக்கு வரணும்? வேவுபார்க்கவா? அப்படி அவ வேவுபார்க்க வந்திருந்தா அதை நான் உன்கிட்டே சொல்லி விட்டிலே ரகளையைக் கிளப்புவானேன்!''

''அர்விந்த்!''

''என்ன வசு?''

''என் மனசு சரியாயில்லே''.

''ஏன்? அம்மா ஏதும் சொன்னாளா?''

''உங்களை அவ பாராட்டறா... நீங்க மாயாவுக்குச் சாதம் ஊட்டறதைப் பார்த்தாளாம்''.

''அதனாலே உன் மனசு சரியில்லையா, வசு?'' அரவிந்தன் சிரித்தான்.

''என் மனசைக் கொஞ்சம் புரிஞ்சுக்குங்க...''.

''என்ன வசு, திடீர்னு என்னமோ பேசறே? என்னாச்சு உனக்கு?''

''நான் நந்தியாவே இருந்திருக்கணும் அர்விந்த்''.

''புரியலே...''

''வழி விட்டிருக்கப்படாது. இப்படியே போனால் எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும் அர்விந்த்... நானும் ஒரு மாயாவாகி விடுவேன்''.

''பீ கேர்ஃபுல் இன் யுவர் வேர்ட்ஸ் வசு! என் ஒய்ஃப் மாயா பைத்தியமில்லே...''

''நார்மல் உமனா?''

''என்னைப் பொறுத்த வரையில் நார்மல்...''

''அப்படியே இருக்கட்டும், அர்விந்த்... எனக்கு ஒரு எண்ணம் கொஞ்ச நாளா இருந்துண்டிருக்கு...''

''என்ன எண்ணம்?''

குக்கர் சத்தம் கேட்கவே, அடுப்பு ஜ்வாலையை அரவிந்தன் தாழ்த்தினான்.

''என்னாலே தனியா வாழ முடியும்னு தோணலே, அர்விந்த்''.

''உனக்குச் சீக்கிரம் நல்ல இடத்தில் கலியாணம் ஆகணும்னு நானும் வேண்டிண்டு தான் இருக்கேன், வசு.''

''எனக்குத் தெரிஞ்சு இந்த உலகத்திலே ஒரே ஒரு நல்ல இடம் தான் இருக்கு... ஆனா... ஆனா...''

''நீ மேலே பேச வேண்டாம், வசு... உன் மனசு எனக்குப் புரியறது. உன் நிலைமை எனக்குப் புரியறது...''

''அப்ப... அப்ப... அர்விந்த்''.

வசுமதியின் கண்கள் கனத்தன.

திடீரென்று மாயாவின் குரல் கேட்டது.

''அத்து, குட்மார்னிங்! வசுமதி குட்மார்னிங்...''.

''வா, மாயா... போர்ன்விட்டா கலந்து தரேன்.''

''ஏன் வசு அழறே?''

''ஒண்ணுமில்லே, மாயா!'' என்றாள் வசுமதி.

''நீ நினைச்சது கிடைக்கலையேன்னு அழறியா...? அத்து, அவ உன்கிட்டே கேட்டு நீ கொடுக்கலியா!'' மாயா வசு அருகே வந்து அவள் தாடையைப் பற்றித் தடவினாள்.

''என் அத்து நல்லவன் வசுமதி! நீ எது கேட்டாலும் தருவான்!'' என்றாள் மாயா.

''உன் வாய் முகூர்த்தம் பலிக்கும்!'' என்றாள் வசு. சொல்லும் போது அரவிந்தனைப் பார்த்தாள்.

அவனுடைய விழிகள் அலைக்கழிந்தன.

(தொடரும்)

அடுத்த வாரம்:

# அஹமதாபாத் அமளிகள்




நமது விசேஷ நிருபரின் சிறப்புக் கட்டுரை

'நீங்க திரும்பி வரும்போது... நான் இருக்கிறேனோ என்னவோ... நமது பிள்ளை நிச்சயம் இருப்பான்... அப்போ...' என்று அவரைக் கட்டிக் கொண்டு விசும்பினாள்.

''சீ... நீ என்ன... பழைய காலத்து மனிதர்கள் போல் அழுகிறாய்?... இப்போதான் மனிதர்களது சராசரி ஆயுளே நூறு வருடங்களுக்கு மேலாகிவிட்டதே! இன்னும் சில காலம் போனால் இறப்பையே நாம வென்று விடுவோம்... அதற்குள்ள நீ...?'' என்று கூறி அவள் கண்ணீரைத் துடைத்து விட்டவர்... மறுபுறம் திரும்பி தன் கண்களை ஒரு தடவை ஒற்றிக் கொண்டார். கணவன் பிரிந்து செல்லும் போது மனைவி அழுவதென்பது பல நூற்றாண்டுகளாய்த் தொடர்ந்து வரும் கதைதான் என்பது பிரகணத்துக்கும் புரியும்! புற வாழ்வில் மனிதன் முன்னேறி விட்டிருந்தான். மனசுக்குள் மட்டும் பாசமும் மற்ற உணர்வுகளும் இன்னும் குழைந்து கொண்டிருந்தன.

* * * * *


அந்தக் கழகத்தின் உறுப்பினர்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருந்தார்கள்.

அன்றும் அவர்கள் கூட்டியிருந்த ஆராய்ச்சிக்கூட்டத்தில்சுமார்முப்பத்தைந்து ஒளி வருடங்கள் தொலைவிலுள்ள 'ஆக்குநூஸ்' என்னும்நட்சத்திரத்தைநேரில்சென்று ஆராயும் பொறுப்பினை பிரகணத்தே ஏற்க வேண்டும் என்று தீர்மானித்த போது அவர் திகைத்துப் போய் விட்டார்...!

மணம் செய்து ஒரு வருடங்கூட ஆகாத அந்த நேரத்தில்... இளம் மனைவியைப் பிரிந்து... அவ்வளவு தொலைவிலுள்ள நட்சத்திரத்தினை ஆராயச் செல்வதில் இந்தக் கழகத்துக்கோ அல்லது மனித குலத்துக்கோ என்ன நன்மை வந்து விடப் போகிறது? என்று வாய்விட்டுக் கேட்டு விட்டார்.

ஆனால் அந்தத் தலைவரோ... 'பிரகணத் கூறும் காரணத்தை ஒதுக்கி ''ஒரு ஆராய்ச்சியின் ஆரம்பக்கட்டத்திலேயே இது தேவையா என்று கேட்டுக் கொண்டிருப்பதை விட, அந்தப் பயணத்தால்நாம் என்ன நன்மைகளை பெற முடியும்... என்றுதான் சிந்திக்க முற்

# காலவெளியில் ஒரு காதல் மனைவி



சர்வசித்தன்

அது 2155—ஆம் ஆண்டு.

ஐன்ஸ்டீன் இறந்து இருநூறு வருடங்களாகி விட்டன. அவர் கூறிய ரிலேடிவிடி தியரியும், ஒளி வேக விண்கலங்களும் சாத்தியங்களாகி விட்டன.

சூரியனிலிருந்து சுமார் 280 கோடி மைல் தொலைவிலுள்ள நெப்டியூனுக்கும் அதன் துணைக் கோள்களான டிரைடன், நெறிட் இரண்டுக்கும் போய்த் திரும்புவது ஐந்தாறு மணிப் பயணமாகச் சுருங்கிப் போயிருந்தது.

தேன்நிலவுக்கு நாடுவிட்டு நாடு செல்வது மாறி இளைஞர்கள் கோள் விட்டுக் கோளுக்குப் பறந்தார்கள்.

பிரகணத் கூட தமது தேன்நிலவை செவ்வாய் மண்டலத்தில் பூமிக்காரர்கள் உருவாக்கிய விஞ்ஞானப் பூங்காவில்தான் ஏழு மாதங்களுக்கு முன்பு கழித்துவிட்டு வந்திருந்தார்.

உலக விஞ்ஞானக் கழகத்தின் ஓர் உறுப்பினரான அவர் — அங்கிருப்பவர்களில் வயதில் இளைஞராயும்... சுறுசுறுப்பானவராயும்... காணப்பட்டார். அநேகமாக பரீட்சார்த்த விண்வெளிப் பயணங்களின் மூல் அந்த விஞ்ஞானக் கழகம் பிரகணத்தையும் ஒருவராக சிபாரிசு செய்ய மறப்பதில்லை. அந்தளவுக்கு அவரும், அவரது குடும்பமும்...

பட வேண்டும்'' என்று ஒரு நீண்ட சொற்பொழிவினையே ஆற்றியிருந்தார்.

தலைவரின் உறுதியான இந்த விளக்கத்துக்கு எதிர்வாதம் செய்ய இயலாமல், பிரகணத் வாயடைத்துப் போய் விட்டார். ஆனால் அவர் தமது மனத்துக்குள்... 'இது என்ன... இருபதாம் நூற்றாண்டில், வேலை செய்தவர்களுக்கு அளிக்கும் தண்டனை மாற்றம் போலல்லவா இருக்கிறது?

போன நூற்றாண்டில் அரசாங்க வேலையில் இருக்கும் ஒருவருக்கு 'பனிஷ்மெண்ட், டிரான்ஸ்ஃபர்' என்று கொசுக்கடி நிறைந்த பிரதேசத்துக்கு மாற்றிவிடுவார்களாம்.

பழைய ரிகார்டுகளை மைக்ரோ ஃபிலிம் லைப்ரரியில் பார்த்த வேளையில்... பிரகணத் அறிந்து கொண்ட விஷயம் இது! அம்மாதிரி தமக்கும் அந்த ஆக்குநூஸ் நட்சத்திரப் பயணம் அமைந்துவிட்டது என்று நினைத்தார். இன்னும் மூன்று மாதங்கள் போனால் — அவருக்கு ஒருமகன் பிறக்கப் போகிறான்! அவரது உதிரத்தில் உதிக்கப் போகும் அந்தக் குழந்தையைக் கூடத் தாம் பின்னர் பெரியவனாக வளர்ந்த பின்னரே சந்திக்கப் போகிறோம் என்று எண்ணும் போது... அவருக்கு இந்த உலக வாழ்க்கையே ...சீ... என்று போயிற்று..!


எத்தனை சாக்குப் போக்கு சொன்னாலும் விஞ்ஞானிகள் கழகம் அவரை விட்டுவிட வில்லை. அங்கு ஒரு தடவை கூறப்பட்ட விஷயம்... அப்படியே தலைமை கம்ப்யூட்டர் நிலையத்தில் பதிவாகி அடுத்த நிமிடமே அது—கட்டளையாக மாற்றப்பட்டு விடுமென்பதை, பிரகணத் தெரிந்து வைத்திருந்தார். கூடிய மட்டும் அந்தக் கட்டளையை மீளப் பெற அவர் முயற்சி செய்தார். ஆனால் அவரது முயற்சி வீணாகித்தான் போய்விட்டது!

* * * * *

பயண தினத்தில் உலக விஞ்ஞான கழகத்தின் எல்லா உறுப்பினர்களும் விண்வெளி நிலையத்துக்கு வந்திருந்தனர். அந்தப் பயணம் மற்ற கிரகவாசிகளும் பார்க்கும்படியாக டெலிகாஸ்ட் செய்யப்பட்டிருந்தது. முதன் முதலாக மிகத் தொலைதூர நட்சத்திரத்தை மனிதன் சென்றடையப் போவது இதுதான் முதல் தடவை என்பதால் ஏனைய கிரக மக்களும் இதில் அக்கறை காட்டியிருந்தனர்.

பூமியின் காலனியான மற்ற கிரகங்களில் வசிக்கும் மனிதர்கள் பர மண்டல (வெளிக் கிரக) சமுதாயம், தாமாக சுதந்திரம் பெற்று விட்டதாக அறிவித்து அதிக காலம் ஆயிற்று. பூமியில் உள்ள தலைமை கம்ப்யூட்டரால் தங்கள் கிரகத்தின் நடைமுறைகள் கட்டுப்படுத்தப்படுவதை எதிர்த்து, தாமாகவே அந்தந்த கிரகங்களுக்குரிய 'தலைமை கம்ப்யூட்டர்'களை நிறுவிக் கொண்டனர்.

ஆயினும் விஞ்ஞானம் சம்பந்தமான எல்லா முயற்சிகளுக்கும் பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஏனைய கிரக அரசுகள் ஒப்புக் கொண்டிருந்தன. இதில் செவ்வாய்க் கிரக மனிதனுக்கும், சந்திர மண்டல வாசிக்கும், பூவுலக மனிதனுக்கும் வேறு



பாடு இருக்கவில்லை. பிரகணத்தின் ஆக்ருநூஸ் பயணத்துக்கும், செவ்வாய், சந்திரன், வியாழன், ஆகிய கிரக அரசுகளும் பொருளுதவி செய்திருந்தன. அங்கு புதிதாக ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டால் அதன் பலாபலன்களை அனைத்துக் கிரகங்களும் பகிர்ந்து கொள்வதற்காக ஒப்பந்தம் எல்லா கிரக அரசுகளிடையிலும் கையெழுத்தாயிருந்தது.

ஒவ்வொரு கிரகத்திலிருந்தும் ஒரு பிரதிநிதி. மற்ற மூன்று கிரகத்திலிருந்து வந்தவர்களோடு சேர்த்து மொத்தம் நான்கு பேர் அந்த விண்கலத்தில் புறப்பட்டனர்.

* * * * *

ஆக்ருநூஸ்' நட்சத்திரத்திற்குப் போனவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அருகில் சென்று அவர்கள் அதுபற்றி ஆராய்ந்து அனுப்பிய தகவல்கள் அற்புதமாயிருந்தன. மனித குலம் இறப்பினை வெல்லும் சில கனிமங்களை அறிந்து கொள்ளும் சாத்தியம் உண்டாகும் என்று பூமியிலும், மற்ற கிரகங்களிலும் ஒரே பரபரப்பு. அதனால் பூமிக்குத் திரும்பும் விஞ்ஞானிகளை வரவேற்க எல்லாக் கிரகங்களும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தன.

அந்நேரம் பூமியை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த அந்த விண்கலத்தினுள் அமர்ந்திருந்த நால்வரும் — தங்கள் குடும்பத்தினரை மீண்டும் சந்திக்கப் போகிறோம் என்னும் ஆவலில் மகிழ்ச்சியாகத் தமது கடந்த காலச் சிந்தனையில் மூழ்கிப் போயிருந்தார்கள்.

பயணம் புறப்பட்ட போது இருபத்து ஐந்து வயதே நிரம்பியிருந்த பிரகணத் இப்போது முப்பத்தைந்து வயது இளைஞன் தோற்றத்தோடிருந்தார்.

விண்வெளியில் பத்து வருடங்களைக் கழித்த முதிர்ச்சி எல்லோர் முகத்திலும் தெரிந்தது. அவர்களில் மூத்தவரான செவ்வாய் மண்டல மனிதர் தமது வீட்டில் தாம் புறப்படும் போது நாட்டி விட்டு வந்த புதிய செடி — இன்று பெருமரமாக வளர்ந்துவிட்டிருக்கும் என்று மற்றவர்களிடம் கூறி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

ஒளியின் வேகத்தோடு இயங்கும் அந்த விண்கலம் சிறிது சிறிதாகத் தன் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, பூமியை நெருங்கிக் கொண்டிருந்தது.

* * * * *

கலத்திலிருந்து வெளியேறி தேவையான மருத்துவ பரிசோதனைகளனைத்தையும் முடித்துக் கொண்டு அடுத்த சில நிமிடங்களில் ஏனைய மூவரும் அவரவர் கிரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்நேரம்... பிரகணத்துக்காக... வெளியே தனியறை ஒன்றில் அவரது மனைவியும் பிள்ளையும் காத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அவர் அந்த அறையை நோக்கி மனம் துள்ள நடந்தார்.

அறையைத் திறந்ததும் சுமார் எழுபது வயதுள்ள ஒரு மனிதரும், அவரருகே தொண்ணூறு வயதைக் கடந்த மூதாட்டி ஒருவரும் இவரை நோக்கி நகர்ந்து வந்தனர். அவர்களுள் அந்த மூதாட்டிதான் தம் மனைவியோ? மிரண்டு போய் விட்டார் பிரகணத்!

முப்பத்தைந்து வயது இளைஞராய்த் தங்கள் எதிரே நிற்கும் அவரைச் சுட்டிக் காட்டிய அந்த மூதாட்டி, 'இதோ... இவர்தானடா... உன் தந்தை...' என்று தன்னருகே நின்று கொண்டிருந்த முதியவரிடம் கூறியதும் 'அப்பா...' என்று வாஞ்சையோடு அழைத்தவாறே அந்த முதியவர் பிரகணத்தை அணைத்துக்கொள்கிறார்! அப்போது தான் பிரகணத்துக்கு அந்த எண்ணம்... அவரது மூளையின் ஓர் மூலையில் மின்வெட்டாய்ப்பளிச்சிடுவதை உணர்கிறார்.

ஒளியின் வேகத்தோடு செல்லும் கலத்தில் விண்வெளியில் பத்து வருடங்களைக் கழிப்பதும், பூமியில் எழுபது வருடங்களைக் கழிப்பதும் சமம் என்ற ஐன்ஸ்டீனின் 'ரிலேட்டிவிட்டி' கொள்கை இப்போதுதான் அவரது மூளையில் உரைத்தது!

பாவம் பிரகணத்! இளம் மனைவியையும் அவள் வயிற்றில் குழந்தையையும் விட்டுச் சென்றவர், இப்போது ஒரு முதியவரையும், மூதாட்டியொருத்தியையும் பிள்ளையாயும், மனைவியாயும் சந்திப்பதை விதியென்பதா? இல்லை விஞ்ஞான சாதனை என்பதா?

பி. கு: ('ஆக்ருநூஸ்' என்பது 35 ஒளிவருட தொலைவில் இருக்கும் ஓர் நட்சத்திரம். ஒளியின் வேகத்தோடு செல்லும் விண்கலம் இதனைச் சென்றடைந்து திரும்ப சுமார் 70 வருடங்களாகும். ஆனால் ஐன்ஸ்டீனின் 'Relativity Theory'ப்படி விண்வெளியில் இதன் பிரயாண நேரம் 10 வருடமேயாகும்).

இந்த விஞ்ஞான உண்மைகளை வைத்து எழுதப்பட்ட 'கற்பனைக் கதை' இது.

''அந்த ரெயில் கண்டக்டர் பெண்டாட்டிக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தை பிறந்ததாம்! த்ரீ டயர் தொட்டில் ஆட்டுகிறார்!''



# இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!



**கோ**த்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



**கலப்பது சுலபம்**
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



**உபயோகிப்பது சுலபம்**
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!




இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.

**Godrej**

**பவுடர் ஹேர்-டை கான்ஸென்ட்ரேட்**

CLARIAN/GS/11/203 TAM

**தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.**

# சுமைதாங்கிகளே சுமையாகும் போது...

வாரம் ஒரு கடிதம்

நல்லவனே! நடமாடும் நம்பிக்கையே!

உன்னைப் புரிந்து கொள்வது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் உன் உறவுகளைப் புரிந்து கொள்வதும்.

பதினெட்டு வயது வரைக்கும் உனது சுமைதாங்கியாய் இருந்த உறவுகள், பதினெட்டு வயதிற்குப் பின் உனக்கே சுமையாகி விடுவதை உணர்ந்திருக்கிறாயா?

நான் உணர்ந்திருக்கிறேன்

சில சமயங்களில் இந்த உறவுச் சங்கிலிகளிலிருந்து கத்தரித்துக் கொண்டு விட்டால் தேவலாம் என்று கூட உனக்குத் தோன்றியதுண்டா?

இந்தக் கேள்விக்கு, ''ஆமாம்'' என்ற பதிலில் ஆயிரம் எதிரொலிகள் எனக்குக் கேட்கின்றன.

பெற்றோர்களே ஒருவனுக்கு அந்நியமாகி விடுகிற ஆபத்து இருக்கிறதே அது இந்தத் தலைமுறையில் இலட்சக் கணக்கான இளைஞர்களுக்கு நித்தம் நித்தம் நேர்ந்து கொண்டிருக்கிறது.

இதைத் 'தலைமுறை இடைவெளி' என்று சொல்லித் தப்பித்து விட முடியாது.

இது எதனால் விளைவது; எப்படிக் களைவது; என்பது பற்றி நாம் காரணத்தோடு கவலைப்பட வேண்டும்.

இந்த விபத்துக்கு பெரும்பாலும் காரணம் பெற்றோர்களே என்று நான் ஆயிரம் சபைகளில் அடித்துச் சொல்லுவேன்.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பறக்கச் சொல்லிக் கொடுக்கிறோம் என்று இறக்கைகளை முறித்து விடுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு பாசம் என்பது கூட ஒரு மூட நம்பிக்கை என்பதை அவர்கள் நம்ப மறுக்கிறார்கள்.

பெற்றவர்களே!

அவனைச் சொந்தமாகச் சிந்திக்க விடுங்கள்; சுயமாக முடிவெடுக்க விடுங்கள்.

அவனுடைய

பாதங்களுக்கு வலிமை தருவதே உங்கள் பொறுப்பு; பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டியவன் அவனே.

அவனுடைய ஒவ்வொரு நிமிஷத்திலும் நீங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தலையிடுவதால், அவன் ஓர் இரவல் வாழ்க்கை வாழ்வதற்குத்தான் நீங்கள் ஏற்பாடு செய்து கொடுக்கிறீர்கள்.

ஒரு நாளுக்கு எத்தனை முறை சுவாசிக்கலாம் என்று அவன் உங்களுக்குக் கடிதம் எழுதிக் கேட்டுக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

மீசை முளைத்த பிறகும் அவன் இன்னும் உங்கள் சுட்டு விரலைப் பிடித்துக் கொண்டு சுற்றி வர வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது இழுக்கு.

இங்கே பட்டப் படிப்பில் ஓர் இளைஞன் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்பது கூட அவனால் தீர்மானிக்கப்படுவதில்லை.

தங்களுக்குப் பிறந்த பிள்ளை எப்படிப் புத்திசாலியாக இருக்க முடியுமென்று பல பெற்றோர்கள் சந்தேகப்படுவதாக எனக்குத் தோன்றுகிறது!

உங்கள் பிள்ளை வாய்க்காலாக இருந்த போது நீங்கள் வரம்பு கட்டினீர்கள். அவனே நதியாக மாறி நகர்ந்த பிறகும் கரை கட்ட நினைக்கிறீர்களே! அதுதான் கஷ்டமாக இருக்கிறது.

தனது கரையைத் தானே போட்டுக் கொள்ளத் தெரிந்ததுதான் நதி.

அவனுடைய ஓய்வு நேரங்களையும், கனவுகளையும், கற்பனைகளையும், இலட்சியங்களையும் சந்தேகப்படுவதால் அடிக்கடி அவன் அறுந்து போகிறான்.

உங்கள் தலையீடுகளைத் தாங்க முடியாமல் அவன் தனக்குத் தானே ஒரு தீவாகி தனது கனவுகளுக்குக் கதவு போட்டுக் கொள்கிறான்.

ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு, மாதா, பிதா, குரு என்ற அந்த மூன்று உறவுகளும், அவனை நண்பனாக நேசித்துப் பழகுவதே நல்லது.

இனிய நண்பனே! உனக்கு எழுதும் கடிதத்தில் அவர்களை ஏன் இழுக்கிறேன் என்று ஆராய்ச்சி செய்கிறாயா?

இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு உன் பெற்றோர்களை நீ மாறச் செய்ய வேண்டும் என்பதல்ல என் எண்ணம். உன் பெற்றோர்களைப் போல் நீயாவது மாறி விடாதிருக்க வேண்டும் என்பதே என் நோக்கம்.

கவிஞர் வைரமுத்து



புகைப்படம்: யோகா.



மாபெரும் சலுகை
ஓர் அழகிய
கிச்சன் கண்டெய்னர்
ரூ.4-75 க்கு மட்டுமே
ஒரு கிலோ டிடர்ஜெண்ட் பவுடருடன்
Bargain Offer!
Super Chek DETERGENT POWDER
ACIL 0901 85-Tam
சூப்பர் செக்
டிடர்ஜெண்ட் பவுடர்
அற்புத சலவை
மகத்தான பொலிவு

# சொம்மாங்காட்டியும் பூ சுத்தறான்

ஒண்டிமரப்பட்டி மைனர் மவராசன் வெக்கப் போர்ல ஏறிப் பார்த்தா ஒழுக்காறு ஓடின் அடையாளம் தெரியும். ஒண்டிமரப்பட்டியைவிட ஒழுக்காறுல ஒரு நாலஞ்சு அடி முன்னாடி தண்ணீர் கெடைக்குங்கறது தவிர மத்தபடி ரெண்டுமே ஒழுங்கா வாழ்ந்து காட்ட முடியறது இல்லே. இன்னுங்கேட்டா புத்தொழுக்காறுல (மேற்கு ஒழுக்காறை இப்படிச் சொல்லுவாங்க) ஒண்ணு ரெண்டு பாக்டரிங்க வந்ததிலேந்து தட்டுமுட்டு ஜாமான் விலேல்லாம் சாஸ்தி.

சரிதான் ஊறுணி, ஒழுக்காறு புத்தொழுக்காறு அது இதுன்னு சொல்றுனே நல்ல செழிப்பான பகுதி போலன்னு நெனேச்சுராதீங்க. எல்லாம் பேர்லதான். பஞ்சம்னு ரொம்ப கொடூரமான தண்ணீர்ப் பஞ்சம். ஜனங்க இங்கெல்லாம் விவசாயம் பாக்கிறதை நிறுத்தி ரொம்ப வருஷமாச்சு. மாசம் இப்படியும் அப்படியுமா. இன்னும் ரெண்டு மாசம் மப்பும் மந்தாரமுமா ஏதோ வானமே விண்டுக்கிட்ட மாதிரி மழை பெய்யப் போவுதுன்னு நெனேக்க வைக்கும். ஆனால் நல்ல மழை பெய்ஞ்சதே இல்லே.

ஏதோ ஒண்ணு ரெண்டு எடம்னு இல்லே. சத்தேரக்குறைய 40, 45 கிராமம் இப்படி. அந்த அஞ்சாயிரத்துச் சொச்ச ஜனங்களுக்குள்ள ஒத்துமைதான் இல்லே. நீ இந்த ஜாதி, நீ இவன், நீ இந்த கச்சிக்காரன், நீ பொறம்போக்குல குட்சை கட்டினவன், நீ லஞ்சம் கொடுத்தவன், நீ வாங்கினவன், நீ அஞ்சு பொஞ்சாதிக்காரன் நீ அம்பதுவெப்பாட்டிக்காரன்னு சண்டை போட்டுக்கிட்டே இருப்பாங்க. ஒவ்வொரு பக்கத்து வூட்டுக்காரனும் இன்னொருத்தனுக்கு வைரி. அவன் இவனேப் பார்த்தா காறித் துப்பிக்குவான்; அவ இவளேப் பார்த்தா மோவாயை இடிச்சிக்குவா. அவன் இவனேயும் இவன் அவனேயும் பார்த்தா தான் ஏதோ ரெண்டு வார்த்தை பேசிக்குவாங்க.

அவங்க ஒத்துமையா மட்டும் இருந்திருந்தா மழை வரவழைச்சிருக்க முடியுமோ முடியாதோ அரசாங்கத்தைத் தட்டிக் கேட்டிருக்க முடியும்.

அவ்வளவு கிராமங்கள்ல தெரியப்பட்ட ரெண்டு மூணு பணக்காரங்கள்ல மைனர் மவராசாதான் டாப்பு — வசதின்னு கொஞ்ச நஞ்சமில்லே. மஞ்சள்புறத்துல பெட்காப்பியைப் போட்டுக்கிட்டு ஸ்டியரிங்கைப் புடிச்சார்னு ஆறுமவனேரில்ல குளிப்பார் (பாத்ரூமுலதான்!) முப்பாண்டியில பவுடர் பூசிக்குவார்; கீழ்நல்லூருல டிரஸ் பண்ணிக்குவார்; கீழ்ப்பட்டியில மல்லிப்பூ இட்டிலி கொத்துமல்லிச் சட்டினின்னு கம்பனூர்ல பிஸ்தா பருப்பு கடைவாயில அடைச்சுக்குவார். இப்படி ஒரு நடை ஜீப்புல போயிட்டு வந்தா சாயரட்சைக்கு ஒண்டிப்பட்டிக்குத் திரும்பிரலாம்.

• ஒண்டிப்பட்டியில் பஞ்சமாரோட அவஸ்தைப்பட அடிக்கடி அவரு வர்றதுக்குக் காரணம் இருக்கு. அவரோட சிக்காளி பொண்சாதிக்கோ புள்ளிங்களுக்கோ அங்கே உறவாளிங்க கிடையாது. போதாததுக்கு ஒரு ஏழெட்டு ஆசைநாயகியாவது அங்கே கெடைப்பாங்க. இன்னும் ஒரு முக்கியமான காரணம் என்னன்னு, அவரோட கள்ளக்கடத்தல் முதலான சமாச்சாரங்கள் அங்க நல்லபடியா நடக்க முடியும். ஒவ்வொரு வேளே சோத்துக்கும் இவரை எதிர் பார்க்கற ஜனங்கள் எங்க உன்னிப்பா இதையெல்லாம் கவனிக்கப் போறாங்கன்னு அவரோட அபிப்பிராயம்.



ஏதோ ஏழைங்களை ஏமாத்தி பஞ்சத்துல புடுங்கித்தான் இத்தனை நாள் அவரு அப்பாரு இருந்துட்டுப் போனாரு. இவரும் அப்பனுக்குத் தப்பாத புள்ளையாத்தான் இத்தனை நாள் இருந்தாரு... இப்பத்தான் ஒரு ஒண்ணு ரெண்டு வருஷமா நேரடியா பண்ற சமூக விரோதம் பத்தாதுன்னு இருட்டு மறைவுல ஏதோ நடக்குது.

* * * * *

மைனர் மவராசனுக்குத் தான் பண்றதெல்லாம் ரகசியம்னு நெனைப்புன்னு சொன்னமா? அதுவும் கள்ளக்கடத்தல் விஷயத்துல ரொம்பவும் உஷாரா இருக்கிறதா நெனைச்சார். அதனால ஒண்ணு பின்னால ஒண்ணு அஞ்சு லாரி வந்துட்டுப் போனா ஜனங்க உஷாரா ஆயிடுவாங்கன்னு விடியோ ஷோ ஏற்பாடு பண்ணினார்.

அவரோட வசதிக்கு ஊருக்கு வெளியே டான்ஸ்பாமரு போடச் சொன்னதும் நல்லதாப் போச்சு. ஜில்லுனு பழரசம் குடிக்கக் கிடைக்கும். கொத்துக்கறி பச்சையா வச்சுக் கிடைக்கும். படுக்கை அறைக்குக் குளிர் பண்ணிக்கிட்டா கதகதப்பு தேடிக்கவும் சவுகரியமா இருக்கும். அப்பாடா, இந்தக் கரண்டு தான் என்னவெல்லாம் பண்ணுது?

இப்பக் கொஞ்ச நாளா சகல கலாவல்லவன், ரங்கா கூட ஜனங்க பாக்க முடியுது. அதுவும் மைனர் விடியோ ராப்பூரா நடக்கும். அல்லாம் புதுப்புது கலர்ப் படம், தமிழ்ப் படம். லவுட் ஸ்பீக்கரு கனெக்‌ஷன் வேற கொடுத்து அதுவும் பத்தாதுன்னு ரெண்டு பெரிய்ய பெட்ரோல் டிரம்ல தண்ணி கூட வெப்பாரு. சினிமா பாக்க வர்றவன் ஒருத்தனாவது அந்தத் தண்ணி சாப்பிடாம விடறது இல்லே. அந்த ஜனங்களுக்குப் பாவம் அதுவே பழரசம் மாதிரி இனிக்கும்.

அதே ஒண்டிப்பட்டியில்தான் சின்னசாமி குடும்பம் இருந்திச்சு. சின்னசாமி நல்ல உழைப்பாளி. மைனர் வூட்டிலேந்து ஊருக்கு உள்ளாற போறப்ப மொத குடிசை அவனோடது. கரண்டு வந்தாப்பில மைனர் வூட்டுலே கூலிக்குக் கூடமாட வொயரிங் பண்ணிப் பண்ணி வொயரிங்வேலையை நல்லாக் கத்துக்கிட்டான் சின்னசாமி. ஊருல ஒரு நல்லது கெட்டது பண்டிகை உற்சவம்னு சின்னசாமிக்குத்தான் கெராக்கி. ரொம்பக் கறாரா பேசுவான். கொஞ்சம் முன்கோவி.

காலேல்ல ஒரு சிறுநெல்லி அளவு புகையிலே அடைச்சிக்கிட்டு மைனர் வூட்டுக்குக் கெளம்பினான்னா முதல்ல ஜீப் க்ளீனிங். அப்பால அவரோட நாயை கூப்பிட்டுக்கிட்டுப் போயி டிரிம்மாக்கி அப்பால விடியோ ஓட்டறது. மைனருக்கு அசைவ சமையல் வேலே. மைனருக்கு முறுக்கெண்ணெய் தேச்சு விடறது சாம்பிராணி புடிக்கறது இப்படி. தோட்ட வேலே, வீட்டுலே ஏதாவது ரிப்பேர்னா அது இப்படி எல்லாத்தையும் அவனே பண்ணிக்குவான்.

மைனர் மவராசனுக்கு அவன் எந்த ஒரு காரியத்தையும் ஒழுங்கா பண்ணுவான்னு நம்பிக்கை. அதனாலேயே அவங்கூட ரொம்பப் பொறுமையா இருந்துக்குவார். அவரோட

**ஸ்ரீதர் சாமா**






சிமைத் தீர்த்தம்லாம் அவரைக் கேக்காம லேயே குடிக்கறான், அவரோட கடாவை அவரைக் கேக்காமலேயே வெட்டறான்லாம். எல்லாரும் சொன்ன பெறகும் போறாப் போறான்னு சும்மா இருந்திட்டாரு... முறைச் சுக்கிட்டா போடா பொக்கைன்னு போயிட்டா என்ன பண்றது? இவ்வளவு வேலையை யாரு இழுத்துப் போட்டுக்கிட்டு பண்றது?

சின்ஸாமிக்கு ரெண்டு புள்ளைங்க. சின்னவன் கிஷ்டன் முளைச்சுமூணு இலை உடலை. அதுக்குள்ளார படா ரவுடி. ரஜினி ஸ்டைலுன்னு அவனுக்கு உசிரு. ராத்திரி உறக்கத்துல கூட கையைக் காலை உதைச்சுக்குவான். 'விஸ்... ட்விஸ்'ன்னு வாய்லயே ம்யூஸிக் கொடுத்துக்குவான். நயனு இல்லாதப்ப அம்மாக்காரிக்கிட்ட விஜில் அடிச்சுக் காட்டுவான். அவளும் கட்டிப் பிடிச்சு உச்சி மோருவா.

* * * * *

மைனர் மவராசன் இல்லாதப்ப வேலைக்காரப் பசங்க அடிக்கடி வீடியோ போடச் சொல்லி சின்ஸாமியைக் கேப்பாங்க. ஒண்ணு ரெண்டுன்னு கைமாத்து கூடக் கொடுப்பாங்க. சின்ஸாமியும் 'சர்தான் சாராயத்துக்கு ஆச்சு'ன்னு போட்டுக் காட்டுவான். ஆன் பண்ணிட்டு வேற வேலைக்குப் போயிருவான்... சினிமால்லாம் அவனுக்கு ஒத்துக்கறதில்லே. சினிமாக்காரங்களை அவனுக்குப் புடிக்கவும் செய்யாது. "எல்லாம் வெறும் பயலுவ. கட்டிப் பிடிச்சுக்கிட்டு ஜல்சா பண்ணுவாங்க. அவ்வளவுதாம்" பான்.

'திடீர்னு மைனர் மவராசன் வந்து தொலைச்சா என்ன பண்றதுன்னு ஒரு ஆளை வெளியே உக்கார வப்பது சின்ஸாமி வழக்கம். தூரத்திலே மைனர் ஜீப்பைப் பார்த்த உடனேயே அந்த ஆள் சின்ஸாமியை உஷார் பண்ணுவான். சின்ஸாமி எங்க இருந்தாலும் விடியோவை ஆப் பண்ணிட்டுத் துணி போட்டிருவான். வேலைக்காரப் பசங்களும் அவனவன் பிஸியா இருக்கிற மாதிரி காட்டிக்குவான்.

சின்ஸாமிக்கு அவனோட ரெண்டாம் புள்ளை மேல ரொம்ப இது. அவனுக்கு இல்லை. அவன் பொண்ஜாதி, ஏன் மொதப் பையன் துரைக்கே கிஷ்டனைப் பிடிக்கும். கிஷ்டனோட சண்டை போட்டுக்கிட்டா மட்டும் துரை உடனே சமாதானமாயிடுவான்.

தொரை மொதப் படத்துக்கு வந்தான். அவனுக்கும் மனசு சரியாயில்லை. என்னைக்கும் இல்லாம சின்ஸாமியும் மொத வர்சையில உக்காந்துக்கிட்டு ஒரு சின்னத் தூக்கம் போட்டான். தொரை அவன் மடியிலேயே உக்காந்துக்கிட்டான்.

எல்லாப் பயலுவளும் திடீர்னு விஸில் அடிச்சானுகளா, சின்ஸாமி முழிச்சுக்கிட்டான். தியாகரா ஜனே, யாரோ வண்டி சாட்டையைப் பிடிச்சுக் கெணத்துலேந்து கதா நாயகியைக் காப்பாத்தறானும். "பூ சுத்த

ருன்''னு சின்ஸாமி முணுமுணுத்துக்கிட்டான்.

ஆனு தொரை 'ஆ'ன்னு அத்தை பாத்திட்டிருந்தான். அப்பன்காரன் ஏதோ முனகுறதைக் கேட்டுட்டு "இன்னப்பா?"ன்னான்.

"சொம்மாங்காட்டியும் பூ சுத்தருன். சாட்டையை வுட்டு அவளைக் காப்பாத்தருனும். சும்மா பூ சுத்தருன்டா"ன்னன் சின்ஸாமி.

"ஏம்பா கெணத்துல விழுந்தா எந்திரிக்க முடியாதா?" — மவன் கேட்டான்.

"எப்படிடா? சும்மா பூ சுத்தருன்."

தொரைக்குச் சப்புனு ஆயிட்டது. ஆனு அப்பால யோசிச்சுப் பாத்தா அப்பன்காரன் சொல்றதும் சரிதான் போலருந்தது.

பின்ன என்ன கெணத்துல தண்ணி அவ்வளவு இருக்கற மாதிரி காட்றுன்? அவ்வளவு தண்ணியா இருக்கப் போவுது? நம்ம ஊர்ல எந்தக் கெணத்துலேயும் ரெண்டு அடி கூட தண்ணி இல்லையே. அதுவும் தண்ணி இப்படியா வெள்ளையா கண்ணாடி போல இருக்கும்? செவேப்பா ரத்தம் மாதிரி வண்டலா இருக்க வாணும்?

அப்பால ஒரு சண்டை. அவங்க ரெண்டு பேரையும் அதே சாட்டையால ஒரு குண்டன் கட்டப் போறுன். ஒரே அடிதடி, ஜனங்க ஒரேடியா கைதட்டினுங்க.

"ஏம்பா? சினிமாக்காரங்க நிஜமாலும் இப்படி அடிச்சுப்பாங்களா?"

"சொம்மாடா. அந்தக் குண்டன் நெஜமாலும் கைவச்சா வெட்டிட மாட்டான்? சொம்மா காத்துல கையை விசிப்பானுங்க" என்றுன் சின்ஸாமி.

தொரைக்கு அவமானமாயிட்டது. 'சே, இவ்வளவுதானு'ன்னு நெனைச்சான். அப்பால ஒரு கார் ரேஸ் ("சொம்மாடா இது. வண்டில ஈரோவே இல்லே. சொம்மா டுப்பு"ன்னன் சின்ஸாமி.) அப்பால அந்தப் பொம்பளை ஏதோ பாறைலேந்து உருள்ரு (சொம்மாடா... பாறைல மோதினு சுக்கு நூறுயிரும் தெரியுமா?)... ஈரோ அணுவருன் (சொம்மாடா, கண்ணுல எத்தையோ சுளத்திப்பானுங்க) அப்புறம் மறுபடியும் எப்படியோ கூடல் (பூ சுத்தருன்). ஒரு பாட்டு.

தொரைக்கு அந்த பாட்டு ஸீன்ல ஆத்திரம் தாள முடியல்லே. ஏதோ ஒரு தார் ரோடாம். அதுல நடுவுல தண்ணி நாலா பக்கமும் பீச்சுதாம்.

"மழைத் தண்ணிதானேப்பா அது? ஏன் திரும்ப மேலேயே அடிக்கருங்க?"

"திமிருடா" என்று சின்ஸாமி பொருமினுன். அவனுக்கு இந்த ஸீன் போது எங்கேயோ வலித்தது.

"தண்ணியை ஏம்பா இப்படி ரோடுல உடருன்? அப்பால எத்தைக் குடிப்பாங்களாம்?"

"சும்மா இருக்க மாட்டே... தரித்திரம்" கடைசியில் 'சன்'ன்னு மவன் மேலேயே விழுந்தான்.

"சொம்மணுங்காட்டியும் பூ சுத்தருண்டா" என்று மீண்டும் சொன்னுன் தொண்டை அடைத்தது.

# நினைவில் ஒரு திரைப்பாடல்



**போட்டி 3**

ஒரு திரைப்படப் பாடல் உங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டி குதூகலத்தை அதிகரித்திருக்கலாம், அல்லது சோகத்தில் ஆழ்ந்து போகச் செய்திருக்கலாம். அந்தத் திரைப் பாடல் வரிகளையும் வாழ்க்கைச் சம்பவத்தையும் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். பிரசுரமானுல் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்கு விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின் மேல் "நினைவில் ஒரு திரைப் பாடல்" என்று குறிப்பிடவும்.

**முடிவு தேதி 3.6.85**

**50 விலையுயர்ந்த வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் காத்திருக்கின்றன. ஒன்றை நிச்சயமாய் பெற்று விடும் உறுதியுடன் வாரம் தவருமல் போட்டியில் பங்கு பெறவும்.**

என் பெயர்: ........................

விலாசம்: ........................

........................

........................

# வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத்திட்டம்

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத் தலைவர்களின் படைப்பு


# விஐபி

## சேலஞ்சர்

புதிய, வடிவழகு விஐபி
சேலஞ்சர்...எல்லாம்
நிறைந்தது. கட்டுறுதியான
அலுமினியப் பட்டிகள்.
நம்பிக்கையான திருகு
பூட்டுக்கள். பக்கப் பூட்டுக்கான
பதிமானங்கள். பக்கப்
பேக்கெட்டுகள், பரந்த இடவசதி.
சுருக்கம் விழாதபடி அடக்கமிட
உதவும் உள் தடுப்புத் திரை.

கிடைத்தறியாத விலைபம்.
பக்கத்திலுள்ள விஐபி
வியாபாரியிடம் பார்வையிடுவீர்
...சேலஞ்சர்.

**மதிப்பிலே மிஞ்சமுடியாதது! ஸ்டைலிலே ஈடிணையற்றது.**




**தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள். வருங்கால
யோக வரவுகளோ மேலும் பலப்பல.**

# வாழ்வளிக்கிறார் விஜய் மர்சண்ட்

இன்று பல தொழில் வர்த்தக கம்பெனிகளில் டைரக்டராக இருக்கும் விஜய் மர்சண்ட் ஒரு காலத்தில் கிரிக்கெட்டில் மிகச் சிறந்த ஓபனிங் பாட்ஸ்மேனாக இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் ஒரு நல்ல கிரிக்கெட் வர்ணனையாளர் என்பதும் தெரிந்திருக்கும்.

ஆனால் கடந்த பல வருடங்களாக பம்பாயில் கண் பார்வையற்றவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் அவர் செய்யும் மகத்தான சேவையைப் பற்றி அநேகம் பேருக்குத் தெரிந்திருக்காது.

விஜய் மர்சண்டை அவர் அலுவலகத்தில் சந்தித்தேன். விசாலமான அறையில் அவர் உதவியாளர்களான மூன்று பெண்மணிகள் உட்கார்ந்திருந்தார்கள். வேறு பத்து பேர் தங்கள் குறைகளை விஜய் பாயிடம் (இப்படித்தான் விஜய் மர்சண்டை அன்புடன் அழைக்கிறார்கள்) சொல்லக் காத்திருந்தார்கள். அங்குள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்னை. பெரிய மேஜையின் மீது பல கடிதங்கள் குவிந்து கிடந்தன. ஒரே சமயத்தில் பலருடைய குறைகளுக்குச் சிறிதும் குழப்பமில்லாமல் தனித் தனியாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார் விஜய். உதவியாளர்களும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.



விஜய் மர்சண்ட்

• சமுதாயப் பணி — இன்றைய நாட்டம்.

• ஓபனிங் பாட்ஸ்மன் — அன்றைய ஆட்டம்.



மற்றவர்களுடன் பேசிக் கொண்டே நடு நடுவில் என் கேள்விகளுக்கும் கிரிக்கெட் காமெண்டரி சொல்லும் அதே கணீரென்ற குரலில் பதிலளிக்க ஆரம்பித்தார், விஜய் மர்செண்ட்.

''நீங்கள் செய்யும் சமூக சேவை எப்பொழுது ஆரம்பமாயிற்று?''

''இருபத்து ஐந்து வருடங்களுக்கு முன்னால்''.

''கிரிக்கெட்டில் மிகவும் நாட்டம் கொண்டிருந்த உங்களுக்கு சமூக சேவையில் ஈடுபாடு ஏன், எப்படி ஏற்பட்டது...''

''பெரிய காரணம் ஒன்றுமில்லை. ஆண்டவன் அருளால் எனக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. இதை இப்படி ஒரு உபயோகமான வழியில் செலவிடலாமே என்று தோன்றியதால் செய்கிறேன். நூற்றுக்கும் மேற்பட்ட கண்பார்வையற்றவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் என் மில்லில் (இந்துஸ்தான் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில் லிமிடெட்) வேலை வாய்ப்பளித்ததிலிருந்து தொடங்கினேன்''. (இந்த மில் இவர் தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்டது).

''விஜய் பாய், யார் யாருக்கெல்லாம் உதவி செய்கிறீர்கள்?''

''கண் பார்வையற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், காது கேளாதவர்கள், பேச முடியாதவர்கள், கான்சரால் தாக்குண்டவர்கள், தொழுநோய் மற்றும் மனநோய் உள்ளவர்கள்...'' (பட்டியல் நீண்டு கொண்டே போகிறது).

வாரத்தில் ஐந்து நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் பகல் இரண்டு மணியிலிருந்து ஆறு மணி வரை இவரை யார் வேண்டுமானாலும் சந்தித்துத் தங்கள் குறைகளைச் சொல்லலாம் (அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும்). வெளி மாநிலத்திலிருந்தும் அநேகம் பேர் விஜய் மர்சண்ட்டை சந்திக்க வருகிறார்கள்.

ஆறு மணிக்கு மேல் கிரிக்கெட் கிளப் பிற்கு போய் விடுவார் — கிரிக்கெட் பிரச்னைகளை அலசுவதற்கு.

எல்லோருடைய குறைகளையும் மிகவும் பொறுமையுடனும் கவனத்துடனும் கேட்டுக் கொள்கிறார்.

உடல் ஊனமுற்றவர்களாகவோ, வியாதியால் பிடிக்கப்பட்டவர்களாகவோ இருந்து உண்மையிலேயே பண வசதியில்லாமலிருந்தால் அத்தகையவரை பம்பாய் ''பாட்டியா ஜெனரல் ஆஸ்பத்திரி''க்கு அனுப்பி வைத்து முழு 'செக்கப்' செய்ய வைத்து பிறகு வேண்டிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறார். பலருக்கு சக்கர நாற்காலி கிடைக்க உதவி செய்கிறார். இந்த 'பாட்டியா ஜெனரல் ஆஸ்பத்திரி'க்கு இவர்தான் தலைவர்.

இது தவிர, தேசிய பார்வையற்றோர் சங்கம், உடல் ஊனமுற்றோருக்குச் சம வாய்ப்புத் தேசிய சங்கம் போன்ற பல சமூக சேவை நிறுவனங்களின் தலைவராகவும் இருக்கிறார் விஜய்.

இவர் இதுவரை உடல் ஊனமுற்ற, மற்றும் கண்பார்வையற்ற பதினைந்து ஜோடிகளுக்கு திருமணமும் நடத்தி வைத்துள்ளார்! பதினாறுவது திருமணம் (கண் பார்வையற்ற முஸ்லிம் ஜோடி) இவ்வாண்டு ஜனவரியில் இவர் மில்லிலேயே நடந்தது!

இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து கிடைக்கிறது? விஜய் மர்ச்சண்ட் பெயராலேயே ஓர் அறக்கட்டளை இயங்குகிறது. மற்றும் பல அன்பர்கள் சக்கர நாற்காலி, செயற்கை கால், கை போன்றவைகளை அன்பளிப்பாக வழங்குகிறார்கள்.

73 வயதாகும் விஜய் மர்சண்ட் கடந்த ஐந்து வருடங்களில் மூன்று ஹார்ட் அட்டாக்குகளைத் தாங்கிக் கொண்டுள்ள அதிசய மனிதர். யாருக்கும் பணமாகத் தந்து உதவி செய்வதில்லை என்பது இவர் கொள்கை. ஆனால் உடல் ஊனமுற்றவர்கள் தன்னம்பிக்கையுடன் வாழ வழி செய்து தருகிறார்.

விஜய் மர்சண்ட் படத்தை வீட்டில் மாட்டி வைத்து கடவுளைப் போல் வணங்குபவர்கள் பலர்.

—செம்பூர் சந்துரு

---

உஷார்! — டியூப்லைட் — உஷார்!

டியூப் லைட் வெளிச்சத்தில் தொடர்ந்து
வேலை பார்க்கும் மூன்று பங்கில் 1 பங்கு.
மனிதர்களுக்கு பல உடல் உபாதைகள்
தோன்றுகின்றனவாம். ஆண்களை விட
பெண்கள் இரண்டு மடங்கு பாதிக்கப்
படுகிறார்களாம். இவ்வித மின் விளக்கு
கள் பலருக்கு தலைவலி, இருமல், சளி,
கண் எரிச்சல் ஏற்பட காரணமாக உள்ள
தாம். பெண்களுக்கு குறைப் பிரசவமும்,
தோல் கேன்சரும் ஏற்படுகின்றனவாம்.
இவையாவும் நமது மின்சார சக்தி 50
HZ ல் (50 Cycles/Second) வேலை செய்
வதால் டியூப் லைட்டில் உள்ள பாஸ்பரஸ்
வெளிச்சம் ஒரு செகண்டில் 100 தடவை
கள் கண் சிமிட்டி பலருக்கு மூளையைப்
பாதித்து மிக நுண்ணிய உறுப்புக்களான
கண், தோல் இவைகளை தாக்குகிறது.
எனவே காரியாலயங்களிலும், கடை
களிலும் டியூப் லைட் வெளிச்சத்தில்
தொடர்ந்து வேலை செய்பவர்கள் சற்று
நேரமாவது இடையிடையே வெளியே
சென்று வந்தால் இந்த தாக்கும் சக்தி
கணிசமாக குறைந்து விடுமாம். இது பர்
மிங்ஹாம் பல்கலைகழகம் ஒன்றில் நடந்த
ஆராய்ச்சி வெளியீடு.

இந்த குறையை தவிர்க்க இங்கிலாந்
தில் தற்சமயம் 30000 HZ ல் வேலை செய்
யும் டியூப் லைட்டுகள் ஹம்மிங் சப்தம்
இல்லாமல், மின்சார யூனிட்டில் சிக்கன
மாகவும் உள்ளதாக தயாரிக்கப்படுகிற
தாம்.

ஆதாரம்: 'ELECTRICAL REVIEW'
தகவல்: நடேசன்.



# கல்கி

## அயல் நாட்டு சந்தா விபரம்

| | | விமானம் மூலம் | கப்பல் மூலம் |
|---|---|---|---|
| சவூதி அரேபியா, சிங்கப்பூர், ஹாங்காங், | 1 வருடம் | ரூ. 350/– | ரூ. 190/– |
| ஈரான், ஈராக், குவைத், U. A. E. | ஆறு மாதம் | ரூ. 175/– | ரூ. 95/– |
| ஜெர்மனி, இங்கிலாந்து, ஜாம்பியா, | 1 வருடம் | ரூ. 460/– | ரூ. 190/– |
| நார்வே, ஆஸ்திரேலியா, மொரீஷியஸ், ரீயூனியன், USSR | ஆறு மாதம் | ரூ. 230/– | ரூ. 95/– |
| அமெரிக்கா, கனடா, | 1 வருடம் | ரூ. 560/– | ரூ. 190/– |
| நியூஜிலந்து | ஆறு மாதம் | ரூ. 280/– | ரூ. 95/– |

மற்ற நாடுகளுக்கான சந்தா விபரங்களுக்கு:

மானேஜர், கல்கி
ரேஸ் கோர்ஸ் ரோடு,
கிண்டி, சென்னை - 600032
என்ற விலாசத்திற்கு எழுதவும்.

# தெரியுமா, ஏரோப்ளேன் செட்டியாரை?

* ''இன்று மாலை ஜவகர் மைதானத்தில் மாபெரும் காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடைபெறும் அப்போது நானே பேச வேன். திரளாக அனைவரும் வருக...'' இப்படிச் சொல்லிக் கொண்டு கழுத்தில் தமுக்கைக் கட்டித் தெருத் தெருவாக அடித்துக் கொண்டு போய்ப் பிரசாரம் செய்வாராம் பதினான்கு வயது அண்ணாமலை... பின்னால் ராஜாஜியால் 'சின்ன அண்ணாமலை' என்று அழைக்கப்பட்டவர்.

* செட்டி நாட்டில்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு எத்தனை சிறப்புக்கள்!

  கம்பராமாயணத்தை எரிக்கவும் எதிர்க்கவும் பகுத்தறிவுப் பாசறையினர் ஒரு பெருங் கிளர்ச்சியே நடத்திய தமிழ்நாட்டில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டு இந்த அளவு பெருகியுள்ள கம்பன் பேரியக்கத்துக்கு வித்திட்டது செட்டிநாடு. கம்பன் கழகங்கள் ஐம்பதுக்கு மேல் இயங்குகின்றன!

* பாரதியார் புகழையும் அவர் பாடல்களையும் பரப்பியதற்காக பாரதி நூற்றாண்டு விழாவில் தமிழக அரசு ஏ. கே. செட்டியாருக்குக் கேடயம் வழங்கிற்று. ஆனால் அவர் அதை ஏற்றுக் கொள்ளவும் விழாவில் கலந்துகொள்ளவும் மறுத்தார். அவர் சார்பில், தமிழக அரசின் செய்தி விளம்பரத் தகவல் துறை இயக்குநர் திரு. சி.என். கிருஷ்ணபாரதி ஐ. ஏ. எஸ். கேடயத்தைப் பெற்றுக் கொண்டதற்குக் கண்டனம் தெரிவித்தார்.

* செட்டி நாட்டில் 12.30 மணி என்பதை அரைமணி என்று சொல்லுவது வழக்கம். 12 மணிக்குப் பிறகு 13 மணி என்று வழங்காமல் 1 மணி என்றே எங்கும் காலம் குறிக்கப் பெறுவதால் 12 மணியோடு ஒரு கால அளவு முடிந்து விடுகிறது. மறு கால அளவு தொடங்கப் பெறுவதற்குப் பொருத்தமாக 12.30 மணியை அரை மணி என்று கூறுவர்.

* 'பாப்பா மலர்' தான் குழந்தைகளுக்கென்று தமிழில் அச்சிடப்பட்ட முதல் இதழ். காலணா விலையில் 1942—இல் இதைத் தொடங்கியவர் நேமத்தான்பட்டி முத்து நாராயணன். இதற்குப் பிறகு 'பாலர் மலர்' புதுக்கோட்டையிலிருந்து அழ. வள்ளியப்பா மேற்பார்வையில் வெளி வந்தது. சக்தி வை. கோ.வின் தம்பி ராமநியாகராசன் 'பாப்பா' என்னும் இதழை ஒன்பது நிறங்களில் அச்சிட்டு 10,000 படிகள் வரை விற்றார்.

* ஜே. ஆர். டி. டாட்டாவுக்கும் முன்னால் சொந்தமாக ஆகாய விமானம் வைத்திருந்து அதையும் தாமே ஓட்டிய பெருமைக்கு உரியவர் கானாடுகாத்தான் சா. அ. அ. அண்ணாமலை செட்டியார். தன்னுடைய சொந்த விமானத்தைத் தரையிறக்குவதற்காக, திருமயம் அருகே ஒரு சின்னஞ் சிறு ஊரில் சொந்தமாக ஒரு விமான தளமும் அமைத்துக் கொண்ட இவர் 'ஏரோப்ளேன் அண்ணாமலை செட்டியார்' என்றே அழைக்கப்பட்டார். இன்றைய குமுதம் ஆசிரியர் எஸ். ஏ. பி. யின் சித்தப்பா இவர்.

* ''நாழிச் சிறு சலங்கை
  நல்லபவன் பொன்சலங்கை
  உழக்குச் சிறுசலங்கை
  ஒசத்தி உள்ள பொன்சலங்கை
  ஆருக்கு இடுவமின்னு
  தேடித் திரிகையிலே
  எனக்கிடுங்க என்று சொல்லி
  எதிர்கொண்டு வந்தவனே...

தனக்கிடுங்க என்று சொல்லித்
தம்பி துணை ஆனவனே...''

இப்படிக் கொஞ்சிக் குதிநடை போடுகிறது செட்டி நாட்டுத் தாலாட்டுப் பாடல் ஒன்று.

* **[illegible]**
இப்படி எழுதினால் 'ஆக வரவு நீக்கிப் பற்று ரூபாய் 5, 274—15—6' என்ற ரூபாய் அணா பைசாக் கணக்கு. இப்போது பலருக்கும் புரியாத குறியீடுகள் அவை.

செட்டி நாட்டார் எழுதும் கணக்குகளில் கையாளப் பெறும் கூட்டெழுத்து முறையைத் தமிழக அரசின் கோப்புகளிலும் பயன்படுத்தி வருகிறார் மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வீ.

* செட்டி நாட்டுப் பெருமக்களுக்குப் பட்டப் பெயர் என்பது ரஸமான விஷயம். பாட்மிண்டன் ஆடிய போது ஓயாமல் 'பால் பிளீஸ்' கேட்டவர் குடும்பம் 'பாப்ளீ வீடு' ஆகிவிட்டது. பி.காம். படிப்பு அரிதாக இருந்த காலத்தில் பட்டம் பெற்ற ஒருவரின் பெயர் 'பி.காம். வீரப்பச் செட்டியார்.' ஒருவருக்குச் சொந்தமான புளியமரத்தில் கொக்குகள் அடைந்தன. இதனால் அவர் 'கொக்குப்புளி' பட்டம் பெற்றார். ஓர் ஊரில் முதல் தடவையாக ஓட்டு வீடு கட்டியவர் ஓட்டு வீட்டுக்காரர் ஆனார். புதிதாக வீடு கட்டியதால் 'புது வீட்டு நல்ல கருப்பன் செட்டியார்' ஆகிவிடுவார்.

* நல்ல தமிழ்ச் சொற்களைப் பரவலாகக் கையாள்பவர்கள் நகரத்தார்கள். சில சொற்கள் கொஞ்சம் மருவியிருந்தாலும் இனம்புரியும்படியே உள்ளன.

  கூடு — என்றால் கவர். காகித உறை.
  கை பழகுதல் — வேலையில் பயிற்சி பெறுதல்
  கைகாவல் — அவசர உதவி
  சமையல் பொறை — சமையல் கட்டு
  சதை களவாணி — வேலை பார்க்காமல் உண்டு கொழுத்திருப்பவர்
  தரிசன உண்டியல் — பார்த்த உடனே பணம் தரவேண்டிய 'டிராஃப்ட்'
  நடையன் — செருப்பு
  மேலான் — ஏஜெண்டு
  மொல்லமாறி — முல்லை மாறி, கற்பிழந்த பெண், நாணயமில்லாத வணிகர். (முல்லை, கற்புக்கு உரிய பூ என்று அகத்திணை கூறும்.)
  சிறும்பரம் — அபூர்வம், ஒவியம்;
  அடிச்சரக்கு — நல்ல சரக்கு.

* ''கீதைக்கு — புஸ்தக விலை ரூ. 1.00—க்குக் குறைத்து வைக்கவேண்டாம். தடித்த காயிதம். நேர்த்தியான அச்சு... பெரிய எழுத்து.. இட விஸ்தாரம் — இவை கீதைக்கு மட்டுமேயன்றி நாம் அச்சிடப் போகும் புஸ்தகங்கள் எல்லாவற்றுக்கும் அவசியம்...''

காரைக்குடி கானாடுகாத்தான் வயி. சு. சண்முகம் செட்டியாருக்கு 1919 நவம்பர் 15—இல் பாரதியார் தமது நூல்கள் பற்றி எழுதிய கடிதம் இது.

* 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தமிழ்ப் பண்பாட்டுக்குக் கட்டியங்கூறும் இச்சொற்றொடரை ஈன்றது செட்டிநாடு. கணியன் பூங்குன்றனார் பிறந்த பூங்குன்றம் பறம்பு நாடு. கானப் பேரெயில், ஒக்கூர் இவை — சங்ககாலச் செட்டிநாடு.

* செட்டி நாடு வரலாறு மட்டுமில்லை. தமிழகம் முழுவதின் வரலாறே இதில் இருக்கிறது என்று 'செட்டி நாடும் செந்தமிழும்' நூல் வெளியீட்டு விழாவில் பேசியவர்கள் கூறினார்கள்.

ஆசிரியர் 'சோம. லெ.'

**வெளியீடு வானதி பதிப்பகம், சென்னை—17**
**விலை ரூ. 70.00. 716+XII பக்கங்கள்.**

தொகுப்பு: **சுப்ர. பாலன்**


* புத்தகத்தின் மேலட்டை.


* செ. க. அண்ணாமலை.


* வள்ளியப்பா.


* ஆர். எம். வீ.


* கம்பனடிப்பொடி.


* சோம. லெ.

மேலட்டையில்:
**குமாரி ஜானவி**

வண்ணப்படம்:
**யோகா**



* பிரேமா பாண்டுரங்கன்.



* புலவர் கீரன்.



* முக்கூர்.

## ஸ்ரீமதி பிரேமா பாண்டுரங்கன்

சின்னக் குழந்தை என்னவோ வேண்டுமென்று அழுது அடம் பிடிக்கிறது. நாமும் அதை சமாதானப்படுத்துவதற்காக பொம்மை வாங்கித் தருகிறோம்.

அடுத்த விநாடியே குழந்தையின் அழுகை நிற்கிறது. பொம்மையை எடுத்துக் கொள்கிறது. சந்தோஷப்படுகிறது. ஆனால் பொம்மையை வாங்கிக் கொடுத்த நம்மை மறந்து விட்டுப் பொம்மையோடு ஒன்றிப் போய் விடுகிறது.

இப்படித்தான் நம்முடைய தேவையை அறிந்து அருள் புரிகிற கடவுளை நாம் மறந்து விடுகிறோம். அவர் அளித்த பலன்களை அனுபவிப்பதிலேயே மனம் ஒன்றிப் போய்விடுகிறோம்.

## புலவர் கீரன்

ராமாயணத்தில் நடந்த பட்டாபிஷேகம், பகவானுக்கு மனிதன் செய்தது. பாரதத்தில் நடந்த பட்டாபிஷேகம் மனிதனாகிய தருமனுக்கு பகவான் க்ண்ணன் செய்தது.

*   *   *   *   *

வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு 'அதர்மம் தோற்கும், தர்மம் ஜெயிக்கும்' என்று புலம்பிக் கொண்டிருந்தால் எதுவும் நடக்காது. அதர்மத்தைச் சந்திப்பதற்குத் தர்மம் மிகுந்த பலத்தோடு விளங்க வேண்டும்.

*   *   *   *   *

மேகம் கண்டு அஞ்சிய கரத்தை உடையவன் கர்ணன்' என்கிறாள் குந்திதேவி. எப்படி இது?

இரவு பகல், செல்வர் வறியர், நல்லவன் கெட்டவன். ஆடவர் பெண்கள் என்று பேதங்களில்லாமல் பொழிகிற மேகம் கூடக் கொடுக்க வேண்டும் என்று நாம் விரும்புகிற நேரங்களில் பொய்த்து விடுகிறது. ஆனால் கர்ணன்? யாராயிருந்தாலும், எந்த நேரத்திலும் தேவை என்று போனால் தந்துவிடுவான்.

*   *   *   *   *

## முக்கூர் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார்

குசேலர், கண்ணனுக்காக என்று மனைவி தந்த அவலைத் துணியில் முடிந்து கொண்டு போனார் என்று சுகப்பிரும்மம் சொல்கிறார். இதிலே ஒரு நயம்.

கிழிந்து கந்தலாகி ஆகாசம் தெரிகிற வஸ்திரத்தில் அவலை முடிய வேண்டுமானால், அவள் எவ்வளவு சிரத்தையோடு அந்தக் காரியத்தைப் பண்ணியிருக்க வேண்டும்?

*   *   *   *   *

தெய்வத்திடமும் பெரியவர்களிடமும் வெறும் கையோடு போகக் கூடாது என்பார்கள். 'வெறும் கை' என்பது என்ன?

பெரியவர்களையும் தெய்வத்தையும் தரிசிக்கப் போகும் போது கூப்பிய கரத்தோடு தான் போக வேண்டும். இல்லாவிட்டால் அது வெறும் கைதான்.

*   *   *   *   *

தெய்வ சந்நிதியில் புஷ்பத்தைச் சுமந்து நிற்பதே பெரிய அநுபவம். சுப்ரபாதம் தொடங்குவதற்கு முன்பிருந்தே 'சுமந்து மாமலர்' நிற்க வேண்டும். எதுவுமே முடியவில்லையே என்று கண்ணீர் விட்டால் கூடப் போதும் பகவானுக்கு.

*   *   *   *   *

சென்னை ஆள்வார்ப்பேட்டை வீனஸ் காலனியிலுள்ள ஆஸ்திக சமாஜத்தில் கேட்ட சொற்பொழிவுகளிலிருந்து.

தொகுப்பு :

**யெஸ்பால்.**

# யாரைக் கண்டு மேகம் அஞ்சியது?

# வித்தியாசமான சிலர்

முதலாவதாக சீனிவாசன் என்கிற பம்பாய்வாசி. இவர் நம்ம ஊர் இளைஞர்தான். படிப்பு மெட்ரிகுலேஷன். அதன்பிறகு படிக்க ஆசை இருந்தும் பணமில்லை; விவசாயம் பண்ண விருப்பமிருந்தும் வசதியில்லை. என்ன பண்ணுவது? அலுமினியக் கடை ஒன்றில் எடுபிடி வேலை செய்தார். மூனு வேளை சாப்பாடும் நூறு ரூபாயும் கிடைத்தது. வீட்டுக்குக் கணிசமாய்ப் பணம் தர முடியவில்லையே என்கிற ஏக்கம். யாரோ கொடுத்த தைரியத்தில் பம்பாய்க்குக் கிளம்பிவிட்டார். கொஞ்சநாள் வேலை இன்றி அலைந்தார். கடைசியில் மின்சார ஒயரிங் செய்கிற ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்தார்.

சீனிவாசன் சொல்கிறார்: "தினக்கூலி நாலு ரூபாய். சாப்பாட்டுச் செலவு உள்பட அத்தனையும் இதற்குள்ளாகவே. நான் சோர்வோ, சலிப்போ அடையவில்லை. ஒயரிங் வேலைக்காகச் சுவரைக் கொத்தி, ஒயர்கள் பொருத்தி மறுபடி சிமெண்ட் பூசுகிற வேலை. கொத்தும் போது கொஞ்சம் அசந்தாலும் சுத்தி விரல்களைப் பதம் பார்க்க வீங்கின விரல்களுடன் அவஸ்தைப் பட்ட நாட்கள் எத்தனையோ. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு கஷ்டப்பட்டு உழைத்தேன். ஒரு வருடத்தில் ஒயரிங் வேலைகள் பற்றி அத்தனை விவரங்களையும் நன்றாய்க் கற்றுக் கொண்டுவிட்டேன். இப்போது நானே ஒயரிங் காண்டிராக்டுகள் எடுத்து வேலை செய்கிறேன். நாலு இலக்கத்தில் வருவாய் கிடைக்கிறது. பல மாடிக் கட்டிடங்களுக்கெல்லாம் ஒயரிங் செய்து கொண்டிருக்கிறேன். துபாய்க்குப் போக ஆசை உண்டு. எக்கச் சக்கமாய்ச் சம்பாதிக்கலாமே!

"டேபிள், சேரில் உட்கார்ந்து, ஆபீஸில் வேலை செய்ய வேண்டுமென்று நான் நினைத்திருந்தால் இந்த மாதிரி நல்ல வாழ்க்கை எனக்குக் கிடைத்திருக்காது; இதை நிச்சயமாய் என்னால் சொல்ல முடியும்."

* * * * *

நாம் சந்திக்கவிருக்கும் அடுத்த நபர் திரு. ராஜாங்கம். படிப்பு எஸ். எஸ். எல். ஸி. தான். மதுரைக்காரர். அரசாங்க வேலை கிடைக்க இளைஞர்கள் படும் பாட்டைப் பார்த்து மனம் வெறுத்து எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் ரெஜிஸ்டிரேஷன் கார்டைக் கிழித்துப் போட்டவர் இவர். காலம் கனியும் என்று காத்திருந்தவருக்கு லட்டாய் இனித்தது 'சுய வேலை வாய்ப்புத் திட்ட' அறிவிப்பு!

இந்தத் திட்டத்தில் பலனடைய மனுப் போட்டார். (அதில் பட்ட கஷ்டங்கள் தனிக்கதை.) 25,000 ரூபாய் நிதி உதவுகிற அரசாங்க அனுமதிக் கடிதம் வந்த போது சந்தோஷக் கடலில் மிதந்தார். பெயிண்டிங் தொழில் செய்து வருகிறார் இப்போது. "தொழில் நல்லபடியாய் நடக்கிறது. நிம்மதியான வாழ்க்கை" என்கிறார் ராஜாங்கம்.

* * * * *

## எதிர்காலம் உங்கள் கையில்

உங்களது வாழ்க்கை அனுபவம் மற்றவர்களுக்குப் பாடமாய் — வழிகாட்டியாய் அமைந்து உதவட்டுமே" என்று கேட்டிருந்தோமில்லையா? அதற்கு வந்த கடிதங்களிலிருந்து தான் இந்த இரண்டு பேரைப் பற்றி மேலே சொன்னோம்.

* * * * *

மூன்றாவதாய், கஷ்டமான குடும்பச் சூழ்நிலையிலும், ஒரு பெண் நன்றாய்ப் படித்து, தன் காலிலேயே நிற்பது பற்றித் தெரிந்து கொள்ளலாமா?

பெண்ணின் பெயர் சுபாஷிணி. அப்பாவோ குடிகார டிரைவர். அம்மா படிக்காத இயற்றுத் தவளை. இந்தச் சூழ்நிலையில் சுபாஷிணி ஸ்கூலுக்குப் போனதே பெரிய விஷயம். இடையில், 'படித்தது போதும்' என்று சொல்லிக் குடிகார முறைப் பையனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க ஏற்பாடுகள். ஆனால் சுபாஷிணிக்கோ படிப்பே குறி. பள்ளிக்கூடத்திலும், அதன் பிறகு காலேஜிலும் அவள்தான் ஃபர்ஸ்ட். வாங்கின பரிசுகளை வைக்கக் கூட இடமில்லாத சிறிய குடியிருப்பு.

ஏழைமைச் சூழ்நிலையிலும், மற்றவர்களைப் பார்த்துத் துளியும் பொறாமைப்பட மாட்டார். படித்து முடித்த பின் தட்டில் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டருடன் அவரை யாரும் கூப்பிடவில்லை. சோர்வடையாது ஊரின் மாதர் சங்கத்தில் சேர்ந்து மற்றவர்களுக்கு பெயிண்டிங், தையல்கலை இவையெல்லாம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார். இப்போது சுபாஷிணிக்கு எல்லாச் செலவும் போக ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. ஓரளவு வசதியான வீட்டில் குடியிருக்கிறார். பாங்க் பாலன்ஸ் கணிசமாய் இருக்கிறது. குடும்பம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

இத்தனை கஷ்டப்பட்ட சுபாஷிணி இடையில் கொஞ்சம் மனசு சோர்ந்திருந்தாலும் 'குடி'யை முதல் தாரமாய் மணந்த ஒருவருக்கு இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்பட்டு, நரக வேதனைப்பட வேண்டியிருந்திருக்கும். வசதி, வாய்ப்பற்ற நிலையிலும் விடா முயற்சியுடன் துணிந்து வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வெற்றியடைந்த சுபாஷிணி ஒரு சபாஷிணிதானே! (தகவல் அனுப்பினவர் இவரது தோழி ஜே. மல்லிகா.)

* * * * *

அவ்வப்போது இதுபோன்ற சிலரை எதிர்காலம் உங்கள் கையில் பகுதியில் நாம் சந்திக்கலாம்!

எஸ். சந்திரமௌலி.

* * * * *





கண்ணன் : சிவப்புச் சாமியார் இன்று வரை சாமி சிலை வரவழைச்சு கொடுத்தார். இன்று நாத்திகம் பேசறார். என்ன ஆச்சு?

முரளி : இன்று பூஜையில் சிலை வரவழைச்ச சமயம் சாமி சிலைக்குப் பதில் 'பெரியார் சிலை' அல்லவா வந்திருக்கு.

— லலிதா செல்லப்பா

படத்தில் நமக்கு ஈடுபாடு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே ஆரம்பத்தில் கையுறை — துப்பாக்கியில் குண்டு போடுதல் — காரோட்டம் — முடிவில் டிஷ்யூம் —என்று காட்டினாலுங்கூட அப்புறம் கொஞ்ச நேரத்திற்குப் படம் வழவழ விளக்கெண்ணெய்தான்.

வழக்கறிஞருக்கு பணம் என்றால் பறக்கும் குணம். தமது முதல் மனைவியின் பணத்தை எப்படி இவர் சூறையாடப் போகிறார்? அப்புறம் இன்னொரு மனைவியை எப்படி கட்டப் போகிறார் என்று படிப்படியாகக் காட்டிக் கொண்டே போய்த் திடீரென்று கொலை, துப்பறிதல் என்று ஏகப் பரபரப்பைத் திணித்துக் கொண்டு கதை ஓடுகிறது.

காமிராவின் லென்ஸ் முன்பாக ஒரு பனிப்படலம் தடவி விட்ட மாதிரி முன்பாதியில் டல்லாகத் தெரிந்தாலும், இடைவேளைக்குப் பின்னால் வட்டியும் முதலுமாய் காமிராக்காரர் பிரபாகர் 'சபாஷ்' பட்டத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

சுலக்ஷணா இங்கே அங்கே என்று சக்கர நாற்காலியில்தான் உருளுகிறார். இருந்தாலும் அந்தக் கதறலின் அட்டகாசம்.

ஹரிபிரசாத் நாயகன். காரெக்டருக்காகவே உருவான முகம். இயல்பான நடிப்பு.

சுலக்ஷணா போய்விட்டார் என்ற திக் திக்கில் உட்கார்ந்திருக்கும் வேளையில் அவர் உயிரோடுதான் இருக்கிறார் என்று காட்டுமிடம் செமை டர்னிங் பாயின்ட் சார்! அப்படியே ஃபாரின் படப் பிரமை!

வில்சேர் சுலக்ஷணா தப்பிப்பது, விஷ பாட்டிலை எடுத்துக் கவிழ்ப்பது, பூர்ணிமாராவைத் தாக்குவது, ஏரியில் பூர்ணிமாராவின் உடல் அமுங்குவது என்று இடைவேளைக்குப் பின்னால் பரபரப்பென்றால் பரபரப்பு. அப்படி ஒரு பரபரப்பு! அதற்கேற்ற மாதிரி ஒரு ரீ—ரெகார்டிங் மியூஸிக். சரக்கு ரயிலாக ஓடத் தொடங்கிய படத்தைத் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் வேகத்துக்குக் கொண்டு போவதே பெரிய விசேஷம்தான். வெல்டன் டைரக்டர்.

பின்குறிப்பு : வெளியே வந்தவுடன் யாரோ ''தி டயக் ஜஸ்டிக்மர்டர்'' என்ற ஆங்கிலப் படத்தைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள். அதற்கும் இந்தப் படத்துக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதாக!





# கல்யாண அகதிகள்

பாலசந்தர் என்றால் ஒரு தனி தரம். இதிலும்தான்.

படத்தின் துருப்புச் சீட்டு சரிதா. அந்த ரெட்டைச் சடை அம்புலுவின் வால்தனங்கள் சுவாரசியம்.

தனக்குத்தானே லவ்லெட்டர் போட்டுக் கொள்வது சரிதாவின் நடிப்பாற்றல் காரணமாகப் புதுமெருகேறிய பழைய ஐடியா. அது வந்து சேர்ந்ததும், கையெல்லாம் சோப் நுரையுடன் பல்லில் கடித்துக் கொண்டு ரூம் ரூமாய் அலைவதும்—

கண்ணாடி முன் நின்று மூக்கு இன்னும் கொஞ்சம் நல்லா இருக்கலாம்என்று சுயவிமரிசனம்செய்வதும்—

கையில் கொண்டு வந்த மூட்டையுடனேயே ஸ்கிப்பிங் ஆடுவதும்... ரசிக்கும்படியாய் நிறையவே பண்ணியிருக்கிறார்.

அகதிகள் முகாமில் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு சோகக் கதை. பாதிக்குமேல் மிகை.

ஒய். விஜயாவிற்கு மஸண்டாய் ரோல் கொடுக்கக் கூட ஒருத்தர் இருக்கிறாரே! தங்கம்—தங்கமான பாத்திரம். நர்ஸ் டிரஸ் கச்சிதமாய்ப் பொருத்தம். அவருடைய குடிகார புருஷனாய் நாஸர் ஒரு சிறப்பான அறிமுகம்.

சரிதாவின் காதல் விவகாரம் சவசவ. ஜாதிப் பிரச்னை புதிதில்லை என்பதோடு, கல்யாணத்திற்கு முன்னாலேயே காதலன் வீட்டில் போய்த் தங்குவது போன்றவை வெகு சினிமாத்தனம்.

சரிதா முகாமுக்குத் திரும்பி வரப் போகிறார் என்று அவர் அந்த முகாமை விட்டுக் கிளம்பும்போதே யூகிக்க முடிகிறது என்றால் ஓ. ஹென்றிடைப் பாலசந்தருக்கு அது பெருமை தேடித் தருகிற விஷயமா என்ன?

சீமாவுக்குச் சிக்கனமான, சிக்கென்ற பாத்திரம். விவாகரத்து வழக்கில் தோல்வியைச் சந்தித்த க்ளையண்டிற்கு அவள் கணவனிடமிருந்து 'வாங்கித் தரும் விடுதலை வித்தியாசமானது.


'வர வேண்டும் பெண்ணே வர வேண்டும்' — பாட்டு பாடுகிற மாதிரி 'கல்யாண அகதிகள்' — பாட்டு கேட்கிற மாதிரி.

எப்பொழுதும் போல இப்படத்திலும் பாலச்சந்தர் முத்திரைகள்:

தலையாட்டும் பொம்மை. மார்க் போடும் நாயகி. அத்தனை ம.வி. திரைகளிலும் செய்தி வாசிக்கும் நாயகன். சீமா வீட்டு வாசல் போர்டுகள்... இத்யாதி.

படம் ஓடினாலும் சரி, ஓடியே போய் விட்டாலும் சரி, பாலசந்தரின் துணிச்சல் நிற்கும்.

—ஜெயமன்மதன்.



"நான் கைராசிக்காரன் என்பதுஎல்லா திருடர்களுக்கும் தெரிஞ்சுப் போச்சு!"

"ஏன்? என்ன ஆச்சு?"

"புதுசா திருட ஆரம்பிக்கற அத்தனை திருடர்களும் என் வீட்டில் தான் முதல் முதலில் திருடறாங்க. கைராசியாம், தொழில் நல்லா நடக்குதாம். என்ன செய்ய?"

— லலிதா செல்லப்பா

# ஆட்டிப் போகும்!



அப்சரஸ்

"இப்ப மணி என்னாச்சு பார்த்தீங்களா?" என்று குத்தலாக கமலம் மணியைக் கேட்டாள்.

"எட்டாரது. அதற்கென்ன?"

"ஷாப்பிங் போகணும்னு ஆறு மணியிலேந்து ரெடியா இருந்தேன்."

"நான் என்ன செய்யட்டும். ரோடிலே சினிமா ஷூட்டிங். ஒரே கும்பல். நகர வழியில்லே. நானும் நின்னுட்டேன்," என்றான் மணி.

"என்ன ஷூட்டிங்? எங்கே? யாரெல்லாம் ஆக்ட் பண்ணினா?"

"கேட்டுண்டுதான் வந்திடறேன். என்ன சினிமா?எப்ப ரிலீஸ்? என்று கேட்டுண்டு வர்றேன்" என்றான்.

"யார்னு சொல்லுங்களேன்? ஸ்நயனாவா?"

"அந்த கும்பல்லே பேசிண்டாங்க. யாரோ புது முகமாம்..."

"அப்ப கொஜ்ஜுவா இருக்கும்."

"அது யாரோ?"

"கொஜ்ஜுன்னா மூஞ்சி குண்டா இருக்கும். ரொம்ப குள்ளம்!"

"உன் லிஸ்ட்டைச் சொல்லிடு... அதிலே நீ கொடுக்கற அளவை வைத்து யார் மாதிரி இருந்ததுன்னு சொல்றேன்."

"என்ன கட்டம் ஷூட்டிங்?"

"அதான் சொல்றேனே... கச்சடா கும்பல்னு. அதுள்ளே போய் என்ன ஷூட்டிங்னு பார்க்கணுமா... எவளோ ஒருத்தி உட்கார்ந்துண்டு 'ஓ'வென்று அழறா! இதுதான் பஸ் ஸ்லேந்து எனக்குத் தெரிந்தது."

"அவ்வளவு நாழியா என்ன ஷூட்டிங்?"

"அதான் சொல்றேனே. கோடம்பாக்கத்து பாலத்திலே ஒரே கும்பல். பாலத்திலேந்து பார்த்தா ஒரு மொட்டை மாடி வீட்டிலே ஏதோ ஷூட்டிங் போல இருக்கு. பாவம்! உனக்குத் தூக்கம் கெட்டுட போறது. ஷாப்பிங் இல்லாப் போனா போறது. இதை முதல்லே தெரிந்துகொள்... ஓடு. ஓடு" என்று மணி கிண்டல் செய்தான்.

"சரிதான். இதுபோதும். இனிமேல் ஏதாவது படம் வந்தால் அந்த கட்டம் எங்கே வந்ததுன்னு பார்க்கணும்."

* * * * *

ஒரு வாரம் ஆயிற்று. கமலம் உற்சாகமாகக் காணப்பட்டாள்.

"என்ன ஒரே குஷியா இருக்கே" என்று கேட்டுக் கொண்டே மணி நுழைந்தான்.

"நீங்க அன்னிக்குப் பூர்த்தேன்னு சொன்னீங்களே, ஷூட்டிங். அது என்னவென்று தெரிந்து விட்டது."

"ஹூம்..."

"என்ன தெரியுமா? 'மொட்டை மாடி மொட்டு'ன்னு ஒருபடம்பதிவாகிக்கொண்டு இருக்குன்னு சினிமா பத்திரிகையிலே படித்துக் காட்டினேனே அதுதான்."

"ஓஹோ சரிதான்..."

"அதிலே விசேஷம் என்ன தெரியுமா? அந்த ஷூட்டிங் நடந்த வீட்டிற்கு அடுத்தாத்து மாமி எனக்குத் தெரியும். வந்திருந்தா. மொட்டை மாடியிலே ஷூட்டிங் எடுத்தாளாமே. அதற்காக இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார்களாம்! அந்த வீட்டுக்காரியின் அதிர்ஷ்டம் பாருங்கோ... நம்மாத்திலேயும் தான் மொட்டை மாடி இருக்கு. யாராவது ஷூட்டிங் எடுக்க வர்றானா?" என்று கமலம் தன் 'அதிர்ஷ்டக் கட்டை' வீட்டை நினைத்துக் கண்ணீர் வடித்தாள்.

"நீ சொல்றது ரொம்ப வாஸ்தவம் கமலம். நம்ம வீடு சினிமாவிலே வராததற்குக் காரணம் மனைத் தோஷமா இருக்கும். ஒண்ணு பண்ணலாமா கமலம்? இந்த அதிர்ஷ்டக் கட்டை வீட்டை விற்றுவிட்டு பாலத்துக்குப் பக்கத்துலே ஏதாவது வாங்கிடலாமா?"

"போதும் உங்கள் கிண்டல்.. அந்த மாமி சொன்னா. ஷூட்டிங் ஆத்து மாமிக்கு என்ன பெருமை தெரியுமா? 'மொட்டை மாடி மொட்டுலே' தன் வீடு வரப் போறதுன்னு எல்லாரிடமும் தம்பட்டம் அடித்துக் கொள்கிறாளாம்."

"ஆமாமாம். பெருமைப்பட வேண்டிய விஷயம்தான்."

"அந்த மாமிக்கு இன்னொரு அதிர்ஷ்டம் பாருங்களேன். அந்த மொட்டை மாடிக்கு ஏதோ ஒரு பெண் துணி கொடியில உலர்த்த வர மாதிரி ஒரு காட்சியாம். அதற்கு அந்த மாமியின் பெண்ணையே துணி உலர்த்த வைத்தார்களாம். பாருங்களேன், சில வீட்டுக்கு யோகம் கொடுக்கிற ராசி இருக்கிறது... வீடு மாத்திரம் இல்லே... அந்தப் பெண்ணும் துணி உலர்த்தற காட்சியிலே வர்றது..." என்று கமலம் அங்கலாய்த்துக் கொண்டாள்.

"கமலம். எனக்கு ஒண்ணு தோணறது. நம்மாத்துலே ஷூட்டிங் எடுக்க யாரையாவது சிபாரிசு பிடித்து ஏற்பாடு பண்ணிடலாம். ஆனால் நமக்கு ரெண்டும் பிள்ளையாப் போச்சு. காட்சிக்கு ஒரு பெண் வேணும்னா நமக்கு இல்லையே. நீ ஒரு பெண்ணைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தோணறது" என்று மணி கிண்டலாய்ச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே... "மாமி" என்ற குரல் கேட்டு கமலம் வாசலுக்குப் போனாள்.

"கமலம் அன்னிக்கு எங்கப் பக்கத்தாத்துல ஷூட்டிங் எடுத்தான்னு சொன்னேனே. அந்தப் படம் இன்னிக்கு ரிலீஸ்... அந்த மாமிக்கு பாஸ் வந்ததுன்னு என்னை அழைச்சுண்டு போனா...பாவம். அந்தக் காட்சியையே கட் பண்ணிட்டாளாம். வீடும் இல்லே. துணி உலர்த்தற பெண்ணும் இல்லே, அந்த மாமிக்கு ரொம்ப வருத்தம்" என்று சொல்லி விட்டுப் போனாள்.

திரும்பி வரும்போது கமலத்தின் முகத்தில் தன் வீட்டை அதிர்ஷ்டக்கட்டையாக்கிய பாலத்து வீடு சினிமாவில் வராததில் பரம திருப்தி பளிச்சிட்டது.

விஷயத்தை ரிலே செய்வதற்கு முன் 'காதிலே விழுந்தது' என்று முத்தாய்ப்பு வைத்தான் மணி.



* ஜெ. முகமது ஃபாரூக், நெல்லிக்குப்பம்.

? புதுக்கவிதைக்கு விதை நட்டவர்களுள் முதன்மையாக யாரைக் குறிப்பிடலாம்?

! மகாகவி பாரதி; அவருக்கும் மூல விதை — வால்ட் விட்மன்.

* கே. ஜி. எஸ்ப். பழனிச்சாமி, பெங்களூர்.

? எழுத்துத் துறையின் பலம் என்ன, பலவீனம் என்ன?

! பலம்: இன்றுள்ள சுதந்திரமும் ஏராளமான பத்திரிகைகள் இருப்பதால் பெருகியுள்ள வாய்ப்புக்களும். பலவீனம்: அகம்பாவம் ஒரு புறம், பிராபல்யத்துக்காகவும் பணத்துக்காகவும் எழுத்தை அடிமைப்படுத்துதல் மறுபுறம்.

* எம். ராஜேந்திரன், வால்குடி.

? ஜெயலலிதாவைப் பற்றி கட்சியிலுள்ள யாரும் எதுவும் பேசக்கூடாது; எழுதக்கூடாது என்று எம். ஜி. ஆர். அறிவித்துள்ளாரே?

! அதுதானே; பத்திரிகைகளில் பரபரப்பே இல்லாமல் செய்து விட்டாரே — பதில் நெ. 1.

# கலைஞர் எடுத்த முடிவு எப்படி?



• ஒரே துள்ளல்!

ஒரு முறை அறிவித்து போதிய பலன் கிட்டாமல் போக இரண்டாவது முறை அறிவிக்க நேர்ந்ததின் மூலம் கட்சி அவரது கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல்திமிர முயல்கிறது என்பதை நிரூபித்துள்ளார் — பதில் நெ. 2.

* எஸ். சம்பத்குமார், சென்னை—93.

? இலங்கைப் பிரச்னையில் கலைஞர் எடுத்த முடிவு எப்படி?

! ராஜீவ் இவ்விஷயத்தில் ஒரே தூக்கம்; கலைஞரோ ஒரே துள்ளல். நமக்கு இரண்டுமே உடன்பாடல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட வழிகள் உள்ளன. ராஜதந்திரம் தேவை.

* மு. மைனுதீன், சாத்தூர்.

? வைகை ஆற்றில் அழகர் இறங்குவதைப் பார்த்து ரசித்ததுண்டா?

! "உண்டு, ஃபோட்டோவில்" என்றால் நீங்கள் திருப்தி அடைய மாட்டீர்களோ என்பதால் நேரில்சென்றுவந்தவரைக்கேட்டேன். "தண்ணீர் இல்லாத வைகையில் பார்த்ததெல்லாம் கடைகளும், தலைகளும்தான்; அந்தக் கூட்டத்தில் அழகர் எங்கே கண்ணில் பட்டார்?" என்றார். ஆக, அவரும் என் கேஸ்தான்!

* எஸ். பிரபா, காரைக்குடி.

? கம்யூனிஸ நாடுகளில் லஞ்சப் பேய் இராதா?

! லஞ்சம் உண்டு. ஆனால் அதன் பேய்த் தாண்டவம் கிடையாது. அங்கே அது ஒரு வாழ்க்கை முறையாகவே ஆகிவிடவில்லை. பூரண சுதந்திர ஜனநாயகமும் இல்லாத, சகலமும் அரசின் கையில் என்ற கம்யூனிஸமும் இல்லாத, நம்முடையது போன்ற ஒரு இரண்டுங்கெட்டான் கொள்கை நாடுகளில் தான் இப்படி லஞ்சப் பேய் தாண்டவமாடும்.

* இரா. சுவாமிநாதன், சீர்காழி.

? கேள்வி கேட்பது எளிதா? பதில் சொல்வது எளிதா?

! வாரந்தோறும் நல்ல கேள்விகளைப் பொறுக்கி எடுக்க நான் படும் அவஸ்தையைப் பார்த்தால் கேள்வி கேட்பது கடினம் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அதே சமயம் 'அதி புத்திசாலியான ஒரு மனிதன் கூட பதில் கூறத் திணறுகிற கேள்விகளை எந்த முட்டாளும் கேட்க முடியும்' என்ற நேருஜியின் வாக்கு நினைவுக்கு வருகிறது! எனவே பதில் கூறுவதும் சிரமம்தான்.

* பி. ராமகிருஷ்ணன், மேலகிருஷ்ணன் புதூர்.

? தமிழ் மொழி எவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது?

! அதை வளர்ச்சி அடைய யார் அனுமதிக்கிறார்கள்? ஆங்கில விஞ்ஞானச் சொற்களை அப்படி அப்படியே எடுத்துக் கொண்டு ராக்கெட், டிஜிடால், சிப், ஃப்ரீவீல், கார்புரேட்டர், ஆக்ஸிஜன், அப்பெண்டிக்ஸ், ஸ்லேட் காலிப்பர், பிராஸிகியூஷன்; பீனல் கோட் என்றெல்லாம் பேசவும் எழுதவும் பாடம் போதிக்கவும் தயாரானாலொழிய

தமிழ் வளராது. ஆங்கிலமே இப்படி பிற மொழி சொற்களை ஏற்று வளர்ந்ததுதான். ஆனால் தூய தமிழ் உபாசகர்கள் இதை ஒத்துக் கொள்ளாது அகராதிகள் தயாரிக்கிறார்கள். கலைச் சொல்லாக்கம் பண்ணுகிறார்கள். மொழியின் வளர்ச்சி என்பது அகராதி தயாரிப்பதில் இல்லை. பல்வேறு துறைகளைச் சேர்ந்த விஷயங்களைப் புரிந்து கொள்ளவும் புரிய வைக்கவும் எந்த அளவுக்குக் கருவியாக அது பயன்படுகிறது என்பதுதான் மொழி வளர்ச்சியின் அளவுகோல்.

* லலிதா ஸ்ரீனிவாசன், சென்னை—4.

**? ரேஸ் கோர்ஸ் சாலையில் இருக்கும் உமக்கும் ரேஸுக்கும் சம்பந்தம் உண்டா?**

! ஊஹூம். குதிரை ரேஸிலும் தொடர்பு கிடையாது. பத்திரிகைகளிடையே நடக்கும் அநாகரிகக் காகித ரேஸிலும் சம்பந்தம் கிடையாது.

* வி. ரவிக்குமார், லால்குடி.

**? கவிஞர் அப்துல் ரகுமானைப் பற்றி....?**

! வாணியம்பாடி வட்டாரத்தில் ஆர்பாட்டமில்லாத கவிதைப் பணியாற்றி வருகிறார். இஸ்லாமியக் கல்லூரி மாணவர்கள் பங்கு கொள்ளும் கவியரங்குகள் இரவு பத்து மணிக்குத் தொடங்கி விடிய விடிய நடக்குமாம். முஷைரா பாணியில் அப்துல் ரஹ்மானும் நண்பர்களும் கவிராத்திரி நடத்துவார்கள். மஷ்ர் என்ற தலைப்பில் வெளிவரும் கல்லூரி ஆண்டு மலரில் அப்துல் ரஹ்மானுல் பட்டை தீட்டப் பெற்ற பல இளம் கவிஞர்களின் புதுக்கவிதைகள் இடம் பெறும். மாதிரிக்கு ஒன்று:

ஸ்டெதாஸ்கோப்

மருத்துவர்களே!
இது எப்படி?
சுருக்கு
உங்கள் கழுத்தில்?
சாவதோ நோயாளிகள்!

— க. சின்னதுரை




* ஆர். அப்துல் சலாம், திருச்சி—20.

**? விடுதலைப் புலிகளுடன் உயிரைப் பணயம் வைத்துச் சென்று சிங்களக் கடற்படையைச் சந்தித்த 'வீக்' பத்திரிகை நிருபர் பகவான் சிங் பற்றி....?**


! முதலில் ஒரு பெருமூச்சு; அப்புறம் இங்குள்ள ஏஸி அறை எழுத்தாளர்களுக்கும் கிசுகிசுவிலேயே காலத்தை ஓட்டும் அதைரிய எழுத்தாளர்களுக்கும் பரபரப்பு என்ற பெயரில் மன விகாரங்களை விவரிக்கிற கொக்கோக எழுத்தாளர்களுக்கும் கொஞ்சமாவது சூடு சுரணை பிறக்காதா என்றொரு நப்பாசை.

* பொன் நிலவன், கோணபட்டு.

**? தமிழ் நாட்டில் இப்போது எழுதப்படும் எந்த இலக்கியமும் காலங்கடந்து நிற்கப் போவதில்லை என்று உஷா சுப்பிரமணியம் கூறியிருக்கிறாரே....?**

! நிஜமாகவா? அப்படியா கூறியிருக்கிறார் திருமதி உஷா? அவ்வளவு தன்னம்பிக்கை இல்லாதவரா அவர்!

* ரூ 10 பரிசு பெறுபவர்:
**பி. ராமகிருஷ்ணன்,**
**மேலகிருஷ்ணன் புதூர்,**
**பள்ளம்—629 601.**
**குமரி மாவட்டம்.**



# மாணவர் பக்கங்கள்

அப்போது அவருக்கு வயது முப்பத்து மூன்று. 1909 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், நீதி மன்றத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவனுக்காக வாதாடிக் கொண்டிருந்தார் அவர். அச் சமயம் அவருக்கு ஒரு தந்தி வந்தது. தந்தி யில் மனைவி இறந்து விட்டதாக செய்தி இருந்தது. ஒரு கணம் திடுக்கிட்டவர், பிறகு வழக்கு விசாரணைகளில் தொடர்ந்து நீதி மன்றம் கலையும் வரை ஈடுபட்டார். மன அமைதியை இழக்காமல், தன் துய ரத்தை வெளியே காட்டாமல், உறுதியுடன் கடமையில் கண்ணாக இருந்த இந்த மாமனி தர் யார் தெரியுமா?

இந்தியாவின் இரும்பு மனிதர், சர்தார் வல்லபாய் படேல்.

— ஆர். நடராஜ கண்ணன்,
பி. எஸ். ஸி. இறுதியாண்டு
(பௌதிகம்)
அரசு ஆடவர் கல்லூரி,
கும்பகோணம்—612 001.






'ஒரு நண்பனைப் பெறுவதற்கு இருக் கும் ஒரே வழி, ஒரு நண்பனாய் இருப்பது தான்' — எமெர்சன்.

'உன்னுடைய தவறுகளையும், முட்டாள் தனமான செய்கைகளையும் உனக்குச் சுட்டிக் காட்டுபவனே உண்மை நண்பன்' — ஸ்மித்.

'நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நிதா னம் வேண்டும். மாற்றுவதில் அதைவிட அதிக நிதானம் வேண்டும்'. — ஃப்ராங் க்ளின்.

'நம்மால் சகோதரனில்லாமல் வாழ முடியும். ஆனால் நண்பனில்லாமல் வாழ முடியாது' — ஜெர்மானியப் பழமொழி.

''உண்மை நட்பு என்பது ஆரோக்கிய மான உடல் நிலையைப் போன்றது' — காட்டன்.

—பி. அருள்மணி,
பி. இ. முதலாண்டு (போக்குவரத்து),
பி. எம். எஸ். பொறி இயல் கல்லூரி,
நந்திக் கோயில் தெரு,
பங்களூர்—560019.


ரயில்வே அதிகாரி: "ரயிலே கவிழ்க்க சதி நடந்திருக்குன்னு எப்படி சொல்றீங்க?"

ரயில் ஓட்டுனர்: "ரயில் தண்டவாளத் திலே வாழைப் பழத்தோல் கிடந்துதே!"

வலங்கை ஜி. ராஜசேகர்,
இ. பி. ஸி. இரண்டாம் ஆண்டு
அரசு ஓவியக் கல்லூரி,
கும்பகோணம்—612 002.



சுமை



பறக்க முடியாத போது
சிறகுகளும் சுமைகளே!
உறங்க முடியாத போது
இமைகளும் சுமைகளே!
காட்ட முடியாத போது அன்பும்
இதயத்தின் சுமைகளே!

— என். விக்னேஷ்
—பி. ஏ. முதலாண்டு (ஆங்கில இலக் கியம்),
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம்.

முனைப்பு

முப்பது நிமிஷம்
தேர்வு எழுதப்
பொறுக்காதவன்
மூன்று மணி
நேரமாய்க் கடிதம்
எழுதிக் கொண்டிருக்கிறான்
காதலிக்கு!

— எஸ். மாரியப்பன்
அறிமுக நிலை
மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்
(அஞ்சல்)
நயினாரகரம் — 627820.



போதும்.

போதுமென்ற மனமே
பொன் செய்யும் மருந்தாம்,
என் அன்பே,
உன் பார்வை
என் மீது
தினமும் பட்டால்
அதுவே போதும்.


சேமிப்பு.

என் அன்பே,
சேமிப்பு
நல்ல பழக்கமாம்.
நான்
உன் நினைவுகளை
சேமித்து வைத்துள்ளேன்.

அருண், (கதி. அருணாசலம்,
II, எம். ஏ. பொருளியல்,
ஈரோடு கலைக்கல்லூரி,
ஈரோடு.



நாங்களும் நீங்களும்



சிபாரிசு சிம்னியில்
சிறைப்பட்டுப் போன
வேலை ஒளியை
விடிய விடியத் தேடி
அதன் அகங்கார வெப்பத்தில்
வெந்து போன — அபாக்கிய
விட்டிற் பூச்சிகளே
உங்கள்
காலடிச் சுவடுகளை
தேடித் தொடர்ந்து
வரும்
நம்பிக்கை
மின் மினிகள்
நாங்கள்.

—தரணிதாசன்,
முதலாண்டு தாவரவியல், இளம் அறிவியல்,
அரசினர் கலைக்கல்லூரி,
கோவை—18.



நிருபர்: ஏன் இதற்குள்ளே திருமணம் செய்து கொள்கிறீர்கள்? பட சான்ஸ் குறைந்து விட்டதா?

நடிகை: "இல்லை, 'டைவர்ஸ்' பண்ணணும் போல ஆசையா இருக்கு".

—எஸ். சிங்காரவேலு,
பி. எஸ். ஸி. கணிதம், இரண்டாம் வருடம்,
டி. ஆர். பி. ஸி. ஸி. ஸி. இந்துக்கல்லூரி,
பட்டாபிராம், சென்னை—72.

# ராமனுக்கு ஏற்ற லக்ஷ்மணன்!



வே. லக்ஷ்மணன்

அமரர் "கல்கி" அவர்களுக்கு ஜோஸியத்தில் அவ்வளவாக நம்பிக்கை கிடையாது.

ஆனால் ஜோதிடத்தில் நம்பிக்கையற்ற "கல்கி" அவர்களே ஜோதிடம் சொன்னார் என்றால் வியப்பாயிருக்கும்! அதுவும், ஒரு ஜோதிடருக்கே ஜோஸ்யம் சொன்னார் என்றால் வியப்பு இரட்டிப்பாகும்!

அந்த ஜோஸியர் வித்வான் வே. லக்ஷ்மணன்!

"பால ஜோதிடர்" என்று பதினாறு வயதிலேயே அழைக்கப் பெற்ற வித்வான் வே. லக்ஷ்மணன், முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் "கல்கி" அவர்களைச் சந்தித்தபோது "கல்கி", அந்த ஆண்டு தீபாவளி மலரைத் தயாரிக்கும் பொறுப்பை அவரிடம் விட்டார்.

"என்ன இப்படி செய்து விட்டீர்கள்?" அன்று கல்கி காரியாலய சகாக்கள் பலரே அவரைக் கேட்டனர். 'இவ்வளவு பெரிய பொறுப்பை தனி நபரிடம், அதுவும் பழகி அறியாத,முன் அனுபவம் இல்லாத ஒருவரிடம் தருவதா?' என்று அவர்களுக்குச் சந்தேகம்.

"கவலைப்பட வேண்டாம். லக்ஷ்மணன் சிறப்பாகத் தம் பணியை நிறைவேற்றுவார்; நன்கு முன்னுக்கு வரக் கூடியவர்; எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றார், "கல்கி". அவர் வாக்கு நூற்றுக்கு நூறு பலித்தது!

வித்வான் வே. லக்ஷ்மணன், வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து இன்று மிகப் பிரபலமாகியிருக்கிறார். "பால ஜோதிடம்" பத்திரிகை ஆசிரியராக விளங்குகிறார். அண்மையில் மணி விழா கண்டு ஏராளமான அன்பர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றார்.

அமுத சுரபியில் சில காலம் ஆசிரியராய் இருந்த அனுபவத்துடன் கல்கி தீபாவளி மலரை 1950ல் தயாரித்த லக்ஷ்மணனுக்கு அதுவே வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அடுத்த ஆண்டில் அவர் திரை உலகில் புகுந்தார். சீக்கிரமே எம். ஜி. ஆர். அவர்களின் பார்வையில்பட்டு அவரது நிறுவனத்திலேயே கதை இலாக்காவில் பணியாற்றினார். அன்று முதல் எத்தனையோ பல திரைப்படங்களில் அவரது ஆற்றல் பளிச்சிட்டு வெற்றிகளுக்கு வழி வகுத்திருக்கிறது. இதே நேரத்தில் எம். ஜி. ஆர். அவர்களுடன் அவர் கொண்ட தொடர்பு ஆழ்ந்த நட்பாகவும் பரிமளித்தது.

சினிமா துறைக்குச் சென்றாலும் சிறுகதைகள், நாவல்கள் என்று நிறையவே எழுதி வந்தார் வித்வான். ஜோதிட நூல்களும் பல.

லக்ஷ்மணன் அவர்களின் மணி விழாவை அண்மையில் மூன்று அமைச்சர்கள் முன்னின்று நடத்தி வைத்தார்கள். மானசீகமாக வந்திருந்த முதல்வரையும் சேர்த்தால் நாலு! அழைப்பிதழில் போட்டபடி வரத் தவறிய அமைச்சர்களும் வந்திருந்தால் ஆறு!

மாலை ஆறரை மணிக்கு ஆரம்பித்து இரவு மணி பத்தரை ஆன பிறகும் வித்வான் புகழ் பாடி முடியவில்லை. ஒருவர் பின் ஒருவராகப் பலர் பேசிக் கொண்டேயிருந்தனர். அன்று பாராட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு நாடகம் வேறு நடப்பதாக இருந்தது. கலைஞர்கள் மூன்று மணியிலிருந்தே "மேக் அப்"புடன் நின்று கொண்டிருந்தனர். கடைசியில் வேறு வழியில்லாது 'நாடகம் இன்னொரு நாள் நடக்கும்' என்று அறிவித்து விட்டார் மணியன்!

"இவ்வளவு நேரம் ஆகும் என்று யாரும் ஜோஸியம் சொல்லாமலிருந்ததே நல்லதாயிற்று. சொல்லியிருந்தால் வரத் தயங்கியிருப்பேன்" என்று நண்பர் கிருஷ்ணசாமியிடம் கூறினேன். வழக்கறிஞர் கிருஷ்ணசாமி "இதற்கு ஜோஸியம் எதற்கு? வித்வானின் ஈர்ப்புச் சக்திதான் தெரிந்த விஷயமாயிற்றே" என்றார். வாஸ்தவமான வார்த்தை.

இந்த அளவுக்கு வித்வான் பலரது அன்பைப் பெற்றிருக்கிறார் என்றால் முக்கிய காரணம் அவர் பிறரிடம் காட்டும் அன்புதான். அமைச்சர் ஆர். எம். வி. குறிப்பிட்டது போல் வித்வான் தம்மைப் பற்றி நினைக்காமல் பிறருக்கு எவ்வாறு உதவலாம் என்றே யோசித்தபடியிருப்பார். இந்த அன்புதான் அவருக்குப் பிறரின் அன்பைப் பெற்றளிக்கிறது.

பூமாலைகளும் புகழ் மாலைகளும், பொன்னாடைகளும் கடைசியாக பண முடிப்பும் குறைவின்றிப் பெற்றுக் கொண்டேயிருந்தார் பால ஜோதிடர். இவை எல்லாவற்றையும் விடப் பெரும் பாக்கியம் முதல்வர் எம். ஜி. ஆரின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரராக அவர் விளங்குவதுதான்.

அந்த ராமச்சந்திரனுக்கு ஏற்ற லக்ஷ்மணனாக இவர் என்றென்றும் விளங்கி வர வாழ்த்துவோம்.

— கி. ராஜேந்திரன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

EGISTERED No. M. 4392
egistered as a Newspaper in Sri Lanka

